February -2019 | Volume-5 | issue-53

# காட்டாறு


அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

பிப்ரவரி - 2019 பருவம் - 5 புனல் - 53 தனிச்சுற்று நன்கொடை ரூ 25

for private circulation only



## தாய்மொழி - சிந்தனை மொழி: கற்பிதங்கள்





# பெரியார் பார்வையில் காதலர் தினம்

பழனி ஜாக்குலின்,
திராவிடன்,
ஜவஹர்

**இந்தக் கட்டுரையை எழுதியவர்கள் மூன்று தோழர்கள். தோழர் திராவிடன் மருத்துவக் கல்லூரி மாணவர். தோழர்கள் ஜாக்குலின், ஜவஹர் இருவரும் வளர்இளம் பருவ மாணவர்களுக்குப் பள்ளியிலும் வீட்டிலும் பாடம் நடத்துபவர்கள். ஏறத்தாழ 30 ஆண்டுகளாகச் சமூகக் களத்திற்கு, மாணவ, மாணவியரைத் தயாரித்து அனுப்புவர்கள். பல தலை முறை வளர்இளம் பருவத்தினரோடு உரையாடும் வாய்ப்புப் பெற்றவர்கள் என்பதால் இம்முவரும் இணைந்து இக்கட்டுரையை எழுதக் கேட்டிருந்தோம். விருப்பு, வெறுப்பு, சார்பு இல்லாமல் காதலை அணுகியுள்ளது இக்கட்டுரை.**

'காதல்' இந்த வார்த்தையை வயதானவர்கள் கேட்டாலும் 'இளமை திரும்புதே' எனும் பாடல் இரகசியமாகச் செவிகளில் ஒலிக்கும். அட எந்த வயதினராயினும் 'காதல்' என்ற வார்த்தையைக் கேட்டவுடன் சின்னப்புன்னகை இதழோரம் வந்து போகும். அப்படியானால் காதல் ஒரு அதீத சக்தி வாய்ந்த, புனிதமான, மந்திரத்தன்மையுள்ள வார்த்தையா? இயற்கைக்கு மாறாக ஒரு முறைதான் காதல் வருமா? அல்லது ஒரே ஒருவரை மட்டும்தான் காதலிக்க வேண்டுமா?

இல்லை என்பதே உண்மை. பெண்ணைப் பார்த்தவுடன் ஆணுக்கும், ஆணைப் பார்த்தவுடன் பெண்ணுக்கும் ஏற்படும் எதிர்பால் ஈர்ப்பு உணர்ச்சி என்பது இயற்கையானது. அதுவும் பெண்ணையும் ஆணையும் சமமாக வைக்காத நம் சமூகத்தில் அதுவும் பெண்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவைகளோடு வெட்கி நாணி பெரும்பாலும் ஆண்களிடம் விலகி நிற்பதாலும் இந்த ஈர்ப்பு இன்னும் அதிகமாகவே உள்ளது. இந்த ஈர்ப்புக்கு ஒரு சமூக வரையறை வைக்கும்போதுதான் காதல் எனும் விசயம் வருகிறது. சரி இந்த ஈர்ப்பு உயிரினங்களின் தேவையா? என்பதை சற்று பார்ப்போம்

முட்டையிலிருந்து கோழியா? கோழியிலிருந்து முட்டையா? என்ற கேள்வியை நாம் கேட்டிருப்போம். இக்கேள்விக்கு கோழியிலிருந்தே விடை காண முயற்சி செய்து பதில் கிடைக்காமல் இருப்போம். ஆனால் அறிவியல் இதற்கான பதிலை ஏற்கனவே தந்தது மட்டுமல்லாமல் அந்தப் பதிலில் தான் பரிணாம வளர்ச்சியையும் விளக்கியிருக்கும். அதாவது முட்டையிலிருந்துதான் எல்லா உயிரினங்களும் உருவானது. அந்த முட்டையும் பெண்தான்.

முதன் முதலாக, பரிணாம வளர்ச்சியில் பெண் எனும் பாலினம் மட்டுமே இருந்தது. அதிலிருந்தே இனப்பெருக்கம் செய்து கொண்டது. இரண்டாகப் பிரிதல் என்பதற்கான உதாரணம் அமீபா இரண்டாகப் பிரிதல் போன்று. அமீபாவாகவே உயிரினங்களைக் கற்பனை செய்யக்கூடாது.

அதனை அடுத்து பல கட்டப் பரிணாம வளர்ச்சி அடைந்த உயிரினங்களிலும் இது நடந்தது. அதற்கு இன்னொரு இணை தேவையில்லை. இதன் காரணமாக எல்லா உயிரினங்களிலும் ஒரே மாதிரியான குரோம்சோம்கள் அதாவது தாயைப்போன்ற குரோம்சோம்கள் இருக்கும், குட்டியும் தாயைப் போன்றே இருக்கும். இதன் காரணமாக ஒரு கிருமி தாயைத் தாக்குவதும் அதன் பிறகு குட்டிகளைத் தாக்குவதும் அக்கிருமிக்கு எளிதாக இருந்தது. இனங்கள் அழியும் நிலைக்குச் செல்ல வாய்ப்புகள் அதிகரித்தன.

இதைத் தவிர்க்க ஆண் உயிரினம் எனும் பாலினத்தேவையை அதாவது மாறுபட்ட குரோமொசோம்களுடைய அல்லது ஜீன்களுடைய ஆண் எனும் பாலினம் பரிணாம வளர்ச்சியில் தேவை கருதி உருவானது. அதாவது ஆண் உயிரினம் எனும் பாலினம் உருவானதே ஒரு குறிப்பிட்ட வகையான ஜீனை கிருமிகளிடமிருந்து ஒளித்து

வைக்க ஏற்படுத்திக்கொண்ட பரிணாம வளர்ச்சியின் முக்கிய கட்டம். இதையும் செய்ததே பெண் உயிரினம்தான்.

Sexual Reproduction ன் போது அந்த ஒளித்து வைத்த ஜீனை ஆண் உயிரினத்தின் இனப்பெருக்க Fluid (மனித இனத்தில் Sperm போல) மூலம் எடுத்துக் கொள்வதே பெண் பாலினத்தின் வேலை. இப்படி பல்வேறு வகையான ஜீன்கள் உருவாகும் நிகழ் தகவினால் உயிரினங்களின் பண்புகள் பல்வேறாகி உயிரினங்கள் காக்கப்பட்டன. உயிரினங்கள் இதுபோன்ற இனப்பெருக்கத்தால் தம்மைக் காத்துக் கொண்டன.

### காதலுக்கு அடிப்படை

இந்த இனப்பெருக்கம், இனப்பாதுகாப்பு எனும் அடிப்படையில்தான் பெண் ஆணைத் தேர்ந் தெடுப்பதும், ஆண் பெண்ணைத் தேர்ந்தெடுப்பதும். பெண் பிள்ளைப்பேறு, நிர்வாகம் என்றிருந்ததால் ஆணுக்கு வேட்டையாடுதல், உணவு தேடுதல் என்பது ஒதுக்கப்பட்டது. இதன் அடிப்படை யிலேயே பெண் ஆணை வலிமையானவனாகத் தேர்ந்தெடுத்தாள். இதன் இன்னொரு அடிப்படை வலிமையானவனிடமே வலிமையான ஜீன் இருக்கும் என்பது.

இதில் ஆண் தன்னை பெண்ணிடம் வலிமை யானவனாக நிரூபித்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் இருந்ததாலேயே உடல் வலிமையைக் காட்டும் கலைகள் பிறந்தன. எதிர்ப் பாலினம் இல்லாத உலகத்தில் கலைகள் இருக்க வேண்டிய தேவை இல்லை. அதாவது இனப்பெருக்கத் தேவை இல்லாத உலகில் கலைகள் இருக்காது. எனவே எதிர்ப்பாலின ஈர்ப்பு என்பது இயற்கையானதே. இந்த ஈர்ப்பே காதல் எனும் காவிய வார்த்தைக்கு அடிப்படை.

சரி ஒரு இயற்கையான விசயம் இயல்பாக அல்லது இயற்கையாகத்தான் நம்மிடம் வந்தடைகிறதா? அல்லது நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ திணிக்கப்படுகிறதா? அது எப்படி ஒரு இயற்கையான விசயம் திணிக்கப்பட முடியும்? அதற்கு முன் சில விசயங்களைத் தெரிந்து கொள்வோம். ‘காதல்’ எனும் வார்த்தை நம் குழந்தைகளின் காதுகளில் எந்த வயதில் அல்லது எந்த வகுப்புப் படிக்கும்போது விழுகிறது? எந்த வயதில் ‘காதல்’ என்ற சொல்லின் ஆதிக்கம் பெருகுகிறது? அதன் விளைவுகள் என்ன? என்பதைப் பார்ப்போம்.

### கல்விக்குக் கேடாகும் காதல்

நாம் கேட்டவரையில் 'காதல்' எனும் சொல் அதன் பொருளிலேயே அதாவது கற்புள்ள எனும் பொருளிலேயே 4 ஆம் வகுப்பிலேயே தெரிந்து விடுகிறது. அதாவது 7 வயதிலிருந்து 8 வயதுக்குள். காதலை உணரத்தலைப்படும் வயது 11 அல்லது 12 அதாவது 7ஆம் வகுப்பு படிக்கும்போதே. தனது 13 அல்லது 14 வயதிலேயே காதலிக்கத் தலைப் படுகின்றனர். அதாவது 9 ஆம் வகுப்பு அல்லது 10 ஆம் வகுப்பு படிக்கும்போது. +1, +2 மாணவர்களில் 40% பேருக்கு இது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒரு கௌரவப் பிரச்சனை யாகவே உள்ளது.

இதில் மோசமான விசயம் என்னவென்றால் இது ஏதோ சைட் அடித்தான்(ள்) சென்றான்(ள்) என்கிற வகையில் இல்லாமல் இவர்கள் சொல்லும் காதல் ஒரு பாரம்பரிய, அதாவது ஆணுக்குக் கட்டுப்பட்ட காதல் என்பதாகவே உள்ளது. அதுவும் 9,10 படிக்கும் மாணவரிடையே.

இவர்களிடம் இந்தக் காதல் உணர்ச்சி தங்களது படிப்புக்கு இடைஞ்சலாக உள்ளதா என்ற கேள்விக்கு மிகப் பெரும்பான்மையான மாணவர் களின் பதில் “ஆம்” என்பதே. இந்தக் காதலை எதன் வழியாக அறிந்து கொண்டீர்கள் என்ற கேள்விக்கு பெரும்பாலும் சினிமாக்களாலும் பின் வீட்டில் பார்க்கப்படும் டி.வி.சீரியல்களாலும் அறிந்து கொண்டதாகக் கூறுகின்றனர்.

இது அல்லாமல் பெண் குழந்தைகளுக்கு காதல் மீது ஈர்ப்பு வருவதன் அடிப்படை பெண் பருவமடைந்த பின் ‘பூப்புனித நன்னீராட்டு விழா’ என்ற பெயரில் வைக்கப்படும் விழாவும்தான். இவ்விழாவிற்குப் பின் பெரும்பாலான கிராமத்து, சிறு நகரத்துக் குழந்தைகளுக்கு தாம் ஒரு பெண்ணாகிவிட்ட மன நிலைக்கு உள்ளாகின்றனர்.

இவர்கள் இதற்குப் பிறகு ‘காதல்’ என்பதில் அதிகம் வீழ்கின்றனர். இது மிகப் பெரும்பாலும் கிராமத்துக் குழந்தைகளின் வாழ்வில், கல்வியில் பெரும் பின்னடைவை ஏற்படுத்துகின்றன. **இந்தக் கிராமத்துக் குழந்தைகளில் மிகப் பெரும்பாலான குழந்தைகள் தாழ்த்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டக் குழந்தைகளே என்பது சமூக சிந்தனை உள்ள நமக்கு மிக வேதனையான ஒன்று.**

இந்த சினிமாத்தனமான, பிற்போக்குத் தனமான, நட்பில்லாத காதலை நம் குழந்தைகள் அறியும்போது உண்மையில் குழப்பமடைகின்றனர். தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாகின்றனர். கவனச் சிதறலுக்கு உள்ளாகின்றனர். அதிலும் பெண் குழந்தைகளுக்கு அழகுணர்ச்சி, “அடியே... அவன் உன்னைத்தான் பார்க்கிறான்” போன்ற விசயங்கள் கல்வியில் கவனம் செலுத்த இயலாமல் போகின்றது. அதே சமயம், இதே காதல் என்கிற விசயத்தில் நன்றாகப் படிக்கும் என்றழைக்கப்படும் மாணவர்களும் வீழ்கின்றனர். ஆனால் அவர்களிடம் கேட்கும்போது அவர்களின் முதல் சாய்ஸ் படிப்பாகவே உள்ளது.

கல்லூரி மாணவர்களிடையே இரு வகையான மாணவர்கள். ஒன்று Goal Oriented மாணவர்கள். இவர்கள் தங்களது தனித்தகுதியை வளர்த்துக் கொண்டுதான் இந்தச் சமூகத்தில் யார் என்பதை மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ

*அறிவித்துவிட்டு காதலை இரண்டாமிடத்தில் வைப்பவர்கள். இதுபோன்ற மாணவர்கள் நம் சமூகத்தில் குறைவாகவும் பார்ப்பன சமூகத்தில் அதிகமாகவும் உள்ளனர்.*

*இவர்கள் காதல் முறிந்தாலும் நட்பாகவே தொடர்கின்றனர். இரண்டாவது +2 முடித்து வந்தவுடன் அதாவது பள்ளி வாழ்க்கையிலிருந்த கட்டுப்பாடுகள் தளர்ந்தவுடன் காதல் வயப்படும் மாணவர்கள் சற்று நிலை தடுமாறி, படிப்பில் கவனம் சிதறுகின்றனர். (இதில் விதி விலக்காக சில மாணவர்கள் தங்களது எதிர்காலத் துணையின் துணையோடு கல்வியை ஒழுங்காகக் கற்கின்றனர்).*

*சரி, அப்படியானால் காதல் என்பது தற்போது மாணவர்களின் வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்து கிறது என்றால் அந்தக் காதல் தேவையா எனும் கேள்வி எழும். இதுவரையில் சொல்லப்பட்டது என்பது காதல் எனப்படுவது புனிதமான ஒன்றல்ல அது இயற்கையின் தேவையால் ஏற்பட்ட ஒன்று. மேலும் இந்தப் புனிதம் போர்த்தப்பட்ட அறிவுக்குப் பொருந்தாத சினிமாத்தனமான காதலால் நம் சமூகக் குழந்தைகளை எப்படி பாதித்துள்ளது என்றுதான் பார்த்தோம்.*

## காதலின் பகுத்தறிவின்னை - தோழர் பெரியார்

"காதல் என்பது அன்பு அல்ல, ஆசை அல்ல, காமம் அல்ல. அன்பு, நேசம், காமம், மோகம் என்பவை வேறு, காதல் வேறு என்றும் - அது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இயற்கையாய் உண்டாகக் கூடியதாகும். "அக்காதலுக்கு இணையானது உலகத் தில் வேறு ஒன்றுமேயில்லை" என்றும் -

"அது ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணிடமும் ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணிடமும் மாத்திரந்தான் இருக்க முடியும்; அந்தப்படி ஒருவரிடம் காதல் ஏற்பட்டு விட்டால் பிறகு எந்தக் காரணம் கொண்டும் எந்தக் காலத்திலும் அந்தக் காதல் மாறவே மாறாது" என்றும் -

பிறகு "வேறு ஒருவர் இடமும் அந்தக் காதல் ஏற்படாது. அந்தப் படி மீறி அந்தப் பெண்ணுக்கோ, ஆணுக்கோ வேறு ஒருவரிடம் ஏற்பட்டுவிட்டால் அது காதலாயிருக்க முடியாது. அதை விபசாரம் என்று தான் சொல்லவேண்டுமே ஒழிய அது ஒருக்காலும் காதலாகாது" என்றும் -

"ஒரு இடத்தில் உண்மை காதல் ஏற்பட்டுவிட்டால் பிறகு யாரிடமும் காமமோ விரகமோ மோகமோ என்றெல்லாம் ஏற்படாது" என்று சொல்லப் படுகின்றது.

- தோழர் பெரியார், குடி அரசு - 18.01.1931, பெண் ஏன் அடிமையானாள்? நூல்

*நாம் அறிந்தவரை இன்றளவும் காதலைப் பற்றிய பெரும்பாலான மாணவர்களின் கருத்து இதுவாகவே உள்ளது. அதுவும் கல்லூரி மாணவர்களை விட அதிகம் பாதிக்கப் பட்டிருப்பவர்கள் கிராம, சிறு நகர உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களே. இவர்களில் மிகப்பெரும் பான்மையினர் தாழ்த்தப் பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களே!*

*இப்படிப்பட்ட சிந்தனை உள்ளவர்களைப் பற்றித் தோழர் பெரியார் அதே கட்டுரையில் தொர்ந்து எழுதுகிறார். படியுங்கள்.*

இந்தப்படி சொல்லுகின்றவர்களை எல்லாம் உலக அனுபவமும் மக்களின் அனுபவ அறிவும் இல்லாதவர்கள் என்றோ, அல்லது இயற்கையையும், உண்மையையும் அறியாதவர்கள் என்றோ அல்லது உண்மையை அறிந்தும் வேறு ஏதோ ஒரு காரியத்திற்காக வேண்டி வேண்டு மென்றே மறைக்கின்றவர்கள் என்றோதான் கருதவேண்டி இருக்கின்றது.

எப்படிப்பட்ட காதலும் ஒரு சுய லட்சியத்தை அதாவது தனது இஷ்டத்தை - திருப்தியைக் கோரித்தான் ஏற்படுகின்றதே தவிர வேறில்லை என்பதும் காதலர்கள் என்பவர்களின் மனோ பாவத்தைக் கவனித்தால் விளங்கும்.

காதல் கொள்ளும்போது காதலர்கள் நிலைமை, மனப் பான்மை, பக்குவம், லட்சியம் ஆகியவைகள் ஒரு மாதிரியாக இருக்கலாம். பிறகு கொஞ்சகாலம் கழிந்தபின் இயற்கையாகவே பக்குவம் நிலைமை லட்சியம் மாறலாம். இந்த மாதிரி சந்தர்ப்பங்களிலும் காதலுக்காக ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்துக் கொண்டு சதா அதிர்ப்தியில் துன்பத்தில் அழுந்த வேண்டியது தானா?

ஆசையைவிட, அன்பை விட, நட்பைவிட, காதல் என்பதாக வேறு ஒன்று இல்லை என்றும், அவ்வன்பு, ஆசை, நட்பு ஆகியவைகள்கூட மக்களுக்கு அஃறிணைப் பொருள்கள் இடத்திலும் மற்ற உயர்திணைப் பொருள்களிடத்திலும் ஏற்படுவது போல் தானே ஒழிய வேறில்லையென்றும், அதுவும் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்வதிலிருந்து, நடவடிக்கையில் இருந்து, யோக்கியதையில் இருந்து, மனப்பான்மையில் இருந்து, தேவையில் இருந்து, ஆசையில் இருந்து உண்டாவ தென்றும் அவ்வறிவும் நடவடிக்கையும் யோக்கியதையும் மனப்பான்மையும் தேவையும் ஆசையும் மாறக்கூடிய தென்றும் அப்படி மாறும் போது அன்பும் நட்பும் மாறவேண்டியது தான் என்றும், மாற கூடியதுதான் என்றும் நாம் கருதுகின்றோம்.

- தோழர் பெரியார், குடி அரசு - 18.01.1931, பெண் ஏன் அடிமையானாள்? நூல்

## பாலியல் கல்வியின் தேவை

*தோழர் பெரியார் காதலை வெளிப் படையாகப் பட்டவர்த்தனமாகப் போட்டு உடைத்து விட்டார். இவ்வளவு தான் காதல். ஆனால் நாம் அதைப் புனிதமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.*

*இந்நிலைக்கான அடிப்படைக் காரணம் பெண், ஆண் சமத்துவமுள்ள பாலியல் கல்வியை வயதுக்கேற்றவாறு பள்ளிகளில் வைக்காததும், பெற்றோருக்கும் பாலியல் புரிதலுக்கான ஏற்பாடு எதுவும் இல்லாமையும் ஆகும். மாறாக இதுபோன்ற கல்வியை குழந்தைகளுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும் கொடுக்கப்பட வேண்டும்.*

*கோ எஜுகேசன் எனப்படும் இருபாலர் கல்வி நிலையங்கள் மட்டுமே இருக்க வேண்டும். கல்வி*

நிலையங்கள் ஒன்றும் தனித்தீவில் இல்லை. நம் சமூகத்துக்குள்தான் உள்ளது. எனவே எல்லா வயதினருக்கும் பாலியல் கல்வியை அரசு கொண்டு சேர்க்க வேண்டும். அப்போதுதான் குழந்தைகளுக்கும் அறிவுரீதியான பாலியல் கல்வியாகப் போய்ச் சென்றடையும்.

மேலும் சினிமா, சீரியல்களில் காட்டப்படும் புனிதக் காதல் காட்சிகளுக்குத் தடை விதிக்கப்பட வேண்டும். அப்படி இல்லாவிட்டால் சினிமாவின் மூலம் சிவப்புத் தோல் கவர்ச்சி, கொடியிடைக் கவர்ச்சிகளை நம்முடைய சினிமா கதாநாயகர்கள் பரப்பிக்கொண்டே இருப்பர். அது சாக்கடையைச் சுத்தம் செய்யாமல் மருந்தடிப்பது போன்றது.

உணர்ச்சிகளால் உந்தப்படும் காதலை மறுக்கும் தோழர் பெரியார், அறிவார்ந்த புரிதலோடுக் கூடிய காதலை வரவேற்கிறார்.

> **“உண்மையில் காதல் மணம் என்றால் பெண்களும் ஆண்களும் சம நிலையில் பழகும் வாய்ப்புத் தந்து, ஒருவருடைய குணா குணங்களை மற்றவர் அறியும் சமயம் கிடைத்து ஒருவருடைய வாழ்க்கைக்கு ஒருவர் இன்றியமையாதவர் என்ற நிலையில் காதல் கொள்வதுதான் உயர்ந்த காதலாகும்!”**
>
> **- குடிஅரசு 21.07.1945**

> **“ஒரு பெண்ணும் ஆணும் சேர்ந்து பழகி ஒருவரையொருவர் அறிந்து கொண்ட பிறகுதான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். ஆண்களோடு சாதாரணமாகப் பெண்களைப் பழகச் சொல்ல வேண்டும். யோக்கியனா? கோபக்காரனா? பைத்தியக்காரனா? வேடக்காரனா? குடிகாரனா? என்று பெண்ணுக்கு முன்னரே தெரிய வேண்டாமா? பழகினால்தானே தெரியும். திடீரென்று ஒருவரையொருவர் முடிச்சு போடலாமா? அன்பு, குணம், பழக்க வழக்கம் இவைகள் உணர்ந்து ஒருவருக்கொருவர் நண்பர்களாகப் பழக வேண்டும். உடல் சேர்க்கை வேண்டும் என்று நான் கூறவில்லை. இதுதான் நான் சொல்லும் காதல்-ஆசை-இஷ்டம்.”**
>
> **- விடுதலை 24.05.1947**

### காதலர் தினங்கள் அறிவார்ந்த காதலைப் பரப்புகின்றனவா?

இல்லை. மனப்பக்குவம் மற்றும் உடல் பக்குவமற்ற வயதுள்ளவர்களுக்கு இந்தச் சமூகம் கற்பு, புனிதம் என்ற பகுத்தறிவுக்கு முரணான நட்பாக இல்லாத காதலையே கொண்டு சேர்க்கிறது. இந்த அறிவுக்குப் பொருத்தமில்லாததையே கண்டிக்கின்றோம். இதனாலேயே ஒட்டு மொத்தமாக வயது பக்குவமடைந்தோரிடையே ஏற்படும் காதலை மறுப்பதாக ஆகிவிடாது. காதல் சமுதாயத்தில் எப்படி உள்ளது என்று சார்பற்றநிலையில்தான் பார்த்தோம். அதே சமயம் இந்தக் காதலால் ஏற்படும் வேறு விளைவுகளையும் பார்ப்போம்.

சாதி, மதம் இரண்டும் தன்னைத் தக்க வைத்துக் கொள்ளுமிடம் சமுதாயத்தில் முதலில் திருமணமும் அதன் பின்னர் சடங்குகளுமே! இந்தக் கட்டுமானம் உடையாமல் இருந்தால்தான் பார்ப்பன ஆதிக்கமும், பார்ப்பனரை அனுசரித்து கொள்ளை அடிக்கும் பணக்காரர்களின் வாழ்வும் நிலைக்கும். மனிதனை மனிதனாகப் பார்க்க விடாத சாதியம், உரிமையற்ற, சமத்துவமற்ற சமூகத்தைக் கட்டிக்காக்கும் சாதியம் வாழ்வதே, அகமண முறையில்தான். அதாவது சாதிக்குள் மட்டுமே நடக்கும் திருமணம்.

> **இவர்கள் இதற்குப் பிறகு ‘காதல்’ என்பதில் அதிகம் வீழ்கின்றனர். இது மிகப் பெரும்பாலும் கிராமத்துக் குழந்தைகளின் வாழ்வில், கல்வியில் பெரும் பின்னடைவை**

உற்பத்தியில் சாதி, நுகர்வதில் சாதி என சமூகத்தைப் பூணூலால் பிரித்துப் பிரித்து வைத்திருக்கும் இந்தச் சாதிய முறைக்கு வேட்டு வைக்க வேண்டுமென்றால் சாதி மறுப்புத் திருமணங்கள்தான் நடக்க வேண்டும். அதை நடத்த சாதி கடந்து இணைய வைக்க இந்தக் காதலால் சாத்தியம் ஆகிறது எனும்போது, இந்தக் கருவிதான் இந்த விஷ விருட்சத்தை வேரோடு மண்ணாக சாய்க்க பயன்படுகிறது எனும் காரணத்தாலேயே இந்தக் காதலைக் கொண்டாடுகிறோம்.

பொது உரிமையுள்ள பொது உடைமை வந்தால் மகிழ்ச்சி. அதற்காகத்தான் இயக்கமாய் வாழ்கிறோம், போராடுகிறோம். அதே சமயம் இடஒதுக்கீட்டு உரிமை என்பது இதே அமைப்புக்குள் சமூகநீதிக்கு அடிப்படை மேலும் அதுதான் முதற்படி என்பதால் அதைத்தானே கொண்டாடுகிறோம்!

அடுத்ததாக, மரபணு வழியாக ஏற்படக்கூடிய 3000 வகையிலான நிரந்தர ஊனங்கள் உறவு முறையில் திருமணம் செய்வதால் ஏற்படுகிறது என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த உறவுக்குள் திருமணம் என்பதே சாதி, மதத்துக்குள் நடைபெறும் அகமண முறையாகும். ஆக ஒரு நல்ல ஆரோக்கியமான சமூகம் படைக்க வேண்டுமென்றால் இந்தக் காதல்தானே கருவியாக உள்ளது? அதைக் கொண்டாட வேண்டியது நம் கடமையில்லையா? ஒரு பாலினமாக இருந்து இரு பாலினமாக மாறியதே இது போன்ற நோய்கள் வரக்கூடாது என்பதற்காகத்தானே?

சாதியற்ற, மதமற்ற மனித சமூகமாக மாற அறிவார்ந்த காதல் உருவாக பாலியல் மற்றும் பெண், ஆண் சமத்துவத்தைப் பரப்புவோம். அதுவரையில் சா’தீ’க்குத் ‘தீ’ வைக்கும் இந்தக் காதலர் தினத்தைக் கொண்டாடுவோம்.

அபிநயா சக்தி

# மிக்ஸிங் சரி இல்லை




இயக்குநர் அனிதா உதூப் இயக்கத்தில், தயாரிப்பில் மார்ச் 1 ல் வெளிவந்த படம்… இவர் இதற்கு முன்னர் 2006 ல் Culliver's Travel என்ற ஒரு அனிமேசன் படத்தையும், 2009 ல் குளிர் 100° என்கிற தமிழ்ப் படத்தையும் இயக்கி உள்ளார்..

எந்தக் காலகட்டத்தில் என்று குறிப்பிடுவதை விட பொதுவாக தமிழ் சினிமாவில் கதாநாயகி களை, (கதாநாயகி, நாயகன் என்கிற பிம்பத்தில் உடன்பாடில்லை என்றாலும் கட்டமைத்து, புழங்கிக் கொண்டு இருப்பதால் புரிவதற்கு இந்த வார்த்தையைப் பயன்படுத்திக் கொள்கிறேன்) மையப்படுத்திய படங்கள், முக்கியத்துவம் கொண்ட படங்கள் மிக குறைவு, விரல் விட்டு எண்ணி விடலாம்.
இல்லையே பழைய படங்களில் இருக்கே னு நாம உதாரணத்துக்கு எடுத்துக்கலாம் னா.. அது என்ன மாதிரியான படங்கள் ? முதல அதப் பேசுவோம். பெண்களுக்கு முக்கியத்துவம் இருப்ப தாகக் காட்டிக் கட்டமைத்து மக்களை ஏமாற்றும் படங்கள் குறிப்பாக பெண்களை ஏமாற்றும் பழமை வாதச் சிந்தனைக்கு உரம் போட்ட, ஆணாதிக்க சிந்தனைக்கும், பிற்போக்குத் தனத்துக்கும் உரம் போட்ட படங்களைக் கொஞ்சம் பார்ப்போம்.

அதுக்கு முன்ன இந்தப் பழைய படங்கள், பாடல்கள் பற்றிப் பேசும்போது நம் வீட்டுப் பெரிவர்கள் சொல்வார்கள், "அந்தக் காலத்துல அப்படித்தான் இருக்கும். ஆனா என்ன மாதிரி பாட்டு எங்க காலத்துல இருக்கும்?" என்று சிலாகிப்பார்கள். அதில் உண்மை உண்டுதான். ஆனாலும் பெரும்பான்மைப் பிரச்சனையைப் பேசுவோம்.
அந்தக் காலம், அந்த காலம் எனச் சொல்லும் அந்தச் சமாதானம் இருக்கு இல்லையா? இப்போது வரும் குப்பைகளுக்கு முன்னோடிகள் அந்தப் படமும், பாடல்களும் காட்சிகளும்தான். உதாரணத்துக்கு,

"இப்படித்தான் இருக்க வேண்டும் பொம்பள …இங்கிலீசு படிச்சாலும் இந்தத் தமிழ்நாட்டுல, இப்படித்தான் இருக்க வேண்டும் பொம்பள"…
"பொம்பளயாப் பொறந்தா ஆம்பளக் கிட்ட கழுத்த நீட்டிக்கணும்"…
"நாட்டுக்குத்தான் ராணியப்பா வீட்டுக்கு அவ மனைவியப்பா"…
"பொம்பள சிரிச்சா போச்சு, புகையில விரிச்சா போச்சு"…

இதெல்லாம் பழைய குப்பைப் பாடல்கள். அடுத்த காலகட்டத்தில், "ராஜா கைய வச்சா" என்கிற கதாநாயகன் பற்றிய ஒரு பாடல். அதில் கார் செட்டில் வேலை செய்யும் ஹீரோ. அவர் வேலை பற்றிய பாடலில் எதுக்குப் பெண் வருகிறாள்? அவளையும் காரையும் கம்பேர் செய்து மிக மோசமான ஒரு ஆணாதிக்கத் திமிர் பாடல்,
"ஓரிடத்தில் உருவாகி வேறிடத்தில் விலை போகும், கார்களைப் போல் பெண்ணினமும் கொண்டவனைப் போய் சேரும்"…

இந்த வரலாற்று வரிகளுக்கு இசை அமைத்தவர் இசை ஞாநி என்பதாலேயே அந்தப் பாடலின் விஷம் கண்டு கொள்ளப்படாமல் போனது.. இதுபோல பலதை உதாரணமாகச் சொல்லலாம் அந்தக் கால கட்டத்தில்.

இப்போது
"கிளப்புல மப்புல திரியிற பொம்பள"…
"அடிடா அவள, ஒதடா அவள"…
"எதடீ கண்டுக்கிட்ட புதுசா எங்கிட்ட இல்லாதத பெருசா, கார் ரொம்ப பழசுடா, அவ ஆர்சி புக்க பாருடா, அதுக்கு ஃபஸ்டு ஓனரு நானு டா"…

*சரி இதெல்லாம் யார் எழுதுறா? ஆண்கள், யாரு மியூசிக் போடுறா? எல்லாமே ஆண்கள். ஒரு சக இனத்த வச்சுப் பணம் பண்ண, படம் பண்ண அவளையே திட்ட, அடிக்க, ரேப் செய்ய, அவளையே கலாச்சாரம் காக்கச் சொல்ல, மனைவியாக்கன்னு, ஒரு பெண்ண இப்படி எல்லாமாவும் இருக்க நிர்ப்பந்திக்கும் ஆண்கள் கிட்ட இருந்து வரும் உருவாக்கத்தைப் பொதுப்புத்தியில் இருந்து இரசிக்கவும் பெண்ணைப் பழக்குகிறார்கள்.. இரசிக்கும்படியான இசை அமைத்து, பல காட்சியமைப்புகளை வைத்து கவனிக்கவிடாமல் செய்கிற யுக்தி ஆண்களுக்கு மட்டுமே பழகிய ஒன்று. சரி, பெண் பெயரில் படமே வரலையா? அதைக் கொஞ்சம் பார்ப்போம்.*

*கணவனே கண்கண்ட தெய்வம், மணாளனே மங்கையின் பாக்கியம், தாலி, மாலையிட்ட மங்கை, தாலி பாக்கியம், இராஜகாளியம்மன், அம்மன், கெட்டிமேளம், என் புருசன் குழந்தை மாதிரி, இந்த மாதிரி ஏகப்பட்ட படங்களை உதாரணமாகச் சொல்லலாம். இப்படி பெண்களின் பெயர்களில் வருகிற படங்கள் எப்படி இருக்கின்றன? புனிதமான வளாக, கலாச்சார, குடும்பக் காவலாளியாக இருக்க வேண்டும் என்பதைப் படத்தின் பெயரை வைத்தே பாடம் எடுப்பார்கள்.*

*ஆண்கள் பெயரில் வரும் படங்கள் எப்படி இருக்கின்றன. எஜமான், சின்னக்கவுண்டர், தேவர் மகன், சீமராஜா, மாப்பிள்ளை, ஆம்பள, சிறுத்தை, சிங்கம், வால்டைர் வெற்றிவேல், ஊர்க்காவலன், எட்டுப்பட்டிராசா, முதல்வன், அந்நியன், ரோமியோ, சாப்லின், மீசைய முறுக்கு, ரஜினி முருகன், பாஸ், புலிமுருகன், இப்போது வந்த வந்தா ராஜாவாத்தான் வருவேன் வரை எல்லாமே ஆண் மையப்படங்கள்.*

*இதில் பெரும்பான்மையான படங்கள் சாதியைத் தூக்கிப் பிடிக்கும் படங்கள். சிலவைகளில் வெளிப்படையாகவும், பலவைகளில் மறைமுக மாகவும். இவைகளில் இந்த ஆண்கள் உருவாக்கி இருப்பது என்ன? தன்னை ஒரு பெரும் ஆள்பவனாகக் காட்டிக் கொள்பவனாகவும், சாதியை, ஊரை, குடும்பத்தை, பெண்ணை, காப்பாற்ற அவதரித்த அவதார புருசன் போலவும் தான் உருவாக்கப் படுகின்றன.*

*இந்த உளவியலை நாம் கவனிச் சோம்னா... அதாது தன்னையே தூக்கிப் பிடிக்க வேண்டிய ஒரு செக்யூர் பாதுகாப்பில்லாத மன நிலையில்தான் ஆண்கள் இருக்கிறார்கள். அதனாலேயே இவ்வளவு மெனெக்கெட்டு ஒரு பெண்ணை தீட்டு, புனிதம் ஆக்கி அவனை ஒரு எஜமானன் ஆக்கிக் கொள்கிறான். பெண் பற்றி பெண்ணின் வலிமை பற்றித் தெரிந்ததாலேயே எல்லா இடத்திலும் தன்னை நிறுவிக் கொள்ள ரொம்ப வலிந்து வேலை செய்கிறான். கலாச்சார காவலாய் பெண்கள் இருக்க வேண்டும். ஆனால் அதன் தலைமை அவனா இருக்க வேண்டும்.. என்ன ஒரு பயம்?*

*தேவர் மகனில் ஒரு சீன் வரும். சிவாஜி உட்கார்ந்து இருப்பார். அவரைப் புகைபடம் எடுக்க குத்த வச்சு உட்காருவார் கவுதமி. உடனே கமல் அதிர்ந்து போய் சைகை காட்டுவார். சிவாஜி முறைப்பார். உடனே கவுதமி காலை மடித்து இவர்கள் சொல்கிறதுபோல் அடக்கமாய் உட்காருவார். என்ன ஒரு ஆணாதிக்க அதிகாரத் திமிர்?*

*நீங்கள் சொல்வது போல, அதாவது பெண்கள் குத்த வச்சு ஒரு காலை மடக்கி திருமணம் ஆகுற போது உட்காரச் சொல்கிற, போஸ் மிக ஆபாசமான போஸ். இதைத்தான் கலாச்சாரம் என்கிறீர்கள். மேற்கூறிய ஆண்களின் படங்களில் பெண்கள் எப்படிப் பயன்படுத்தப்பட்டார்கள் என, சொல்ல வேண்டியது இல்லை.*

*அவன்கள் பார்வையில் அடங்கிப் போகிறவளாய், முத்தம் கொடுத்தால் காதல் வந்து விடுகிறவளாய், தாலிகளுக்கு ஏங்கிறவளாய், மண் சோறு சாப்பிடும் அச்சம், மடம், நாண, பயிர்ப்புப் பெண்களாக... இதனால் யாருக்கு என்ன பயன்? அந்தப் பெண்ணுக்குக் கூட என்ன பயன்? ஆனால்.. ஆனால் ஆண்களுக்குப் பெரும் பயன் இதில் உள்ளது. அதை நாம் உணர வேண்டும். சரி இபோது 90 எம்.எல். படத்துக்கு வருவோம்.*

*90 எம்.எல். ஓவியா நடிப்பில் வெளிவந்த படம்.. ஒரு கணவன், மனைவியை கவுன்சிலிங்காக கூட்டி வருகிறார். அந்தப் பெண் வழியாக ஓவியா பற்றிய தான காட்சிகள் ஆரம்பிக்கிறது. ஒரு அப்பார்ட் மெண்ட்டில் புதிதாகக் குடியேறுகிறார் ஓவியா. ஓவியாவின், உடை, வாழ்க்கை முறை, பழக்கம் என எல்லாமும் அந்த அப்பார்ட்மெண்டில் இருக்கும் மற்ற பெண்களைக் கவர்கிறது. ஆனால் காட்டிக் கொள்ளாமல் ஒதுங்கியே, பேசாமல் இருக்கிறார்கள்.*

*ஒரு கட்டத்தில் ஓவியாவுடன் நட்பாகிறார்கள். இரவு ஊர்சுற்றல், தண்ணி, தம் என கொண்டாட்ட மாக இருக்கிறார்கள். இதைக் கொண்டாட்டம் என்றால் கூட காண்டாகிறார்கள் ஆண்கள். பாவம். பெண்களும்தான். ஆனால் அதை ஆணாதிக்கக் கற்பிதமாய்ப் பார்க்க வேண்டும்.*

*ஓவியாவின் தோழிகள் ஒவ்வெருத்தருக்கும் ஒவ்வொரு பிரச்சனை இருக்கிறது. குடும்பத்தில், அந்தப் பிரச்சனைகள் ஒவ்வொன்றாக ஓவியா சரி செய்வது போலக் காட்சிகள் நகர்கின்றன. ஆனால் வலிமையே இல்லை. எவ்வளவு முக்கியமான காட்சிகள் இவைகள்.*

*ஆனால் அதை மிக மொன்னையான காட்சியாக ஒரு காமெடியாக மாற்றி இருக்கிறார்கள். பெண்கள் அந்தப் பிரச்சனையில் இருந்து விடுபட அவர்களே தீர்வை நோக்கி நகரும் படியான இந்தக் காட்சியமைப்பில் ஒரு அழுத்தமும் இல்லை. ஆழமும் இல்லை.*

*அப்படி ஒரு இரவுப் பார்டியில் ஒரு பெண் காதல் தோல்வில் அழ , அந்தப் பெண்ணுக்கு உதவி*

செய்ய, மறுநாள் அந்தப்பெண் காதலிக்கும் நபருக்குக் கல்யாணம் என்பதால் அந்த கல்யாண இடம் நோக்கி பயணித்து, அந்தக் கல்யாண ஜோடிகள் மண்டபத்தில் நுழையும் போது, கத்தியைக் காட்டி மிரட்டி அவர்களை காரில் கடத்திச் செல்லும் காட்சி அவ்வளவு பலவீனமாய் இருக்கு.

இதே ஒரு ஆண் செய்வதாய் வைத்தால் எப்படி இருந்து இருக்கும் என சொல்ல வேண்டியது இல்லை. அந்தப் படத்தில் பல காட்சிகளில் கிளாமராக, உடை குறைவாக, ஊர் சுற்றும் போது, பார்ட்டி செய்யும் போது என எல்லாமும் அவ்வளவு இயல்பாக இருப்பதாய்க் காட்டிவிட்டு, ஒரு பெரிய செயலைப் பெண்கள் செய்யும் போது, அதை இவ்வளவு மலினமாக, பலவீனமாகக் காட்டுவது இந்தப் பட முயற்சியின் பெரும் பின்னடைவு.

பின்பு அந்த கல்யாண ஜோடிகளைக் கடத்தி வந்து தன் தோழியின் முன்பு நிறுத்த, தோழி ஓடிச் சென்று மாப்பிள்ளையைத் தாண்டி, அந்தக் கல்யாணப் பெண்ணைக் கட்டிப்பிடிக்க, எல்லோருக்கும் ஷாக் ஆகிறது. இந்தக் காட்சி முடிந்த பிறகு, இப்போது வந்த தன்பால் இணையரை அங்கீகரிக்கும் சட்டப்பிரிவை வேறு போடுகிறார்கள். சட்ட பிரிவை மட்டும் போட்டால் சமூகம் ஏற்குமா? சரியான காட்சி அமைப்புடன் அல்லவா அவர்களைச் சித்தரித்து இருக்க வேண்டும்? தியேட்டரே சிரிக்கும் படியான ஒரு காமெடி போல ஆக்கியது மேலும் சிக்கலையே உண்டு பண்ணும்.

இதுபோல இன்னொரு காட்சியில், ரவுடித்தொழிலைக் கையில் எடுத்து இருக்கும் தன் கணவனைத் திருத்த முடியாமல் ஓவியாவிடம் சொல்ல... “செம்மையா மேட்டர் பண்ணி, சரி பண்ணிடு” என்கிற அட்வைஸ் கொடுக்கப்படுகிறது.

முதலிரவுக்குச் செல்லும் மனைவிக்கு அம்மா முதற்கொண்டு உறவினர்கள் வரை அனைவரும் கொடுக்கும் கேவலமான அட்வைஸ் இது. இதுக்குக் கலாச்சாரம் எனச் சொல்லி சப்பைக் கட்டுகள் வேற. செக்ஸ் செய்வதால் மட்டும் அவனை, அவளைத் தக்க வைக்க, மாற்ற முடியுமா என்ன?

ஆண்கள் திணிக்கின்ற நியதிகளை மீறாமல் பெண்களுக்கு விடுதலை சாத்தியமில்லை. மிக மோசமான பிற்போக்கு விளைவுகளையே உண்டாக்கும், உண்டாக்கிக் கொண்டும் இருக்குகிறது. ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதென்பது கலவிக்காகவும், குழந்தை பெற்றுக் கொள்ளவும்தான் என இந்தச் சனாதனத் திருமண முறை நமக்குக் கற்பித்து, பழக்கி வைத்து இருக்கிறது. இந்தப் படத்தில் ரவுடியாக வரும் நபரின் மனைவி, இவர் சண்டை போடும் காட்சியைப் பார்த்து காதல் கொள்கிறார் என்பதெல்லாம் அபத்தம். நிஜத்தில் இப்படியான ஆண்களை பெண்கள் விரும்புவார்களா இல்லை நடித்தவரே தான் செய்வாரா?

இதெல்லாம் வளரும் இளம் ஆண்கள், பெண்களுக்குத்தான் தவறாகப் புரிதலை ஏற்படுத்தும் திரைபடக் காட்சிதான் என டீன் ஏஜ் கடக்கமாட்டார்கள். எப்போது பார்த்தாலும் குடிப்பது, ஊர் சுற்றுவது, கஞ்சா அடிப்பது, பார்ட்டி பண்ணுவது யாருக்கு சாத்தியம்? மேல் தட்டில் நடக்கலாம். அதற்குப் பின்பான வாழ்வு பெண்களின் உளவியல், சமூகப் பிரச்சனை என எதையும் காட்டவில்லை. எல்லாமே மேல்தட்டு வர்க்கப் பெண்கள். இங்கு சுதந்திரமாக பெண்களுக்கு என்ன இருக்கிறது? அடிப்படையே கேள்விக்குறி எனும் போது இந்தக் கொண்டாட்டங்கள் எப்போது?

பெண்ணுக்குச் சாத்தியப்படும். குறைந்த பட்சம், திருமணம் ஆனவுடன் பெண்கள் தங்கள் கல்லூரித் தோழிகளைக்கூட காண்டாக்ட் செய்ய முடிவதில்லை. அப்படித்தான் குடும்ப அடிமைத் தாய் பெண்கள் இருக்கிறார்கள். இதிலும்அப்படித்தான் இருக்கிறார்கள். அதை இரவு பார்ட்டிகள், ஊர் சுற்றல்கள் உடைக்குமா என்ன?

அடிப்படை அடிமைதனத்தை, அதன் வேரை உடைக்க முற்படாமல் வெற்றுக் கொண்டாட்டத்தைக் காட்டுவதும் பிரச்சனைகள் பேசாமல் பூசுவதே. அதே நேரத்தில் மாற்றங்கள் சத்தமில்லாமல் நிகழ்ந்து கொண்டு இருந்தாலும் அதைப் பெண்ணின் வழியே காட்டும் போது பெரிய கலாச்சார அதிர்ச்சி கொள்கிறார்கள். ஆண்கள் பயம் கொள்கிறார்கள். ஆனால் இது சாத்தியப்பட்டது யாருக்கு எனில் பொருளாதாரத்தில் மேல்தட்டில் இருக்கும் பெண்களாலும் அல்லது சில பொருளாதாரத் தற்சார்பு இருக்கும் பெண்களாலும் இதைச் செய்ய முடிகிறது.

பல பெண்கள் வேலைக்குச் சென்றாலும் அவர்கள் நிதி சார்ந்த முடிவுகள் எடுக்கும் அதிகாரத்தில் இல்லை. ஓவியாவின் தோழி ஒருவரின் கணவன் செக்ஸ் சில் ஈடுபடாமல், ஆர்வம் இல்லாமல் இருக்கும் போது அந்தப் பெண் ஃபீல் செய்யும்போது, அதை நேரடியாகக் கேட்கச் சொல்லும் ஓவியாவின் அட்வைஸ் காட்சி கவனிக்க வேண்டியது. இன்னும் சரியாக கையாளப்பட்டு இருக்க வேண்டும்.

ஆயினும் பெண்கள் தங்களுக்குக் கிடைக்காத கலவியை கணவனிடம் வெளிப்படையாகப் பேசி சரி செய்து கொள்ளாத சூழலில்தான் பெண்ணை வளர்க்கிறார்கள். செக்ஸ் பத்திய இந்தச் சமூகப் புரிதலைச் சொல்ல வேண்டியது இல்லை. ஆனால் பெண் பேசும் போது அந்தப் பெண்ணை எப்படியான பார்வையில் இந்தச் சமூகம் பார்க்கும். ஆண் எலும்புத் துண்டு போலத் தூக்கிப் போடுவதே பெண்களுக்கான செக்ஸ். இதுலயும்கூட வர்க்கம் உண்டு.

அதேபோல இதற்கு முன் வந்த சிவா மனசுல சக்தி, மேயாத மான் போன்ற படங்களும் தண்ணீ, தம் என ஹீரோ ஊர் சுற்றுவதும் காமெடி செய்வதுமாகக் காட்டி அதில் ஒரு ஆளுமையை

காட்டி இருப்பார்கள். ஹீரோ எப்போதும், ஒயின் ஷாப், ஹீரோயினைத் திட்டுவது, மேட்டர்னு பேசுவது போதையிலேயே சுத்துவதுனு இருப்பான். அதை நாமும் சாதாரணக் கடந்துவிடுவோம். ஏன் எனில் அவன் ஆண். அவன் அப்படியான அதிகாரங்களுடன் வளர்க்கப்பட்டவன்.

மேலும் இந்தப் படத்தில் பெண்கள் சுதந்திரமாக இருப்பதாகக் காட்ட ரொம்பவே மெனெக் கெட்டு இருக்கிறார் இயக்குனர். சுதந்திரம் என்பது தான் கற்பிதத்தில் இருந்து விடுதலை அடைவதும். மறுபடியும் ஒரு ஆணுக்காக பண்டமாய் மாறுவதும் இல்லை.

பெண் இயக்குநர்கள் சினிமாவில் மிக மிகக் குறைவு. அப்படி வரும் பெண் இயக்குநர்களும் சமூகத்தை உற்று நோக்கி, பெண்கள் பிரச்சினையைச் சரியாக அந்த வேர்களோடு, உளவியலாய் ஆராய்ந்து படம் எடுப்பது சமூகத்துக்கு நல்லது.

இந்தப் படத்தின் இசையமைப்பாளர் சிம்பு... சொல்வதற்கில்லை..

ஆனால் கடைசிக் காட்சியில் லிவ் ன் மட்டுமே சரி என ஒரு பார்ட்டியில் வைத்து பிரேக் அப் செய்யும் சிம்புவை, அதே இடத்தில் வைத்து ஓவியா லிப் லாக் செய்து நீங்கள்தான் நான் தேடிய ஆள் என புரோப்போஸ் செய்வதும் அபத்தத்தின் உச்சம்.

இப்படியான பெண் காதாபாத்திரங்களின் உருவாக்கம் என்னதான் சொல்ல வருகிறார்கள் என அவர்களுக்கே புரியாமல், அவர்களும் குழம்பி இருப்பவர்களைக் குழப்பி மேலும் சிக்கலையே உண்டு செய்கிறார்கள். சமூகத்தில் மேலும் புரிதலின் வெளி சுருங்கியே போகும்.. இந்தப் படத்தின் இறுதியில் சிம்பு வர வேண்டிய அவசியம் என்ன? நாயகி கண்டிப்பாக நாயகனைச் சேர வேண்டுமா? என்ன சராசரியில் இருந்து என்ன மாற்றத்தை இந்தப் படத்தின் பெண் இயக்குனர் செய்திருக்கிறார்?

எல்லாம் வணிகம் மட்டுமே. அதற்காகப் பெண்கள் ஒரு பேசு பொருள் அவ்வளவே. பேசப்பட வேண்டிய விசயங்ளையும் சரியாகக் கையாள வில்லை. குடி மட்டுமே வைத்து மட்டுமே நாம் ஆதரிக்கவும் முடியாது. 90 எம்.எல் மிக்ஸிங் சரி இல்லை. லிவ்ன் பற்றியும் சரியாகக் கையாளவில்லை. செக்ஸ்க்காக என்பது போல இதை நகர்த்தி இருக்கிறார்கள். ஏற்கனவே புரிதல் இல்லாத சமூகத்தில் இது மேலும் பெண்கள் மீதான பார்வையை மலினப்படுத்தும். பண்டமாய்ப் பார்க்கும் போக்கு அதிகரிக்கும்.



## “ஜாதி அற்றவர்” சான்றிதழ் யாருக்கு வழங்கப்பட வேண்டும்?



வழக்கறிஞர் சினேகா என்பவர், ஜாதி அற்றவர் என்ற சான்றிதழ் பெற்றது தொடர்பாக:

1.ஜாதி மறுப்புத் தம்பதியினரின் “குழந்தைகளுக்கு” இப்படிப்பட்ட சான்றிதழைக் கொடுக்கலாம். அதுவும்கூட அந்த இணையரில் ஒருவர்கூட பார்ப்பனராக இருக்கக்கூடாது என்ற விதியை உருவாக்கி அதன் அடிப்படையில் வழங்க வேண்டும். அப்படி இல்லாமல், யார் வேண்டுமானாலும் ஜாதியற்றோர் சான்றிதழ் வாங்க முடியும் என்றால், பார்ப்பனர்கள் முந்திக்கொண்டு வாங்கி விடுவார்கள். எதிர்காலத்தில் ஜாதியற்றோர் என்ற பிரிவிற்கு இடஒதுக்கீடு என்று ஒரு சட்டமே வந்தாலும் அதனால் நமக்கு நன்மை இல்லை. ஜாதி ஒழிப்புக்கும் பயனில்லை. வழக்கம் போல பார்ப்பன ஆதிக்கத்திற்கே வழிவகுக்கும். அதனால் சினேகா அவர்களின் இந்த முயற்சியை அவசியம் எதிர்க்க வேண்டும். அவருக்கே கூட இது புரியாமல் இருக்கலாம். அவருக்கும், அனைவருக்கும் பார்ப்பன ஆதிக்க ஆபத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

2.நமது தோழர்கள் பலர் தங்களது குழந்தைகளின் பள்ளிச் சேர்க்கையின் போது, “ஜாதி” என்ற இடத்தில் ‘NIL’ அல்லது ‘No Caste’ என்று பதிவு செய்கிறார்கள். பல தலைமுறைகள் அதாவது 10 தலைமுறைகளுக்கு மேல், இடஒதுக்கீட்டின் அடிப்படையில் கல்வி, வேலைவாய்ப்புகளை அனுபவித்த குடும்பத்தினர் இப்படிப்பட்ட முயற்சிகளைச் செய்யலாம். மற்றவர்கள் அவசரப்பட வேண்டாம் என்றுதான் கூற வேண்டியுள்ளது. உங்கள் குழந்தைக்கு ஜாதி, மதம் கடந்த வாழ்வியலைப் பழக்குங்கள். ஜாதி, மதம் கடந்த சொந்தங்களை உருவாக்குங்கள். ஜாதி, மத மறுப்புப் பண்பாடுகளோடு வளர்த்தெடுங்கள். அது தான் முக்கியம். இவற்றைச் செய்யாமல் சான்றிதழில் ‘NO CASTE’ எனப் பதிவு செய்வதால் எந்தப் பயனும் இல்லை.

பிரபாகரன் அழகர்சாமி



### புதுக்கோட்டை சமஸ்தானத்தில் திருமணத்தின் போது இரவிக்கை அணியும் உரிமையை பெற்ற முதல் தலித் பெண்!

# சுயமரியாதை இயக்கம் ஏற்படுத்திய சமூக தாக்கம்!

புதுக்கோட்டை ஞானாலயா ஆய்வு நூலகத்தின் நிறுவனர் அய்யா பா.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பவளவிழா மலரில் கண்ட ஒரு அரிய தகவலை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறோம்.

"புதுக்கோட்டை அரசியல் வீசிய புயல்கள்" என்கிற தலைப்பில் அந்தப் பவளவிழா மலரில் திரு.எஸ்.ஆரோக்கியசாமி என்பவர் ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். அதில், புதுக் கோட்டையின் அரசியல் வரலாறு குறித்து பல தகவல்களை ஆவணப்படுத்தியுள்ளார். அவற்றில், புதுக்கோட்டையின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த க.மு.வல்லத்தரசு பற்றி அவர் எழுதியிருக்கும் ஒரு பகுதியை அப்படியே கீழே கொடுத்திருக்கிறோம்.

க.மு.வல்லத்தரசு அரசியல்வாதி மட்டுமல்ல. சமூக சீர்திருத்தச் சிற்பியும்கூட. அதற்கு ஓர் உதாரணம் மட்டும் தருகிறேன். என்னோடு கல்லூரியில் படித்த நண்பர் சோலை. இவர் புதுக்கோட்டை காந்தி நகரில் பிறந்து வளர்ந்தவர். மாவட்டக் கல்வி அதிகாரியாகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். இவருடைய மகன் பாரதிதாசன் ஐ.ஏ.எஸ் முடித்து சட்டீஸ்கர் மாநிலத்தில் அதிகாரியாகப் பணிபுரிகிறார். கல்லூரிக் காலம் முதல் இன்றுவரை என் இனிய நண்பராக இருப்பவர் சோலை. அவரது குடும்பத்தில் நடந்த நிகழ்வு ஒன்றை என்னிடம் விவரித்தார்.

என் நண்பர் சோலையின் தந்தை குட்டிச்சாமி, புதுக்கோட்டை சமஸ்தான பட்டாளத்தில் (ராணுவம்) சிப்பாயாக வேலை பார்த்தவர். அவர் சிப்பாயாக வேலை பார்த்ததால் சிப்பாய் குட்டிச்சாமி என்று அழைக்கப்பட்டார். அவருக்கு காரைக்குடியில் திருகவட்டி குட்டிச்சாமி மகள் பிரகதாம்பாளைப் பெண் பார்த்து திருமணம் செய்ய முடிவு செய்கிறார்கள்.

அந்தப் பெண்ணின் மூத்த அண்ணன் கு.குருசாமி என்பவர் பெரியார் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர். காரைக்குடி பஞ்சாயத்து போர்டு உறுப்பினராகவும் செயல்பட்டதால் பல பெரிய மனிதர்கள் தொடர்பும் அவருக்கு இருந்துள்ளது. தன் தங்கை பிரகதாம்பாள் திருமணத்தைப் புரட்சிகரமாக நடத்த முடிவு செய்துள்ளார்.

அப்போது தலித் மக்கள் செருப்பு அணிந்து நடக்கக்கூடாது. தோளில் துண்டு அணியக்கூடாது. அப்படித் துண்டு அணிந்தால் மேல் ஜாதிக்காரர் களைப் பார்த்தவுடன் அந்தத் துண்டைத் தோளிலிருந்து எடுத்து இடுப்பில் கட்டிக்கொள்ள வேண்டும். தலித் பெண்கள் முழங்காலுக்கு மேல்தான் சேலையைக் கட்டிக்கொள்ள வேண்டும். மார்பகத்தை மூட இரவிக்கை (பிளவுஸ்) அணியக் கூடாது. இப்படியெல்லாம் சமூக அநீதி கோலோச்சிய கொடூரம் நிலவிய காலம்.

இந்தச் சூழ்நிலையில், பெரியாரின் கொள்கை யால் ஈர்க்கப்பட்ட பெண்ணின் அண்ணன் குருசாமி தன் தங்கைக்கு மற்ற ஜாதி பெண்களைப் போல் இரவிக்கை அணிவித்துத் திருமணம் செய்ய ஆசைப்படுகிறார். அத்திருமணத்தைத் தலைமை ஏற்று நடத்தித் தர க.மு.வல்லத்தரசு அவர்களை அழைக்கிறார்.

வல்லத்தரசும் அப்போது பெரியாரின் கொள்கையின்பால் ஈர்க்கப்பட்டவராக, சமூக சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்புரை நிகழ்த்தி வந்தார். அதனால் அவரும் அத்திருமணத்திற்குத் தலைமை ஏற்க ஒத்துக் கொண்டார்.

1932 ஆம் ஆண்டு சிப்பாய் குட்டிச்சாமிக்கும், இரவிக்கை அணிந்து மணப்பெண்ணாக வீற்றிருந்த பிரகதாம்பாள் என்கிற பெண்மணிக்கும் க.மு.வல்லத்தரசு திருமணத்தை நடத்தி வைத்தார். தலித் சமூகத்தைச் சேர்ந்த பெண் இரவிக்கை அணிந்து செய்துகொண்ட முதல் (புதுக்கோட்டை சமஸ்தானத்தில்) புரட்சிகரத் திருமணம் புதுக் கோட்டை காந்திநகரில் வல்லத்தரசு தலைமை ஏற்று நடத்தி வைத்தார் என்பது வரலாறு பதிவு செய்துள்ள உண்மை.

*பகுத்தறிவு என்றால் எதிர்ப்பு இல்லாமலா? சுயமரியாதை என்றால் சும்மாவா இருப்பார்கள் பழைமைவாதிகள்? சமூகநீதியை மீறிவிட்டான் சிப்பாய் குட்டிச்சாமி. ஜாதிச் சம்பிரதாயங்களைப் புதைகுழிக்குள் அனுப்பி விட்டான். சமூகக் கட்டுப்பாடு என்னாவது? ஆகவே, சிப்பாய் குட்டிச்சாமியை பணியிலிருந்து நீக்க வேண்டும் என்று அரசவையில் வழக்குத் தொடுத்தனர் பழமைவாதம் பேசும் பெருச்சாளிகள்.*

*ஜாதி வெறியர்கள் கொடுத்த வழக்கை அரசவையிலுள்ள அவையோர் தள்ளுபடி செய்து விட்டனர். சிப்பாய் குட்டிச்சாமி 1948 ஆம் ஆண்டு வரை சிப்பாயாகப் பணிபுரிந்து பிறகு தமிழ்நாடு காவல் பணியில் சேர்ந்து 1962 வரை பணியாற்றினார் என்பது வரலாறு."*

*இந்த அரிய வரலாற்றுக் குறிப்பைப் படித்தவுடன், அய்யா பா.கிருஷ்ணமூர்த்தியின் மூலமாக, கட்டுரையாளர் அய்யா எஸ்.ஆரோக்கியசாமி அவர்களைத் தொடர்புகொண்டு பேசினோம். பிறகு அவருடைய நண்பரும், தன் பெற்றோரின் திருமணம் குறித்த இந்தச் சம்பவத்திற்குச் சாட்சியாக இருக்கிற அய்யா சோலை அவர்களிடமும் பேசி இந்த வரலாற்றுச் செய்தியினை மீண்டும் ஒருமுறை உறுதி செய்துகொண்டோம்.*

*அந்தத் திருமணத்தை நடத்தி வைத்த வல்லத்தரசு அவர்கள், அவரது சுயமரியாதைப் பிரச்சாரத்தின் காரணமாக நாடுகடத்தப்பட்டவர் என்பதைக் குடிஅரசு வழியாக அறிந்தேன். அது பற்றிப் பெரியார் வெளியிட்ட அறிக்கை இத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.*

"புதுக்கோட்டையில் பிரபல வக்கீலாகவும், சமதர்ம வாதியாகவும், பாமர மக்களின் மூடப்பழக்க வழக்கங்களையொழித்து அவர்களைப் பார்ப்பனர்களிடம் ஏமாறாமலிருக்கும்படி செய்ய வேண்டும் என்ற நோக்கமுடையவராகவும் இருந்த திரு. முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ., பி. எல்., அவர்களைத் தமிழுலகம் நன்றாய் அறியும். சென்ற வருஷத்தில் புதுக்கோட்டையில் முனிசிபல் வரி உயர்த்தப்பட்டதன் காரணமாக நடந்ததாகச் சொல்லப் படும் கலகத்தை முன்னிட்டு இதுவரையிலும் அவரைக் கைது செய்து வைத்திருந்தார்கள்.

ஆனால் அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று சமஸ்தானத்தில் உள்ள பிரபலமானவர்களும், வெளியூர் களில் உள்ள சில பிரமுகர்களும் பலமான கிளர்ச்சி செய்து கொண்டு வந்தார்கள். இதன் பயனாக புதுக்கோட்டை அரசாங்கத்தாரும் அவரை விடுதலை செய்ததோடு மட்டும் அல்லாமல் இனி சமஸ்தானத்திற்குள்ளேயே வசிக்கக் கூடாதென, சமஸ்தானத்திற்கு வெளியிற் கொண்டு வந்து விட்டு விட்டார்கள்.

நாட்டின் பொது ஜனங்களால் மதிக்கப்படுகின்ற ஒருவரை உண்மையிலேயே அரசாங்கத்தின் நன்மைக்காக உழைக்கப் பாத்தியமுடைய ஒருவரை இவ்வாறு வெளி யேற்றுவதற்குக் காரணம் பார்ப்பன சூழ்ச்சியைத் தவிர வேறில்லை என்றுதான் நாம் கூற



வேண்டியிருக்கிறது. திரு. வல்லத்தரசு அவர்கள், புதுக்கோட்டையில் உள்ள பார்ப்பனர்கள் கூடிக் கொண்டு செய்த காங்கிர கிளர்ச்சிக்கு விரோதமாகக் கூட்டம் நடத்தினார். காங்கிர கிளர்ச்சி தலையெடுப்பதற்கு விரோதமாக இருந்தார். பார்ப்பனர்களைப் பாமர மக்கள் நம்பி அவர்களுடைய சாஸ்திரங்களுக்கும், மதங்களுக்கும், சடங்குகளுக்கும் கட்டுப்பட்டுக் கிடப்பதை அகற்றப் பாடுபட்டார்.

பார்ப்பனர் சூழ்ச்சியில் ஈடுபட்ட பாமர மக்களைக் கண்விழிக்கச் செய்து பகுத்தறிவுடையவராக்கப் பிரசாரம் பண்ணும் சுயமரியாதை இயக்கத்தில் பற்றுக் கொண்டவ ராயிருந்தார். இதன் பயனாகப் புதுக்கோட்டையில், நமது சுயமரியாதை இயக்கமும், அதி தீவிரமாகப் பரவ ஆரம்பித்தது. இக்காரணத்தால் அந்தச் சமஸ்தானத் திலுள்ள பார்ப்பனர்கள் அனைவரும் அவர்மேல் துவேஷமும், பொறாமையுங் கொண்டு, அவரை எப்பொழுது அழுத்தலாம் என்று சமயம் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்குப் புதுக்கோட்டை கலகமே ஒரு காரணமாக அகப்பட்டது. எப்படியோ எந்தக் காரணத்தாலோ, யார் வைத்த கொள்ளியோ வீடு வெந்து போயிற்று. அரசாங்கத்தாரும், ஒரு நல்ல தோழரை வெளியேற்றி விட்டார்கள் என்று நாம் வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை.

ஆனால் திரு. வல்லத்தரசு அவர்களை வெளியேற்றி விட்டதினால், புதுக்கோட்டையில் சமதர்மக் கொள்கை பரவவொட்டாமல் செய்து விடலாம் என்று வீண் எண்ணங் கொண்டிருக்கும் பார்ப்பனர்களின் எண்ணம் பயனற்றது என்பதை மாத்திரம் கூறுகிறோம். இனிதான் அந்த சமஸ்தானத்தில் நமது இயக்கக் கொள்கைகள் அதி தீவிரமாகப் பரவுமென்பதைக் கூறுகிறோம். இறுதியாகத் திரு. வல்லத்தரசு அவர்களும், தம்மை சமஸ்தானத்தார் வெளியேற்றியது பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தமது கொள்கையாகிய சமதர்ம ஊழியத்தைத் தளர்ச்சியின்றி பிரிட்டிஷ் இந்தியாவில் புரிந்து புகழ்பெறுமாறு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பார்ப்பன ஆதிக்கம் பெற்ற சுதேச சமஸ்தானத்தில், சமதர்ம நோக்கமுடைய ஒரு பார்ப்பனரல்லாதார்க்கு நேர்ந்த கதியைப் பார்த்தவர்கள், இந்தியாவில் பார்ப்பன ஆதிக்கம் நிறைந்த சுயராஜியம் ஏற்படுமாயின் சமதர்ம நோக்கமுடைய நம் போன்றவர்களுக்கெல்லாம் என்ன கதி நேருமென்பதைச் சிந்தித்துப் பார்க்கும்படி தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

*குடி அரசு - துணைத் தலையங்கம் - 24.01.1932*



டாக்டர் ஜெயராமன், அ.பெ.கா நூலகம், புதுக்கோட்டை

# நான்காவதும் பெண் என்றால்?

கடந்த திங்கள்கிழமை 19-08-2018 அன்று தென்தமிழ் நாட்டில் உள்ள உசிலம்பட்டி என்ற ஊரில் வசித்து வந்த 28 வயது நிரம்பிய இராமுத்தாய் ஏற்கனவே மூன்று பெண் குழந்தைகளுக்குத்தாயாக இருந்து வரும் பெண், நான்காவது குழந்தைக்கு ஏழுமாதம் கர்ப்பிணி. நான்காவது குழந்தையும் பெண்ணாகப் பிறந்துவிடக்கூடாது என்பதால் தவறான கருக்கலைப்புச் செய்ய உடன்பட்டு இறந்து விட்டாள். மருத்துவர்கள் கருக்கலைப்புச் செய்ய மறுத்துவிட்ட நிலையில் செவிலியர் ஒருவர் கருக்கலைப்புச்செய்த போது மரணமடைந்து விட்டார்.

இது எல்லா காட்சி ஊடகங்களிலும் செய்தியாக வந்து விட்டது. பிணக்கூராய்வில் கருக்கலைப்பு செய்யப்பட்ட சிசு ஆண் குழந்தை என்று உறுதியாகி உள்ளது. ஊடகத்தில் பேட்டி கொடுக்கின்ற பெரியவர் ஒருவர் கூறுகிறார் “ஸ்கேன் சென்டரில் ஆணா பெண்ணா என்று பார்த்துச் சொல்லும் டாக்டரை தூக்கில் போட வேண்டும்” என்று ஆதங்கப்பட்டார்.

தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஸ்கேன் சென்டரிலும், இந்த சென்டரில் ஆண்பெண் பார்த்துச் சொல்லப்படமாட்டாது. Pre-Natal Diagnostic Techniques Act என்ற பாலினத்தைத் தேர்வு செய்வதைத்தடை செய்யும் சட்டம் 1994ம் ஆண்டு சட்டப்படி இது குற்றமாகும் என்று எழுதப் பட்டிருக்கும்.

“தமிழகம் முழுவதும் குழு அமைத்து ஸ்கேன் சென்டர்கள் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், கருவில் உள்ள சிசுவின் பாலினத்தை கண்டறிந்து கூறினால்கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்” (தீக்கதிர் 21-09-2018 பக்கம்-5 திருச்சி பதிப்பு).

இதற்கெல்லாம் காரணம் கர்பமாகியிருக்கும் பெண்ணின் குடும்பத்தார், அடுத்து பிறக்கப்போகும் குழந்தை பெண்ணாக இருந்துவிட்டால் என்ன செய்வது? எனவே கருவிலேயே அழித்துவிட வேண்டும் என்பதுதான் நோக்கம்.

பெண் சிசுக்கொலை என்பது இன்று நேற்றல்ல. இராஜாராம் மோகன்ராய் காலம் தொட்டு நடந்து வருகின்றது. இந்த பெண் சிசுக் கொலை என்பது கிருத்துவ மதத்திலும், இஸ்லாம் மதத்திலும் இன்றுவரை கிடையாது. இந்து மதத்தில் மட்டும் சாதி வித்தியாசம் பாராமல் நீக்கமர எல்லாச் சாதியிலும் நடந்து வருகிறது. பெண் சிசுக்கொலை கூடாது என்று அரசு விளம்பரம் செய்கிறது. மருத்துவர்களைக் கண்காணிக்கிறது. ஸ்கேன் சென்டர்களைக் கெடுபிடி செய்து கண்காணிக் கின்றார்கள்.

இவ்வளவு நடந்தும் பொதுமக்கள் இன்னும் பெண்ணாக இருந்தால் கருக்கலைப்புச் செய்துவிட வேண்டும் என்பதில் மிகவும் தீர்மானமாக இருக்கின்றார்கள். அரசாங்கத்தின் கெடுபிடி களுக்குப் பயந்து ஏறத்தாழ 90 சதவீத மருத்துவர்கள் பாலினம் குறித்து பேசுவதில்லை. கருக்கலைப்புச் செய்யாதவர்கள் என்று ஊர்ஜிதமாகத் தெரிந்தும் கூட சொல்வது இன்று நடைமுறையில் இல்லை. ஏனென்றால் தெரிந்து கொண்டவர்கள் வாய் சும்மா இருப்பதில்லை. பெண் குழந்தை என்றால் வேண்டாம் என்ற முடிவுக்கு மருத்துவர்களோ, ஸ்கேன் சென்டர்களோ முடிவு செய்வதில்லை. பிறகு ஏன் அவர்களைத்தண்டிக்க வேண்டும்?

இங்கு நாம் சிந்திக்க வேண்டியது, ஆணா, பெண்ணா என்று கேட்பது குற்றமா? இல்லை, ஆணா பெண்ணா என்று சொல்வது குற்றமா? சொல்வதுதான் குற்றம் என்று அரசாங்கம் சொல்கிறது. அதன் விளைவுதான் நிறுவனங்களைக் குற்றவாளியாக்குவது! அரசாங்கத்தின் பார்வையில் கேட்பவர்கள் பக்கம் தவறு இல்லை. கருச்சிதைவு செய்ய அரசும், நிறுவனங்களும் ஒத்துழைப்ப தில்லை. ஆனால் பெண்ணாகப் பிறந்து விட்டால் அதைக் கொல்வதற்கு மருத்துவர்கள் தேவையில்லை. பெற்றவர்களே கணக்கை நேர் செய்துவிடுகிறார்கள்.

தங்களுக்குத்தெரிந்த ஏதோ ஒரு வழியில். அதைத் தடுக்க, தவிர்க்க உருவானதுதான் "தொட்டில் குழந்தை" திட்டம். உனக்குப் பாரம் என்று முடிவு செய்தால் தயவு செய்து உயிர்க் கொலை செய்துவிடாதே. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். சொல்லவும், மனமின்றி வளர்க்கவும் வழியின்றி தொட்டில் குழந்தைத் திட்டத்திற்கு போய்ச்சேருகிறது.

"இராமுத்தாய்" விவகாரத்திற்கு வருவோம். ஏற்கனவே மூன்று பெண் குழந்தைகள், இதுவும் பெண்தான் என்று அவமதிக்கப்படுகின்றாள். இங்கு குழந்தை பெற்றுக்கொள்வது தாயும் தகப்பனும் செய்யும் முடிவல்ல. "நான்காவதும் பெண்ணாகப் போய்விட்டால்"? இராமுத்தாயின் மரணத்திற்குக் காரணமாக இருக்கும் ஒரே கேள்வி இதுதான். பெண் குழந்தை கருக்கலைப்பு, பெண்சிசுக் கொலை இவை அனைத்திற்கும் முன் உள்ள ஒரே கேள்வியும் இதுதான்!

"நான்காவதும் பெண் என்றால்", உயிரைப் பணயம் வைத்து அந்தச் சிசுவை அழிக்க வேண்டிய நிலைக்கு அந்தத் தாய் வந்த காரணம் என்ன? வெறுமனே ஸ்கேன் சென்டர்காரனைப் பிடித்து உலுக்குவதை ஒரு செயல் திட்டமாக அரசு சொல்வதை விட்டு விட்டு நீண்ட தொலைநோக்காக வல்லுநர் குழுக்களை அமைத்துத்தீர்வு காணா விட்டால், இந்துமதத்தின் இந்த மூடப்பழக்கத்தை ஒழிக்கவே முடியாது.

## பெண் சிசுக்கொலை குறித்து நமது கேள்விகள்

1. பெண் குழந்தை பிறந்து விட்டால் அந்தக் குடும்பம் தோஷமாகிவிடுமா?
2. பெண் குழந்தையாக இருந்தால் அந்தக் குழந்தையால் அந்த சம்மந்தப்பட்ட குடும்பம் அழிந்து போய்விடுமா?
3. பெண் குழந்தை என்றால் அறிவற்ற, பொறுப்பற்ற, சமூக இழிவைத்தேடித்தந்து விடுமா?
4. பிறந்து வளரும் போது இது பேயாக மாறிவிடுமோ இல்லை அவலட்சணமாகிவிடுமா?
5. அந்தக்குழந்தை ஒரு கட்டத்தில் தேசத்திற்கு அவமானத்தை உண்டாக்கிவிடுமா?
6. பெண் குழந்தையாகப்பிறந்து விட்டால் வீட்டில் இருப்பவர்களெல்லாம் செத்து விடுவார்களா?
7. பெண் குழந்தையாக இருந்தால் சமூகத்திலிருந்து அந்தக்குடும்பம் விலக்கிவைக்கப்பட்டுவிடுமா?
8. பெண் குழந்தையாக இருந்தால் ஊருக்கு அவமானமா?
9. பெண் குழந்தை வளர வளர ஊனமாகிவிடுமா?
10. பெண் குழந்தை வாழத் தகுதியற்றதா?

மேலே உள்ளவற்றைத்தவிர வேறு என்ன காரணம்? ஸ்கேன் சென்டர்களை நொங்கி எடுக்கின்ற அரசுகள் இந்த கேள்விகள் குறித்து விவாதித்தது உண்டா? இவை எதுவும் இல்லை என்றால் வேறு சமூகக்காரணம் என்ன?

சமூகக்காரணம் : பெற்றுக்கொள்ளும் தாய்க்கு - அந்தக் குடும்பத்திற்கு

இதைத்தவிர அந்தப் பெண்ணின் உறவினர்க்கோ, சமூகத்திற்கோ சார்ந்துள்ள சாதி இனக்குழுவிற்கோ எந்தப்பிரச்சினையும் இல்லை.

## இந்து தாயின் பிரச்சினை

ஆம்பளைப் பிள்ளை பெற்றுக்கொடுக்கும் தகுதியற்றவள், வக்கற்றவள், உபயோகமற்றவள், கொள்ளி வைக்க வாரிசு தரமுடியாதவள். ஏற்கனவே ஆண்வாரிசு இல்லாத வீட்டிலிருந்து கட்டிவந்தது தப்பு என இப்போதுதான் புரிகிறது. வேறு வழியில்லை. இவளை விரட்டிவிட்டுட்டு இன்னொரு கல்யாணம் செய்ய வேண்டியதுதான். இல்லையென்றால் இவள் இருக்கட்டும். ஆண் பிள்ளை பெற்றுக்கொள்ள இன்னொரு திருமணம் தான் தீர்வு.

## குடும்பத்திற்கு தொல்லை

ஏற்கனவே மூன்று பெண் இதோடு நான்கு. நான்கு பேரையும் படிக்க வைக்கனும், நல்ல

இடத்துல கல்யாணம் செய்து கொடுக்கனும். எவ்வளவு குறைந்தபட்சம் கணக்குப்பார்த்தாலும் நம்ம சாதியிலே ஒரு எலக்ட்ரீசியனுக்கு கட்டிக் கொடுத்தாலும் நான்கு பேருக்கும் குறைச்சலா 60 இலட்சம் தேவைப்படும். காதல் கல்யாணம் என்று பார்த்தால் இந்த அளவு செலவு வராது.

ஆனால் காதல் கல்யாணம் செய்ய பெத்தவங்க நாம ஒத்துக்கிட்டாலும் நம்ம சாதிக்காரன் விட மாட்டான். கேவலமாக காரித்துப்பவான். முதல் பிரச்சினையே ஆண் வாரிசு இல்லாத வீடுன்னு சொந்தக்காரனே பெண் எடுக்க மாட்டான். பொண்ணு சிவப்பா இருந்தாலும் கொஞ்சம் முன்னே பின்னே செய்ய ஒத்துக்கிறுவானுக.

நம்ம நெறமே கரிக்கட்டை மாதிரி. நம்ப புள்ளைகளைச் சொல்லவே வேணாம். புள்ளைங்க வளர்ந்த பிறகு வச்சுக்கிட்டு அவமானப்படுறதை விட சிசுவிலேயே கொன்று விட்டால் மனசு ஆறிப் போயிரும். ஏற்கனவே மூணு இருக்கு. இதுகளைக் கரை சேர்க்கிறதுக்கே வழியில்லை!

இந்தக்காரணங்களைத் தவிர வேறு என்ன காரணம் இவர்களை இந்த முடிவுக்கு கொண்டு செல்கிறது? சுகாதாரத்துறை அமைச்சருக்கும், இந்த மாநிலத்தை ஆளுகிற முதலமைச்சருக்கும், சமூக சிந்தனையாளருக்கும் இது தெரியாதா?

இந்து மதத்தின் உட்சபட்ச பீடம் என்று வர்ணிக்கப்படுகின்ற சங்கரமடத்திலிருந்து இந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வு? மருத்துவமனை களையும், பாலினம் கண்டு பிடிக்கக்கூடிய ஆய்வு நிலையங்களையும் மிரட்டினால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என யார் எண்ணினாலும் "கல்யாண வீட்டில் சீப்பை ஒளித்து வைப்பது" என்பதற்கினையான முடிவு தான் அது.

இந்து மதச்சட்டங்களும், இது வகுத்து வைத்திருக்கின்ற வழி முறைகளையும் தகர்க்காமல் அழுகிச்சீர் பிடித்து நாறும் தொழுநோய்க்கு, வெளிப்புறத்தில் வாசனை திரவம் தெளிப்பதற்குச் சமமானதுதான். பெண் சிசுக்கொலையைத் தடுக்க வேண்டுமென்றால் இந்துத் திருமண நடை முறைகளை மாற்றியமைக்க வேண்டும். வரதட்சனை வாங்குவது சட்டப்படி குற்றம் என்று பேப்பரில் உள்ள

சட்டம் சமரசமின்றி நூறு சதவீதம் நடைமுறைப்படுத்த வேண்டும். வரதட்சணை போலவே சீதனம் கொடுப்பதும் வாங்குவதும் அனைத்துத் திருமணங்களிலும் தடை செய்யப்பட வேண்டும். திருமண நடைமுறைகள் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும். தீருமண செலவின கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். காவல் துறையில் இது தனி அமைப்பாக Wing இருக்க வேண்டும். ஆடம்பரத்திருமணங்கள் சட்டப்படி குற்றமாக்கப்பட வேண்டும்.

இந்தச் சட்டங்கள் மதவாதிகளின் மனதை எதுவும் செய்துவிட வாய்ப்பில்லை. எனவே அரசாங்கம் துணிவுடன் நடைமுறைப்படுத்த வேண்டும். இதுபோன்ற திருமண அவலங்கள்தான் பெண்சிசு கருக்கலைப்பு, பெண் சிசுக் கொலை என்ற நிலைக்குக் கொண்டுபோய் அப்பாவி மக்களைக் கிரிமினல் குற்றவாளியாக்குகிறது. ஆண், பெண் விகிதாசாரத்தில் தற்போது பெண்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்து விட்டது. இந்த நிலை நீடித்தால் என்ன நடக்கும் என்பதை வல்லுநர்கள் கூடி முடிவு செய்ய வேண்டும்.

டாக்டர் அம்பேத்கர் வலியுறுத்திய அகமண முறைத் திருமணம் தடை செய்யப்பட வேண்டும். காதல் மற்றும் சாதிமறுப்புத்திருமணங்களை அரசு சட்டமியற்றி ஊக்குவிக்க வேண்டும். இப்படி சாதி மறுப்புத்திருமணம் செய்து கொள்பவர்கள் அனை வருக்கும் கணவன் அல்லது மனைவிக்கு கல்விக் கேற்ற வகையில் திருமணமான மூன்று மாதங்களுக்குள் அரசுஉத்தியோகம் உறுதி செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளின் குழந்தைகளுக்கு சிறப்பு உபகாரச் சம்பளமும் உயர்கல்விக்கு இடஒதுக்கீடு - முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இரண்டு பெண் குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் தம்பதிகளுக்கு அரசு உத்தியோகங்களில் கூடுதல் ஆண்டுச்சம்பள உயர்வு (Increment) வழங்கி உற்சாகப் படுத்தப்பட வேண்டும்.

கிராமப்புறங்களில் இரண்டு பெண் குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் தம்பதிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகையாக ஒரு இலட்சம் பணமும், இரண்டு ஏக்கர் நிலமும் வழங்கப்பட வேண்டும். கட்டாயமாக இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்வது சட்டப்படி குற்றம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

சவூதி அரேபியாவில் கர்பமான 9 வது வாரத்திலேயே பெற்றோர்களிடம் வயிற்றில் வளர்வது, ஆணா பெண்ணா என்று கூறிவிட்டு மருத்துப்பதிவேடுகளில் முதல் பக்கத்திலேயே எழுதிக் கொடுத்துவிடுவது இன்றும் வழக்கத்தில் உள்ளது. இந்த செயல்திட்டம் நம் நாட்டிலும் வர வேண்டும்.

இதுபோன்ற ஆக்கபூர்வமான திட்டங்களை செயல்படுத்தாமல், வெறுமனே பயனற்ற சட்டங் களைக் கடுமையாக்குவதில் எக்காலத்திலும் பயன் தராது. அரசாங்கம் பெண் குழந்தையைப் பெற்றுக் கொள்பவர்களின் வாழ்க்கையில் நம்பிக்கையைப் புகுத்த வேண்டும் இல்லையெனில் இன்று இராமுத்தாய் நாளை வேறு ஒரு தாய்...

"பெண் தெய்வங்களை வணங்கினால் போதாது
பெண் குழந்தைகளை வணங்க வேண்டும்
நாகரீக மனித இனத்தின் அடையாளம் பெண்கள்"



# புறக்கணிக்கப்பட்ட வீரர்கள்

தமிழில்: பேராசிரியர் கிரண்குமார்

**பாதாளச் சாக்கடையைச் சுத்தம் செய்யும் ஒரு தொழிலாளியாய் இருப்பதைவிட காஷ்மீரில் சண்டையிடும் ஒரு இராணுவ வீரராய் இருப்பது தான் பாதுகாப்பானது.**

*இந்த வருடத்தில் மட்டும் கிளர்ச்சியின் விளைவாக 54 பாதுகாப்பு வீரர்கள் கொல்லப் பட்டதைப் போலவே ஏறத்தாழ 90 பாதாளச் சாக்கடைச் சுத்தம் செய்யும் துப்புரவுத் தொழிலாளிகளும் இறந்திருக்கின்றனர்.*

*நகர்புற இந்தியாவில் இருக்கும் ஒரு பாதாளச் சாக்கடைக் குழிக்குள் இறங்கி, சுத்தம் செய்யும் தொழிலாளியின் வேலையில் இருக்கும் ஆபத்தும், ஜம்மு - காஷ்மிரில் நடக்கும் கிளர்ச்சிக்கு எதிராகப் போராடும் பாதுகாப்பு வீரர்களுக்கு இருக்கும் ஆபத்தும் ஏறத்தாழ ஒன்றுதான். குறைந்தபட்சம் கடந்த எட்டு வருடங்களில் மட்டும் பாதாளச் சாக்கடை சுத்தம் செய்யும் துப்புரவுத் தொழிலாளர் களின் இறப்பு எண்ணிக்கையும் பெரும் ஆபத்துகள் சூழப்பட்ட மாநிலங்களில் தரையிறக்கப்பட்ட பாதுகாப்புப் படைகளின் இறப்பு விகிதமும் ஒன்றாகத்தான் உள்ளது.*

*தீவிரவாதத்தால் ஏற்படும் உயிர் சேதங்களை பதிவு செய்யும் தெற்காசிய தீவிரவாதத்தைப் பற்றிய வலைதள (South Asia Terrorism Portal) பதிவின்படி 2010-ஆம் ஆண்டிலிருந்து ஆகஸ்டு 27, 2017 ஆம் வரையிலும் ஜம்மு - காஷ்மிரில் 4 1 1 பாதுகாப்புப் படைவீரர்கள் இறந்துள்ளார்கள். அதன்படி பார்த்தால், 2010 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிற்கும் 51 படைவீரர்கள் ஜம்மு -காஷ்மிரில் நடக்கும் கிளர்ச்சியில் பலியாகிருக்கிறார்கள்.*

*மகசேசே (Magsaysay) விருது வென்ற பெஸ்வாடா வில்சனின் (Bezwada Wilson) Safai Karmachari Andolan என்னும் துப்புரவு தொழிலாளி களுக்காகப் போராடும் அமைப்பு சேகரித்த தகவலின் அடிப்படையில், சுத்தம் செய்வதற்காக மிகவும் மோசமான நிலையில் இருக்கும் பாதாளச் சாக்கடைக் குழிக்குள் குதிக்கும் தொழிலாளிகளைப் பிணங்களாகத்தான் மீட்டெடுத்திருக்கிறார்கள் என்கிறது அந்த அமைப்பின் தரவு. 2010 ஆம் ஆண்டிலிருந்து இது போன்று 356 இறப்புகள் அல்லது ஒவ்வொரு வருடமும் 44 இறப்புகள் நடந்துள்ளது.*

*2017 ஆம் ஆண்டில் இந்த வருடாந்திர சராசரி மதிப்பீடு மேலும் அதிகரித்தது. இதுவரை இந்தியாவின் பாதாளச் சாக்கடை அமைப்பானது 90 பேரைக் கொன்றுள்ளது. ஒப்பீட்டு வேறுபாடு அடிப்படையில், தீவிரவாதிகளுடன் நடந்த சண்டையில் 54 பாதுகாப்பு படைவீரர்களும் இறந்துள்ளனர்.*

*அதன் பின்னர் மறுபடியும், நாடுமுழுவதிலும் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை தீவிரவாதிகளோடு நடந்த தாக்குதலில் மொத்தம் 171 இராணுவ வீரர்கள் "வீரமரணம்" அடைந்துள்ளனர் என்று முன்னால் இராணுவப் பாதுகாப்புத் துறை மந்திரி மனோகர் பாரிக்கர் 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றக் கேள்விக்குப் பதில் அளித்தார். அதே காலகட்டத்தில் மொத்தம் 142 பாதாளச் சாக்கடை சுத்தம் செய்யும் தொழிலாளர்கள் இறந்துள்ளனர்.*

*பாதாளச் சாக்கடைக்குள் இறந்தவர்களின் எண்ணிக்கையை பற்றிய குறைந்த தகவல்களே Safai Karmachari Andolan அமைப்பிடம் உள்ளது. முதலாவதாக, அந்த அமைப்பு 21 மாநிலங்களையும் யூனியன் பிரதேசங்களையும் மட்டுமே பதிவு செய்துள்ளது. ஒட்டு மொத்த 36 மாநிலங்களையும் பதிவு செய்யவில்லை. இன்னொரு விதத்தில், ஆண்டலோன் அமைப்பும் உதவியற்ற நிலையில் தான் இருந்தது. காரணம், 2014 ஆம் ஆண்டிலிருந்து தான் அந்த அமைப்பு தரவுகளையே சேகரிக்கத் தொடங்கியது.*

*அந்த வருடத்தில், எந்தவிதப் பாதுகாப்பு உபகரணங்களும் கொடுக்காமல் மனிதர்களைச் சாக்கடைக் குழிக்குள் இறக்கியதற்காக மத்திய மற்றும் மாநில அரசுக்கு எதிராக உச்ச நீதிமன்றம் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்தது. மேலும் பணியின் போது பாதாளச் சாக்கடை சுத்தம் செய்யும் போது இறந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு பத்து லட்சம் கொடுப்பதற்கான ஆணையையும் பிறப்பித்தது.*

*அதன் பின்னர், ஆண்டலோன் அமைப்பு பாதாளச் சாக்கடையில் இறந்தவர்களின் பட்டியலை வகைப்படுத்தினார்கள். ஏனென்றால், இறந்த துப்புரவுப் பணியாளர்களின் குடும்பங் களுக்கு 10 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டதை உறுதி செய்வதே அவர்களின் முக்கியமான பணியாகும். இறந்தவர்களின் இறப்புச் சான்றிதழ் மற்றும் உடற்கூறாய்வு சான்றிதழைப் பெற்ற பிறகுதான் ஆண்டலோன் அமைப்பின் தன்னார்வலர்கள் அந்த*

இறப்பை ஆவணப்படுத்துகிறார்கள். தனிப்பட்ட பதிவுகள், வெளிப்படையாகவே ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆதாரப்பூர்வமான தகவலைத் தருவதில்லை. இந்தத் தகவல்தளம் 1987-ஆம் ஆண்டிலிருந்துநடந்த இறப்புகளைப் பதிவு செய்துள்ளது.

ஏன் சமீபகாலமாகப் பாதாளச் சாக்கடை சுத்தம் செய்யும் தொழிலாளிகளின் இறப்பு விகிதம் அதிகரித்துவருகிறது என்று மிகத் துல்லியமாக கணக்கிடப்பட்டுள்ளது. ஆண்டலோன் அமைப்பு கண்டுகொண்டதன்படி, இறப்புச் சான்றிதழையும் உடற்கூறாய்வு அறிக்கையும் இறந்தவர்களின் குடும்பத்தினர் தவறுதலாக எங்கேயோ வைத்திருக்கக்கூடும் அல்லது அந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களைக் கண்டுபிடிக்க இயலாமல் போயிருக்கும். காரணம், அவர்கள் குடும்பத்தின் வாழ்வாதாரமாகியவர்களே இந்த சாக்கடைக் குழிக்குள் மூச்சுத்திணறி இறந்ததற்குப் பின்னர் அந்தக் குடும்பம் தங்களின் வாழ்விடத்தைவிட்டு வெளியேறிவிட்டனர்.

**சாவுக் குழியில் வேலை**

புள்ளியியல் அடிப்படையில், பாதாளச் சாக்கடை சுத்தம் செய்யும் தொழிலாளியைவிட காஷ்மிரில் பணிபுரியும் இராணுவ வீரர் மிகவும் பாதுகாப்பாகத் தான் உள்ளார். காஷ்மீரில் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை 156 லிருந்து 160 இராணுவ வீரர்கள் இறந்திருக்கலாம் என்று இராணுவ ஆதாரங்களைக் கொண்டு வெவ்வேறு ஊடகங்கள் தங்களுடைய அறிக்கையில் ஒரு மதிப்பீட்டை வழங்கியது. அதே காலக்கட்டத்தில் தான் நகர்புற இந்தியாவின் பாதாளச் சாக்கடையமைப்பு 202 தொழிலாளிகளை மூச்சுத் திணறடித்துத் கொலை செய்துள்ளது.

ஒரு சிக்கலான வலையமைப்பைக் கொண்ட தீவிரவாதிகள் இந்திய இராணுவ வீரர்களைக் குறிவைத்துத் தாக்கிக் கொன்றுவிடுகின்றனர். பெரும்பாலான நேரத்தில் இந்திய எல்லையைக் கடந்து துப்பாக்கியால் சுடுவதற்கும் உயிர்களைக் கொலை செய்வதற்கும் இந்தத் தீவிரவாத வலையமைப்பை பாகிஸ்தான்தான் ஊக்கு விக்கின்றது. பாதாளச் சாக்கடையயைச் சுத்தம் செய்து அதைத் தொடர்ந்து தடையின்றி ஓட செய்யும் தொழிலாளிகளை இந்தப் பாதாளச் சாக்கடையின் வலையமைப்பு மூச்சுத் திணறலுக்கு உள்ளாக்குகிறது. இந்த நகர்புற இந்தியா இப்படித் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது.

ஒரு தேசத்தின் பார்வையில் இருந்து, ஒரு இராணுவ வீரரின் மரணத்தை நினைத்துப் பெருமைப்பட வேண்டும். அவரை ஒரு தியாகியாக வணங்கி, அவருடைய சவப் பெட்டியை மூவர்ணக் கொடிகளால் போர்த்தி அவரின் உடலை எரியூட்டுவதற்கு முன்போ அல்லது புதைப்பதற்கு முன்போ துப்பாக்கிக் குண்டுகள் முழங்க மரியாதை செய்கிறோம். அந்த மரியாதையைப் பெறுவதற்கு அவர் தகுதியுடையவர் ஆகிறார். அனைத்திற்கும் மேலாக அவர் நம்மைப் பாதுகாப்பதற்காக அவர் இறந்திருக்கிறார்.

சுத்தம் செய்வதற்காகச் சாக்கடைக் குழிக்குள் இறங்கி இறந்த மனிதர்களைப் பற்றி யாரேனும் எண்ணியதுண்டா?அவருடைய இறப்பானது சமீபத்தில் டெல்லியில் நடந்த இரண்டு இறப்புகளைப் போல மிகவும் மோசமான வழக்கத்திற்கு மாறுபட்ட இறப்பாக இல்லாவிடில் அந்தத் தொழிலாளி நகர்புறப் செய்தித்தாள்களில் ஒரு சில பத்திகளைப் பெறுவதற்கே தகுதி யுடையவராகிறார்.

இவர் இந்திய தேசியவாதத்தில் ஒரு முக்கியமான பேசும் அடையாளமாக உறுதியாக இருக்க முடியாது. அந்தச் சாக்கடைக் குழியின் நச்சுத்தன்மை வாய்ந்த நாற்றத்தோடு அந்த எண்ணமும் அருவெருப்பாகிவிடுகிறது. ஒருவேளை இதனால் தான் பாதாளச் சாக்கடையைச் சுத்தம் செய்யும் தொழிலாளியின் புகைப்படங்கள் ‘தூய்மை இந்தியா’ திட்டத்தின் விளம்பரப் பிராச்சாரங்களில் இடம்பெறுவதில்லை.

இது வெறும் இறப்பைப் பற்றி மட்டுமல்ல என்றும், மனிதர்கள் வாழுவதற்கு ஏற்ற சூழலில்லாத பகுதியில் பணியமர்த்தப்படும் இராணுவ வீரர்களைச் சுட்டிக் காட்டி இதை வாசிப்பவர்கள் கூறலாம். உதாரணத்திற்கு, சியாச்சின் மலைப் பகுதியில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு பாதுகாப்பு படைவீரர்கள் இறக்கின்றனர். சமூகத்திலிருந்து தனிமையில் வாழ்கின்றனர், குடும்பத்தினரிடம் இருந்து வெகு தொலைவில், அவர்கள் விளிம்பில் வாழ்கின்றனர். ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 100 படைவீரர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர் என்று சொல்லப்படுகிறது. 2012 ஆம் ஆண்டு மற்றும் 2013 ஆம் ஆண்டில் வழக்கமாக நிகழும் படைவீரர்களின் இடமாற்றத்தின் போது ஏற்பட்ட விபத்தின் போது மட்டும் 300 வீரர்களின் உயிரைப் பலிகொண்டது.

ஆனால், மீத்தேன், ஹைட்ரஜன் சல்பைட், கார்பன் டை-ஆக்ஸைடு மற்றும் கார்பன் மோனாக்ஸைடு போன்ற விஷவாயுக்களை சுவாசித்து மனிதக் கழிவுகளின் நடுவில் வெறும் கோவணத்தோடு சாக்கடைக் குழிக்குள் இறங்கி அந்தக் குழியில் ஏற்பட்டிருக்கும் அடைப்பைச் சரிசெய்வதைவிட சியாச்சின் மலைத்தொடர்களில் பணிபுரிவது ஒரு கடினமான காரியமாக இருக்க முடியாது.

அதற்கென பிரத்யோக ஆடையில்லை, முகமூடியில்லை, ஆக்சிஸன் சிலிண்டர்கள் இல்லை, இன்னும் மோசமாக குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து அந்தச் சாக்கடைக் குழியைச் சுத்தம் செய்வதைப் பற்றி எவருமே சிந்திப்பதில்லை. இந்த மனிதத் தன்மையற்ற பணிச்சூழலில் உயிர்வாழ்வதற்கு ஒரே வழி மதுவின் மூலம் புலன்களை உணர்விழக்கச் செய்வது தான்.

*Scroll.in க்கு வில்சன் கொடுத்த தகவலின்படி,*

*"சரியான ஆய்வறிக்கை இல்லாவிடினும், 90 சதவிகித தொழிலாளிகள் மதுவுக்கு அடிமையாகியுள்ளார்கள். பலபேர் சிறுவயதிலேயே இறந்து விடுகிறார்கள் அதிலும் நகராட்சியால் பணியமர்த்தப்படும் ஒரு சிலர் மட்டுமே தங்களுடைய ஓய்வு வயது வரை வாழ்கின்றனர்".*

*தினப்படி மற்றும் சலுகைகள் போக இந்திய இராணுவப் படைவீரர் மாதம் ரூபாய் 25,000 பெறுகிறார், மாறாக நகராட்சிகளால் பணியமர்த்தப்படுபவர்களுக்கு மாதம் 10,000 லிருந்து 15,000 வரை கிடைக்கும் என்று வில்சன் கூறினார். தற்போது இவர்களின் வேலைகளும் தனியார் ஒப்பந்தக் காரர்களிடம் ஒப்படைக்கப்படுவதன் மூலம் இவர்கள் வேலையிழக்கின்றனர். மேலும், ஒப்பந்தக் காரர்கள் 4,000-லிருந்து 6,000 ரூபாய் வரை என அவர்கள் நினைத்ததைத் தான் கொடுக்கின்றனர்.*

*எல்லாவற்றிற்கும் மேலாக, அந்த நாட்டின் அதிகார வர்க்கம் தான் ஒருவருடைய பணியையும் இறப்பையும் சிறப்புக்குரியதாக உருவாக்குகிறது.*

**தவறான தேசியவாதம்**

*உண்மையில், யாரலெல்லாம் தங்களுடைய பல்கலைக்கழத்தினுள் இராணுவ பீரங்கியை நிறுத்தி, அங்கிருக்கும் இளைஞர்களுக்கு இராணுவத்தின் நற்பண்புகளை வியந்து பாராட்ட நினைக்கிறார்களோ அவர்கள், இத்தனை வருடமும் 'தூய்மை இந்தியா' திட்டத்தில் துரதிர்ஷ்டவசமான பாதாளச் சாக்கடை சுத்தம் செய்யும் தொழிலாளியாக வேலை செய்யும் ஒருவருக்கு சிறிய அளவிலான நன்றியையும் தெரிவிக்க அறிவுறுத்தப்படுகிறது.*

*ஒருவேளை இவர்களுடைய தியாகங்கள் இல்லாமல் கூட இந்தியாவால் தொடர்ந்து இயங்கமுடியும் என்று அவர்கள் எண்ண முடியும். அந்தத் தொழிலாளிகளின் உணர்வுகளை உணராமல் இருப்பது என்பதே ஒரு குற்றச் செயல். இதோ பிரிவினைக் காலகட்டத்தில் நடந்த கதையொன்று அவர்களின் இந்த எண்ணைத்தைப் தெளிவாக்கும்.*

*ஆகஸ்டு 17, 1947 ஆம் ஆண்டு ராட்கிளிஃப் கோடு (Radcliff line - இந்தியா பாகிஸ்தான் இடையேயான எல்லைக்கோடு. (பஞ்சாப் மற்றும் வங்காள எல்லைகள்) அறிவிக்கப்பட்டதன் விளைவாக, இந்தியாவில் நல்ல வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பாகிஸ்தானில் உள்ள தலித்துகள் இந்தியாவில் குடியேறத் தொடங்கினார்கள்.*

*The Other Side of Silence: Voices from the Partition of India என்னும் புத்தகத்தில் ஊர்வசி பட்டாலியா (Urvashi Butalia) எழுதியிருப்பதன்படி, "அவர்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் நிவாரணச் சலுகைகள், வீட்டுக் கடன், வேலைகள் என்று ஆசைக்காட்டியது இந்தியா, அதே நேரத்தில் இந்தியாவில் வாழ்வது எவ்வளவு கடினமாக இருந்தது என்பதை நினைவுப்படுத்தி பாகிஸ்தான் அவர்களைத் தடுப்பதற்கு முயற்சி செய்தது..."*

*பாகிஸ்தானில் உள்ள சிந்து மாகாணத்தில் வாழ்ந்து கொண்டிருந்த தலித்துகளுக்கு கடல் வழியான பயணம் மட்டுமே மிகவும் சுலபமானதாகவும் வசதியாகவும் இருந்தது. ஆனால், ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தான் கராச்சியிலிருந்து இந்தியாவிற்கு கப்பலில் மக்கள் செல்ல முடியும் என்னும் வரையறையைப் பாகிஸ்தான் அரசு கொண்டு வந்தது. காரணம், கப்பல்கள் மற்றும் சரக்கு கப்பல்களின் தட்டுப்பாடே முக்கியயமாக இருந்தது. அதனால், ஒரு பெரும் எண்ணிக்கையிலான தலித்துகள் இந்தியாவிற்குச் செல்வதற்காக கராச்சியின் பயண முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.*

*அவர்கள் வேலை செய்யத் தவறியதன் விளைவு, கராச்சியின் கழிவுநீர் மற்றும் சுகாதார அமைப்பு இரண்டுமே தகர்ந்து போனது. மிக வேகமாக அந்த நகரம் முழுவதும் ஒரு நாற்றமடிக்கும் ஒரு குப்பைக் குவியலாக மாற ஆரம்பித்தது. இதன் விளைவாக சிந்து அரசாங்கம் அத்தியாவசிய சேவைகள் பராமரிப்புச் சட்டம் (Essential Services Maintenance Act) என்ற சட்டத்தைக் கொண்டு வருவதற்குத் தூண்டுகோலாய் இருந்தது. தலித்துகள் பாகிஸ்தானில் இருந்து வெளியேறுவதற்கு அந்தச் சட்டம் அனுமதி மறுத்தது. இந்திய அரசியல் வர்க்கத்தினர் கோபத்தில் பொங்கியெழுந்தனர். ஆனால், எந்தவித பயனும் இல்லை.*

*1952 ஆம் ஆண்டு தேர்தல் பிராச்சாரத்தின் போது இந்த நிகழ்வை பற்றி பி.ஆர். அம்பேத்கர் நினைவு கூறுகிறார்,*

> **"தேசப்பிரிவினை நடந்த உடனேயே, அட்டவணைச் சாதிகள் பாகிஸ்தானிலிருந்து இந்தியா செல்வதற்குத் தடையாணை பிறப்பித்தது பாகிஸ்தான் அரசு. இந்துக்கள் வெளியேறுவதைப் பற்றியெல்லாம் பாகிஸ்தானுக்குக் கவலையில்லை, ஆனால், தீண்டத்தகாதவர்கள் பாகிஸ்தானை விட்டு வெளியேறிவிட்டால் பிறகு அங்கிருக்கும் துப்புரவாளர்கள், சுத்தம் செய்பவர்கள், பங்கிஸ் என்னும் இன மக்கள் மற்றும் இதர தாழ்த்தப்பட்ட சாதிகளின் 'அழுக்கடைந்த' வேலைகளை யார் செய்வது என்பதைப் பற்றி தான் வருத்தம்."**
>
> *- தோழர் அம்பேத்கர்*

*அப்போதைய இந்திய பிரதம மந்திரியான ஜவஹர்லால் நேருவிடம் போதுமான நடவடிக்கை எடுக்கக் கோரி வேண்டுகோள் விடுத்ததாக அம்பேத்கர் கூறினார். மேலும்,*

***"பாகிஸ்தானிகளிடம் நடந்த பல்வேறு விவாதங்களின் போதும் யதார்த்தமாகக் கூட அவர் இந்தத் பிரச்சினைகளைப்பற்றி குறிப்பிடாமல் தூங்கிப் போனார்"** என்று அம்பேத்கர் குற்றஞ்சாட்டுகிறார். மேலும்,*

***"காங்கிரஸில் உள்ள எந்த ஹரிஜன்களும் பாகிஸ்தானில் உள்ள தங்களின் உடன்பிறந்தவர்களுக்கு நடக்கும் இந்தஅடக்குமுறையை எதிர்த்து ஒரு விரலைக் கூட உயர்த்தவில்லை"** என்றும் சுட்டிக் காட்டினார்.*

எழுபது வருடம் கழித்து, அன்றைக்குத் தீண்டதகாதவர்களாய் இருந்த சமூகத்தைச் சேர்ந்த மக்கள் தான் இன்றும்கூட நகர்புற இந்தியாவின் பாதாளச் சாக்கடைக்குள் மூச்சுத் திணறி இறக்கப்பட்டுக் கொல்லப்படுகின்றனர். உயரத்தில் மூவர்ணக் கொடியைப் பல்கலைகழகங்களில் பறக்கவிட்டு இராணுவ பீரங்கியையும் நிறுத்த வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள், 'தூய்மை இந்தியா' திட்டம் என்பது ஒரு கட்டியெழுப்ப வேண்டிய ஒரு புரட்சி என்று தவறான நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் யாரும் பாதாளச் சாக்கடையினுள் இறங்கிச் சுத்தம் செய்வதற்கோ அந்தத் தொழிலாளிகளின் இறப்பைப் பற்றி பேசுவதற்கோ தயாராக இல்லை. - நன்றி: ***Scroll.in***

## பாம்போரில் வீரமரணம் அடைந்த இராணுவ வீரர் கீழ் ஜாதி என்பதால் அவரின் இறுதிச் சடங்கு அந்த கிராமத்திலிருந்த மேல் ஜாதியினரால் தாமதப்படுத்தப்பட்டது என்று முடிவுக்கு வரும் இந்த மூடத்தனம்?

**– அபிஷேக் சாக்சேனா**

இந்த நாடு எப்பொழுதுமே கற்றுக் கொள்ளப் போவதில்லையென்றே தெரிகிறது. ஸ்ரீநகர் அருகில் உள்ள பாம்போர் என்னும் இடத்தில் தீவிரவாதி களின் தாக்குதலில் கொல்லப்பட்ட சி.ஆர்.பி.ஃப் ஜவான்களின் மரணத்தால் கூட நம்மை ஒரு ஒற்றை தேசமாக ஒன்றிணைய முடியவில்லை. இந்த முறை ஜாதிய வேறுபாடு நம் நாட்டை இழிவு படுத்தியிருக்கிறது.

எல்லைப் பகுதியிலிருக்கும் தீவிரவாதிகள் நம்மைத் தூண்டிவிடுகின்ற நேரத்தில் ஒட்டு மொத்த நாடும் ஒற்றுமையாயிருந்து இழப்புக்காக வருந்த வேண்டிய அவசியமுள்ள நிலையில் உத்திரப் பிரதேசத்தில் ஃபிர்சோபாத் என்னும் மாவட்டத்தில் உள்ள நாக்லா கெவால் என்னும் கிராமம் இன்றும் கூட ஜாதிய நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது தெளிவாக வெளியுலகுக்கு தெரிந்திருக்கிறது.

இராணுவ வீரர் வீர் சிங்கின் (Vir Singh) இறுதிச் சடங்கிற்கு ஊர்ப் பொது நிலத்தைப் பயன்படுத்தக் கூடாது என்று கூறி அங்கிருந்த உயர் ஜாதியினர் அவருடைய இறுதிச் சடங்கை தடுத்து நிறுத்தினார்கள்.

### தேசியத்தின் பாராமுகம்

ஏன் அந்தக் கிராமத்தின் உயர் ஜாதிகள் என்று சொல்லக்கூடியவர்கள், கொல்லப்பட்ட அந்த இராணுவ வீரரின் இறுதிச் சடங்கை நடத்துவதற்காக ஊர்ப் பொது நிலத்தைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை மறுத்தார்கள்? ஏனென்றால், அந்த வீரர் நாட் (Nat- Acrobats) என்னும் ஜாதியைச் சார்ந்தவர். அந்த மாவட்ட அதிகாரிகள் தலையிட்டுப் பேசியதற்குப் பிறகே அந்த கிராமத்து மக்கள், அந்தப் படைவீரரின் இறுதிச் சடங்கிற்கு 10 : 10 என்ற அளவில் இடம் தர ஒப்புதல் அளித்தனர்.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை மதியம் நடைபெற்ற போது, அந்த கிராமத்தின் சாலை யருகில் உள்ள பொது நிலத்தில் கொல்லப்பட்ட வீரருக்குச் சிலை வைக்கவேண்டும் என்று அவரின் குடும்பத்தினர் ஆசைப்பட்டனர். ஒவ்வொரு வருடமும் பண்டிகைக் காலங்களின் போது அந்த இடத்தில்தான் உள்ளூர் விழாக்கள் கொண்டாடப் படும்.

காந்தாரி கிராமப் பஞ்சாயத்தின் கிராம தலைவரான விஜய் சிங், டைம்ஸ் ஆப் இந்தியா செய்திப் பத்திரிகையிடம் கூறியது,

"பொது நிலத்தில் அந்த வீரரின் உடலை எரியூட்ட வேண்டும், அதன் பின் அவருக்கு சிலையெழுப்ப வேண்டும் என்ற இரண்டு கோரிக்கையையும் அங்கிருந்த கிராமத்தார்கள் எதிர்த்தார்கள். அதன் பிறகு துணை மண்டல நீதிபதி (Sub-Divisional Magistrate) நடத்திய நெடுநேரப் பேச்சுவார்த்தையை அடுத்து, கிராமத்தார்கள் அந்த வீரரின் குடும்பத்தினரின் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாக கூறினார்கள்".

1981 ஆம் ஆண்டு சி.ஆர்.பி.ஃப் பிரிவில் சேர்ந்த வீர் சிங் (52 வயது) தான் அந்த குடும்பத்தில் வருமானம் ஈட்டுபவராக இருந்தார். ஏறத்தாழ 500 சதுர அடியில் ஒற்றை அறையுடன் தகர மேற்கூரை கொண்ட இடத்தில் தான் அவர் குடும்பம் வசிக்கின்றது. அவருக்கு 22 வயதில் ஒரு பெண் (ரஜின்), முதுகலை அறிவியல் பட்டப் படிப்புப் பயின்று வருகிறார் மற்றும் இரண்டு மகன்கள் ரமன்தீப் (18 வயது) இளங்கலை அறிவியல் பட்டப் படிப்புப் பயின்று வருகிறார். 16 வயதான சந்தீப் இப்பொழுது தான் பள்ளி இடைநிலைப் பள்ளிப் படிப்பை முடித்துள்ளார்.

வீர் சிங்கின் தம்பி ரஞ்சீத் ஒரு கூலித் தொழிலாளி, மேலும் எழுபது வயதைக் கடந்த அவரின் தந்தை ஃபிர்சாபாத்தில் கைவண்டி யிழுக்கிறார். அவர் கூறியவை,

"நம் நாட்டைப் பாதுகாப்பதற்காக தன்னுயிரையே கொடுத்துள்ளான் என் மகன், ஆனால், இங்கேயோ அவனை எரியூட்டுவதற்தாக 10 : 10 அளவுள்ள இடத்தைக்கூடத் தர மறுக்கின்றனர் நம்முடைய மக்கள். என்னுடைய மகனின் குழந்தைகளை இனி யார் பார்த்துக் கொள்ளப் போகிறார்கள் என்பதுதான் எனக்கு தெரியவில்லை" என்று அந்த துணிச்சலான வீரரின் தந்தை கூறினார்.

சிக்கோகாபாதின் துணை மண்டல நீதிபதி, சந்திர பான் டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கை தொடர்பு கொண்டபோது, "அனைத்துப் பிரச்சினைகளையும் நாங்கள் தீர்த்துவிட்டோம். மேலும், ஒட்டு மொத்த மாவட்டமும் நம்முடைய இறந்த வீரருக்கு மரியாதை செலுத்துவார்கள்" என்று கூறினார். கொல்லப்பட்ட அந்த வீரரின் நினைவாக அந்த கிராமத்தில் அவருக்கு நுழைவுவாயில் கட்டப்படும் என்று ஜிலா பஞ்சாயத்துத் தலைவர், விஜய் பிரதாப் யாதவ் அறிவித்தார்.



# தமன்னாவும், ஜக்கியுமா நமது இலக்கு?

தமிழ்நாட்டில் நீண்ட காலமாக மகாசிவராத்திரி கொண்டாடப்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக கோவை மாவட்டம் வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் கார்ப்பரேட் சாமியார் ஜக்கி வாசுதேவ் சிவராத்திரி பூஜையை, கலை இரவு போல விடிய விடிய ஒரு கொண்டாட்டமாக நடத்துகிறார். மத்திய அரசு, மாநில அரசுகளின் தலைவர்கள், கலைத்துறை, விளையாட்டுத்துறை, நீதி, நிதி, நிர்வாகத்துறை, ஊடகங்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் என சமுதாயத்தின் அனைத்துத் துறைகளில் இருந்தும் மக்கள் அந்தக் கொண்டாட்டத்தில் பங்கேற்கின்றனர்.

பட்டியலின மக்களின் நிலங்களை அபகரித்தது, அரசின் அனைத்து விதிகளையும் மீறுவது, சுற்றுச்சூழல் கேடுகள், சட்டவிரோத நடவடிக்கைகள் என எல்லாமே மக்களுக்குத் தெரிந்துள்ளது. அந்த விழாவில் பங்கு பெறும் அதிகாரிகளுக்கும், தலைவர்களுக்கும், மீடியாக் களுக்கும், காவல்துறை, நீதித்துறை அதிகாரி களுக்கும்கூட ஜக்கி வாசுதேவின் அனைத்துத் தில்லுமுல்லுகளும் தெரியும். எல்லாம் தெரிந்தும் ஈஷா மய்யம் நடத்தும் முழு இரவுக் கொண்டாட்டத்தில் எந்தக் குற்ற உணர்வும் இல்லாமல் பங்கேற்கின்றனர்.

ஜக்கி வாசுதேவ் ஆசிரமத்தில் மட்டுமல்ல, சங்கராச்சாரிகளின் காஞ்சி சங்கர மடம், ஸ்ரீஸ்ரீரவிசங்கரின் அகில உலக மடங்கள், சைவ ஆதீன மடங்கள், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடங்கள், நித்தியானந்தா மடங்கள், அமிர்தானந்தமயி மடங்கள் என அனைத்திலும், அனைத்து விதமான சட்டவிரோத நடவடிக்கைகளும் நடந்து வருகின்றன. அனைத்து மடங்களின் மீதும், மடத் தலைவர்களின் மீதும் வழக்குகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அவற்றை மக்களும் ஊடகங்களில் பார்த்துக்கொண்டு தான் இருக்கின்றனர்.

ஆனாலும், எந்த மடத்திற்கும், எந்தச் சாமியாருக்கும் மக்கள் ஆதரவு குறையவில்லை. கஞ்சா குடிக்கிச் சாமியார் முதற்கொண்டு கார்ப்பரேட் சாமியார் வரை அவரவர் சக்திக்கு ஏற்ப மக்களை ஏய்த்து, சுரண்டி சுகமாக வாழ்ந்துவருகிறார்கள். இந்த இந்துச் சமுதாயத்தின் சட்டங்கள் சிறிதும் அசையாமல் பாதுகாத்தும் வருகிறார்கள். இந்த நிலைக்கு அடிப்படைக் காரணம் மக்களின் மூடநம்பிக்கை.

மேற்கண்ட சாமியார்கள், மடங்கள், மூடநம்பிக்கைகள், கடவுள், ஜாதி, மதங்களை எதிர்க்கும் பகுத்தறிவாளர்கள் எண்ணிக்கையில் மிக மிகக் குறைவு. அந்தக் குறைவான எண்ணிக்கை கொண்ட தோழர்களையும், இந்தப் பார்ப்பன - பனியா - கார்ப்பரேட் அரசு தனது அன்றாடச் செயல்பாடுகளுக்கு எதிர்வினை மட்டுமே ஆற்றுபவர்கள் என்ற நிலைக்குப் பின்னோக்கி இழுத்து நிறுத்திவிட்டது.

எந்தச் சிக்கலையும் நிரந்தரமாகத் தீர்க்க என்ன செய்யலாம் என நாம் யோசிப்பதற்கு முன் அடுத்த தாக்குதல் நடத்தப்பட்டுவிடுகிறது. ‘தற்காப்பு’ என்ற தளத்தில்கூட அவசர அவசரமாக ஓடிக் கொண்டிருக்கும் நாம் ‘தாக்குதல்’ தளத்தைப் பற்றி யோசிக்கவே முடியவில்லை.

இந்தத் தற்காப்பு என்ற தளத்திலாவது முடிந்த அளவு போராடிக் கொண்டிருந்த செயல்வீரர்களில் பலர் அண்மைக்காலமாக, முகநூல் போன்ற சமூகவலைத்தளங்களில் சிக்கிக் காணாமல் போய் விட்டனர். பகுத்தறிவாளர்களின் செயல்பாடுகள் சமூகவலைத்தளங்களில் எதிரொலிக்க வேண்டும். நாம் தான் சமூக வலைத்தளங்களில் ட்ரெண்ட்களை உருவாக்க வேண்டும்.

ஆனால், நிலைமை தலைகீழாக உள்ளது. நாம் எப்படி இயங்குவது? நாம் எந்தச் செயல்பாட்டை முன்னெடுப்பது என்பதைச் சமூகவலைத்தளங்களில் யார் யாரோ உருவாக்கும் ட்ரெண்ட்கள் தான் நிர்ணயிக்கின்றன. ட்ரெண்ட்களின் பின்னே நாம் ஓடிக்கொண்டிருக்கிறோம்.

அதன் விளைவு? மகா சிவராத்திரி என்ற விழாவிற்கு அடிப்படையாக இருக்கும் இந்து மத மூடத்தனத்தையும், அறிவுக்கு எதிரான கற்பனைக் கதையையும் பரப்பும் வேலையை விட்டு விட்டு, ஜக்கி வாசுதேவ் பின்னாலும், அவரது விழாவில் கலந்துகொண்ட தமன்னா, காஜல், ராணா போன்றவர்கள் பின்னாலும் ஓடிக் கொண்டிருக்கிறோம்.

ஜக்கி போன்ற சாமியார்களையும், மடங்களையும் எதிர்ப்பது அவசியமான ஒன்றுதான். ஆனால், நாம் அதைக்கூடச் செய்வதில்லை. சிவன் சிலையில் உள்ள முகத்தோடு வடிவேலு முகத்தையும், ஜக்கி நடனப் படத்தோடு வடிவேலு நடனப் படத்தையும் போட்டு விட்டுப் போய்விடுகிறோம். வெறும் கிண்டல், கேலியோடு கடந்து போய்விடுறோம். சிவனை வழிபடும் மக்கள்கூட, உள்ளூரில் சிவன் கோவிலுக்குப் போய்விட்டுவந்து, முகநூலில் ஜக்கியைக் கிண்டல் செய்து ஒரு பதிவைப் போட்டுவிடு கின்றனர். நமது போராளிகள் கோவிலுக்குப் போகாமல் அதே பதிவைப் போடுகின்றனர். அவ்வளவுதான் வேறுபாடு.

இது பயன்தராது. சாமியார்கள் மாறிக்கொண்டிருப்பார்கள். அவர்களைப் பார்க்க வரும் கூட்டம் மாறிக்கொண்டிருக்கும். அதேசமயம் இந்த இழிவு நிலை நீங்காமல் தொடர்ந்துகொண்டே இருக்கும். சமூகவலைத்தளங்களின் ஆக்கிரமிப்புக்கு முன்பு நாம் இப்படித்தான் இயங்கினோமா? குறைந்தது யாராவது ஒருவரிடமாவது சிவனைப் பற்றியும், சிவராத்திரியின் மூடநம்பிக்கை பற்றியும், இந்து மதத்தைப் பற்றியும் விளக்கம் கொடுத்திருப்போம். விவாதித்திருப்போம். அமைப்புகள் வெளியிடும் துண்டறிக்கைகளைப் பரப்பியிருப்போம். ஒரு தட்டி, அல்லது சுவரொட்டி போட்டிருப்போம்.

ஆனால், இப்போது அதுபோன்ற பணிகள் எதுவும் நடக்கவில்லை. சிவராத்திரி மூடநம்பிக்கை பற்றிய பெரியாரின் கருத்தை நாம் பரப்பவில்லை. ஃபோட்ஷாப் படங்களைப் பரப்பி நிம்மதியாகி விடுகிறோம். சமூக வலைத்தளங்களிலாவது பெரியார் பேசிய சிவராத்திரிக் கதைகளைப் பரப்பியிருக்க வேண்டும். அதை ஒரு ட்ரெண்ட் ஆக்கியிருக்க வேண்டும். நாம் தவறிவிட்டோம்.

இனிமேல் வரும் மதப் பண்டிகைகளிலாவது, இதுபோன்ற பண்டிகைகள் வருவதற்கு சில நாட்களுக்கு முன்பே அவை தொடர்பான கருத்துப் பரப்பல்களைத் தொடங்க வேண்டும். சிவராத்திரி நாளில் சராசரி மனிதர் யாராவது ஒருவர், ஒரே ஒருவர், நமது பிரச்சாரத்தால் கோவிலுக்குப் போகாமல் நிம்மதியாகத் தூங்கப் போனால் அதுதான் நமது வெற்றி. சிரிக்க வைக்கும் படங்களால் நாம் புதிதாக எவரையாவது உருவாக்க முடிந்ததா? என்று யோசித்துப் பாருங்கள். நமது ஆற்றலை விரயமாக்குவதைவிடப் பெரியாரியலுக்கு மிகப்பெரும் துரோகம் வேறு எதுவும் இல்லை.

## மகா சிவராத்திரியின் மகா யோக்கியதை!

**தோழர் பெரியார்**

ஒரு வேடன். அவன் தன் உணவுக்குத் தினமும் பல பிராணிகளை வேட்டையாடி கொன்று தின்பது வழக்கம், அந்தப்படி ஒரு நாள் காட்டில் வேட்டையாடி இரை தேட சென்றதில் அவனுக்குக் கொல்ல ஒரு பிராணியும் கிடைக்கவில்லை. அவன் மனக் கலக்கமடைந்து சோர்ந்து திரிந்தான். அந்நேரத்தில் அந்தக் காட்டில் ஒரு புலி, அவன் கண்ணுக்குத் தென்பட்டது. நேரமும் சற்று இருட்டி விட்டது. என்றாலும் வேடன் புலியைக் கண்டு ஓடினான். புலி விரட்டிற்று. வேடன் உடனே அங்கு இருந்த ஒரு மரத்தின்மீது அவசரமாக ஏறிக் கொண்டான்.

புலி அவனைப் பார்த்த வண்ணமே மரத்தடியில் சிறிது நின்று கொண்டிருந்து படுத்துக் கொண்டது. வேடன் அந்தப் புலியை விரட்டுவதற்காக ஆக மரத்திலிருந்த சிறு கிளைகள் தழைகள் முதலியவற்றைப் பிடுங்கி கீழே எறிந்தான். அப்போது சிறு மழைத்தூரல் விழுந்து கொண்டு இருந்ததால் அத்தழைகள் சிறிது நனைந்து விழுந்தன.

இப்படியே பயந்து கொண்டு இரவு முழுதும் தூங்காமல் செய்து கொண்டு இருந்தான். சிறிது வெளிச்சம் படும்படி வானம் வெளுக்க ஆரம்பித்தவுடன் புலி ஓடிவிட்டது. இந்த நிலையில் வேடன் கீழிறங்கி வீட்டிற்குப் போய்விட்டான். பிறகு அதேதொழிலாக இருந்து சில நாள் பொறுத்துச் செத்தான். சிவன் உடனே அவனுக்குக் கைலாயத்தில் இடம் கொடுத்துவிட்டார். காரணம் என்னவென்றால்,

அந்த வேடம் தினம் உயிர்களைக் கொன்று வதை செய்து சாப்பிடுபவனாகவும், விற்பவனாகவும் இருந்தாலும், அவன் அன்றிரவு தான் பறித்துப் போடுகின்ற தழை, வில்வத்தழை என்று அறியாதிருந்தாலும், அப்போது அந்த மரத்தடியில் இருந்த ஒரு சிவலிங்கத்தின் மீது விழுகிறது என்பது தெரியாமல் போட்டிருந்ததாலும், அவனுக்குச் சிவ பக்தி, ஒழுக்கம் என்பவை சிறிதும், இல்லாமல் இருந்தாலும், அவனுக்குத் தெரியாமல் வில்வத்தழை நீரில் நினைந்து சிவலிங்கத்தின் மீது பட்டிருப்பதால், அவனுக்குக் கைலாயத்தில் இடம் கொடுக்க வேண்டியது அவசியம் என்று சிவன் கருதி மோட்சம் கொடுத்தான் என்பது இதன் கருத்து.

எதற்கு ஆக இக்கதை கற்பிக்கப்பட்டது என்றால், எவ்வளவு அயோக்கியனானாலும் இந்த விரதத்தை கொண்டாடினால் மோட்சம் கிடைக்கும் என்று மக்கள் கருதி இந்த விரதம் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்பதேயாகும். இதனால் நாம் அறியக்கிடப்பது என்னவென்றால், எவ்வளவு அயோக்கியனும் ஆரியமதத்தில் சேர்ந்தால் நன்மை அடைவான் என்கின்ற அளவுக்கு இது மதப்பிரசாரமாகும் என்பதுதான்.

இப்படியானால் ஆரிய (இந்து) மதம் காரணமாக எவனுக்காவது ஒழுக்கமேற்பட முடியுமா? எவனாவது ஒழுக்கத்தைப் பற்றிக் கவலைப்பட முடியுமா? ஆரிய மதமும் ஒன்றே தான் என்பது அறியத்தக்கது. ஆதலால் திராவிட மக்கள், இந்த முட்டாள் தனமானதும் அயோக்கியத் தனமானதுமான இப்படிப்பட்ட மதம், சாஸ்திரம், கடவுள், பக்தி, விரதம், பூசை முதலியவற்றை நன்றாய் வெறுக்க வேண்டுமென்பது, இதனால் விளங்குகிறது.

**விடுதலை,** 09. 02. 1953



# தாய்மொழி – சிந்தனை மொழி: கற்பிதங்கள்

அதி அசுரன்

பிப்ரவரி 21 ஆம் நாளை உலகத் தாய்மொழி நாள் என்று ஒரு சிறப்பு நாளாகத் தமிழ்த் தேசியர்களும், ஒரு சில தமிழ் ஆர்வப் பெரியாரியலாளர்களும் அறிவித்து மகிழ்ந்து கொண்டனர். உலகில் என்னென்னவோ தினங்கள் கொண்டாடப் படுகின்றன. அந்த வரிசையில் தாய்மொழி நாள் என்பதையும் அனைத்து மொழியினரும் கொண்டாடிக் கொள்வதை வரவேற்கிறோம்.

நாள்தோறும் தங்களது வீடு, அலுவலகம், பொதுவெளி அனைத்திலும் பெண்களை அடக்கி ஆண்டுகொண்டிருக்கும் சராசரி ஆண்கள் கூட உழைக்கும் பெண்கள் தினத்தன்று வாழ்த்துக்களைச் சொல்வதையும் - பெண் விடுதலை, பாலின சமத்துவம் என்பவை பற்றி எதுவும் அறியாத சராசரி பெண்கள் சமுதாயம் அன்றைய நாளில் கோலப் போட்டிகளையும், பட்டுச்சேலை, நகை நட்டு களுடன் ஆடல், பாடல்களையும் நடத்திக் கொண்டிருப்பதையும் பார்த்திருப்போம்.

அதுபோல, தமது வாழ்க்கையில் ஆங்கில வழியில் கல்லூரி மற்றும் உயர்கல்வி கற்றவர்களும், தம் குடும்பங்களில், தம் குழந்தைகளுக்கு முழுமை யான ஆங்கிலக்கல்வி கொடுத்துக் கொண்டிருப் பவர்களும், அரசுப்பள்ளி, தாய்த் தமிழ்ப்பள்ளி என்று குழந்தைகளை அனுப்பினாலும் வீட்டில் மறக்காமல் ஆங்கில மொழிப் புலமையைப் பயிற்றுவிப்பவர்களும், ஆங்கிலேயப் பண்பாடு, பழக்க வழக்கங்களைச் சரியாகப் பின்பற்றி வாழ்ந்து கொண்டு-ஆங்கிலேயர்களின் அறிவியல் கருவி களைப் பயன்படுத்திக் கொண்டு, தனித்தமிழில் பேசிக் கொண்டிருப்பவர்களும் தாய்மொழி நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

சாக்லேட் டே, ப்ரொப்போஸ் டே, கிஸ்ஸிங் டே, பிரேக்-அப் டே என 365 நாட்களுக்கும் சிறப்புகள் வந்துவிட்ட காலத்தில் - கடவுளையும், மதத்தையும், ஜாதி, பாலின, வர்க்க ஏற்றத் தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டிராத வகையில் எந்த தினத்தைக் கொண்டாடினாலும் நாமும் அதைக் கொண்டாடுவது மகிழ்ச்சியானது தான். உலகெங்கிலும் தாய்மொழி தினம் எப்படிக் கொண்டாடப்படுகிறது என்பது பற்றி நமக்குத் தெரியவில்லை.

ஆனால், தமிழ்நாட்டில், கிராமக் கோவில்களில் திடீரென சிலருக்கு அருள் வந்து ஆடுவது போல- திடீரெனத் தாய்மொழிப் பற்று ஊற்றெடுப்பதும், தாய்மொழியைக் கடவுளுக்கும், மதத்துக்கும் நிகராக நிறுத்தத் துடிப்பதும், தாய் மொழியைப் புனிதப்படுத்துவதும் நமக்கு வேடிக்கையாக இருக்கிறது. எதன் மீதும் “புனிதம்” ஏற்றப்படும்போது, அதை நாம் கவனமாகப் பரிசீலிக்க வேண்டியுள்ளது. புனிதங்களை உடைத் தெறிய வேண்டியுள்ளது.

“உலகெங்கிலும் உள்ள சிறந்த மொழியியல் வல்லுநர்கள் எல்லாம் தாய்மொழிவழிக் கல்வி தான் சிறந்தது என்று கூறியுள்ளார்கள். ஐ.நா.அவையின் யுனெஸ்கோ அமைப்பு தாய்மொழிக் கல்வியைத் தான் பரிந்துரைக்கிறது” என்று சில ஆண்டுகளாகத் தமிழ்த் தேசியர்கள் எழுதி வருகிறார்கள்.

தாய்மொழிக் கல்விக்கு ஆதரவாக, பஞ்சாப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜோகாசிங் எழுதிய ஒரு ஆய்வுக்கட்டுரையையும் பரப்பி வருகிறார்கள். ஜோகாசிங் அவர்களைப் பற்றிச் சுருக்கமாக அறிமுகப்படுத்த வேண்டுமானால், அவர் ஒரு “பஞ்சாப் மணியரசன்,” “பஞ்சாப் வெங்கட் ராமன்” அவ்வளவுதான். அவரது ஆய்வைப் பற்றி விரைவில் விளக்கமாக எழுதலாம். முதலில் யுனெஸ்கோ அறிக்கையைப் பார்ப்போம்.

### யுனெஸ்கோ வலியுறுத்துவது இருமொழி – பல மொழிக் கொள்கை

*2008 ஆம் ஆண்டு யுனெஸ்கோ "Mother tongue matters_ local language as a key to effective learning" என்ற ஒரு ஆய்வறிக்கையை வெளியிட்டது. அந்த ஆய்வு உலகில் மிக மிகக் குறைவான நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுதான். உலக அளவில் நடத்தப் படவில்லை. மேற்கு ஆப்பிரிக்காக நாடான மாலி, ஆஸ்திரேலியா அருகிலுள்ள பப்பு நியூ கினியா, மற்றும் அமெரிக்கா ஆகிய சில நாடுகளில் மட்டும் நடத்தப்பட்ட ஆய்வு.*

*மிக முக்கியமாக, எந்த நாட்டிலும் இல்லாத "ஜாதி" என்ற ஆதிக்கக் கருத்தியலும் - எந்த தேசிய மொழியும் இல்லாத, எந்த தேசிய இனத்தையும் சாராத ஆதிக்க மரபு இனமான பார்ப்பனர்கள் என்ற ஒடுக்கும் இனமும் இல்லாத நாடுகளில் நடத்தப் பட்ட ஆய்வு.*

*உலக அளவில் உள்ள நூற்றுக்கணக்கான நாடுகளில் - ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள தனிப்பட்ட சிக்கல்கள், ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு இனத்திலும் உள்ள தனிப்பட்ட அடிமைத்தன வரலாறுகள், தனிப்பட்ட ஆதிக்க வரலாறுகள், பல நூற்றாண்டுகளாக மாறி வந்த அரசியல், சமுதாயப் போக்குகள் என எதையும் அந்த ஆய்வு கணக்கில் எடுக்கவில்லை.*

*தாய்மொழி பற்றியும், அதன் அடிப் படையிலான கல்வி முறை பற்றியும் நடத்தப்பட வேண்டிய பற்பல ஆய்வுகளுக்கு இந்த ஆய்வு ஒரு முன்னோட்டம். இந்த அளவிற்குத்தான் இந்த அறிக்கை உள்ளது. இதை நமது தமிழ்த்தேசியர்கள் வழக்கம்போலப் புனிதப்படுத்திவிட்டார்கள். நம்மைப் போன்ற பெரியாரியலாளர்கள் வெவ்வேறு பணிகளில் இருந்ததால் தமிழ்த்தேசியர்களின் புனிதப்படுத்தல்களைக் கண்டும் காணாமல் போய் விட்டோம்.*

*முன்னோட்டம் என்ற அளவில், ஒரு ஆய்வு மாணவரின் ஆய்வுக்கட்டுரை என்ற அளவில் உள்ள இந்த அறிக்கைகூட நமது தமிழ்த்தேசியர்கள் கூறுவது போல முற்று முழுதாக, தாய்மொழி வழிக் கல்வியைப் பரிந்துரைக்கவில்லை. இருமொழிக் கொள்கையைத்தான் மிகத்தெளிவாக வலியுறுத்து கிறது. யுனெஸ்கோ அறிக்கை கூறும் ஆய்வின் முடிவைப் பாருங்கள்,*

> Mother-tongue-based bilingual education significantly enhances the learning outcomes of students from minority language communities. Moreover, when mother-tongue bilingual education programmes are developed in a manner that involves community members in some significant way and explicitly addresses community concerns, these programmes also promote the identification of the minority community with the formal education process.

***"ஒவ்வொரு இனமும் தனது தாய்மொழியை முற்றிலுமாகத் தவிர்த்துவிட்டு அந்நிய மொழிகளைக் கற்பதைவிட - தாய்மொழி வழியாக, இருமொழிவழிக்கல்வி மற்றும் பலமொழிகளைக் கற்பது எளிதானது. பயனுள்ளது"*** *என்பதுதான் யுனெஸ்கோ ஆய்வறிக்கையின் அடிப்படைக் கருத்து. அதன் அடிப்படையில் தான் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21 ஆம் நாளை தாய்மொழிகள் நாள் என ஐ.நா. அறிவித்துள்ளது.*

*இந்தத் தாய்மொழிநாள் குறித்து ஒவ்வொரு ஆண்டும் இதே நாளில் யுனெஸ்கோ வெளியிடும் தொடர்ச்சியான அறிக்கைகளிலும், தாய்மொழி அடிப்படையில் இருமொழி வழிக்கற்றல் மற்றும் பலமொழி கற்றல் என்பது தான் வலியுறுத்தப்படுகிறது.*

### தொடக்கப் பள்ளியிலேயே அந்நியமொழி வழிக்கல்வியும் வேண்டும் – யுனெஸ்கோ ஆய்வு

*யுனெஸ்கோ அறிக்கையில், மாலி என்ற நாட்டில் நடத்தப்பட்ட ஆய்வு பற்றிக் கூறப் பட்டுள்ளவைகளைப் பார்ப்போம். மாலி என்பது ஃப்ரெஞ்ச் ஆதிக்கத்தில் இருந்த மேற்கு ஆப்பிரிக்க நாடு ஆகும். இந்தியாவில் ஆங்கிலேயர்களின் ஆங்கிலம் பரவியதைப் போல, மாலியில், நீண்ட காலமாக ஃப்ரெஞ்ச்சுக்காரர்களின் ஃப்ரெஞ்ச் மொழி வழிக் கல்வி தான் நடைமுறையில் இருந்தது.*

*மாலியின் 80 க்கும் மேற்பட்ட தாய்மொழி களைப் பேசும் மக்கள் வாழ்கிறார்கள். அதில் 13 மொழிகள் தேசிய மொழிகளாகவும் அறிவிக்கப் பட்டுள்ளன. பெரும்பான்மை மக்கள் "மாண்டிங்" என்ற மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த "பம்பாரா" என்ற மொழியைப் பேசுகின்றனர். ஃப்ரஞ்ச் ஆதிக்கத்திலிருந்து மாலி விடுதலை பெற்ற பிறகு, அந்நிய மொழி வழிக் கல்வியோடு, தாய்மொழிவழிக் கல்வியும் நடைமுறைக்கு வந்தது.*

*யுனெஸ்கோ அமைப்பானது, மாலியில், அந்த நாட்டின் அந்நிய மொழியான ஃப்ரெஞ்ச் மொழி வழியாகப் பயிற்றுவிக்கப்படும் தொடக்கப் பள்ளிகளையும் - "பம்பாரா" போன்ற அந்த நாட்டுத் தாய்மொழி வழியாகப் பயிற்றுவிக்கப்படும் பள்ளிகளையும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது.*

*அந்த நாட்டில், தாய்மொழிவழிப் பள்ளிகள் என்றால், முழுக்க முழுக்கத் தாய்மொழி மட்டுமோ, தாய்மொழி வழியில் மட்டுமோ பயிற்றுவிக்கப்படும் பள்ளிகள் அல்ல. அதைக் கவனமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.*

*தாய்மொழிவழிக் கல்வியைப் பயிற்றுவிக்கும் தொடக்கப் பள்ளிகளில், முதல் 3 நிலைகளில் தாய்மொழி பயிற்றுவிக்கப்படுகிறது. அடுத்தடுத்த நிலைகளில் அந்நிய மொழியான ஃப்ரெஞ்ச் மொழி, ஒரு மொழியாகவும், ஒரு பயிற்றுமொழியாகவும் பயிற்றுவிக்கப்படுகிறது.* ***அதாவது, Primary Education னிலேயே அந்நிய மொழி வழிக் கல்வி தொடங்கி விடுகிறது.***

***ஆரம்பக்கல்வியின் ஓரிரு ஆரம்ப ஆண்டு களில் மட்டும்தான் தாய்மொழி மட்டும் பயிற்று விக்கப்படுகிறது. ஆரம்பக்கல்வியின் இறுதித்***

**தேர்வுகள் தாய்மொழியும், அந்நிய மொழியும் இணைந்த இருமொழிகளின் வழியாகவுமே நடத்தப்படுகிறது. இந்த இருமொழிக் கல்விக்கு Convergent pedagogy என்று பெயர். இந்த முறையைத் தான் யுனெஸ்கோ பரிந்துரைத்துள்ளது.**

மேலும் வழக்கமாக, ஒரே அந்நிய மொழியில் மட்டும் பயிற்றுவிக்கப்படும் ஃப்ரெஞ்ச் மொழிவழிப் பள்ளிகளில் ஃப்ரெஞ்ச் மொழி வழியாக மட்டும் தேர்வுகள் நடத்தப்படுகிறது.

இந்த ஆய்வு மாலியின் 9 மாகாணங்களில் தனித்தனியாக நடத்தப்பட்டது. அதன் முடிவுகளில் 2 மாகாணங்களில் ஆரம்பக்கல்வியில் முழுக்க முழுக்க அந்நிய மொழியை மட்டுமே பயிற்று மொழியாகக் கொண்ட மாணவர்கள் - தாய்மொழி வழிக்கல்வி கற்ற மாணவர்களைவிடத் திறமைசாலிகளாக இருந்தனர். மீதமுள்ள 7 மாகாணங்களில், ஆரம்பக் கல்வியிலேயே தாய்மொழிவழி மற்றும் அந்நிய மொழி வழி கற்ற மாணவர்கள் திறமைசாலிகளாக இருந்தனர்.

தமிழ்நாட்டில் தமிழ்த்தேசியர்கள் கோரும், தாய்த்தமிழ் பள்ளிகளின் பயிற்றுமொழித் தன்மைக்கும், யுனெஸ்கோ கூறும் மாலி நாட்டுப் பயிற்றுமொழித் தன்மைக்கும் மிகப்பெரிய வேறு பாடுகள் உள்ளன. இரண்டும் ஒன்றல்ல. யுனெஸ்கோ கூறுவது போன்ற தொடக்கக்கல்வி யிலேயே ஆங்கிலம் மற்றும் ஆங்கில, அந்நிய மொழி வழி கல்வியைப் பயிற்றுவிக்கும் முறையைத்தான் பெரியாரிய லாளர்கள் ஏற்க முடியும். ஏற்கிறார்கள்.

**தாய்மொழி யில்தான் சிந்திக்க முடியும். தாய்மொழியில் சிந்தித்தால்தான் அறிவு வளரும் என்று பேசி வருபவர்கள், பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைப் பார்த்தாவது அறிவுப்பூர்வமாக மாற்றி யோசிக்க வேண்டும்.**

### 7 முதல் 10 வயதுக்குள் பல மொழிகளைக் கற்க முடியும் – Norman & Merzenich

குழந்தைகளின் கற்றல் திறன், மூளையின் திறன் ஆகியவை பற்றி பல மறுக்க முடியாத ஆய்வுகளைச் செய்துள்ள நார்மன் டாய்ட்ஜ் என்ற அறிஞர் *The Brain That Changes Itself* என்ற ஆய்வு நூலை வெளியிட்டுள்ளார். அவரைப் போலவே, அமெரிக்காவின் கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தின் மூளை நரம்பியல் அறிஞர் *Michael Merzenich* என்பவர் குழந்தைகளின் மொழி கற்கும் ஆற்றல் குறித்து *lasticity and Signal Representation in the Auditory System* என்ற ஆய்வு நூலை வெளி யிட்டுள்ளார். இன்றுவரை இவர்களது ஆய்வுகளை மறுத்து அறிவியல் பூர்வமான மறுப்புக் கட்டுரைகள் வரவில்லை.

இவர்கள் இருவரது ஆய்வுநூல்களும் கூறும் செய்திகளில் நமக்கு முக்கியமானவை மொழி கற்கும் திறன் பற்றிய பகுதிதான். அதன் முடிவாக அவர்கள் கூறுவது,

“ஒருவர் சிறு வயதில் மட்டுமே பல மொழி களை எளிதாகக் கற்றுக்கொள்ள முடியும். வயது அதிகமாக, அதிகமாக, மொழி கற்றலுக்குரிய மூளைப்பகுதி ஒருவரின் தாய்மொழி அல்லது இளம் வயதில் கற்கும் மொழியால் அதிகமாக ஆக்கிர மிக்கப்பட்டுவிடுகிறது. அப்படி ஆக்கிரமிக்கப்பட்ட பிறகு வேறு மொழிகளைக் கற்பதற்கு அதிக உழைப்பு தேவைப்படும்.”

“நமது மூளையில் உள்ள மொழிக்குரிய பகுதி, இளம் வயதில் நாம் எத்தனை மொழிகள் கற்றாலும் அந்த மொழிகள் அனைத்துக்கும் இடம் கொடுத்து, அந்தந்த மொழிகளுக்குரிய ஒலி அமைப்புக் களையும், சொற்களுக்கான கருத்துக்களையும் பேணி வைத்துக்கொள்ளும்.

“ஒரு குழந்தையின் வாழ்வில், 8 வயது முதல் 10 வயதுக்குள், மூளையில் மொழிகள் கற்பதற்கான முக்கியப் பகுதி ஆயத்தமாகிறது . இந்த வயதுக்குப் பிறகு கற்கப்படும் மொழிகள் தாய்மொழி போலவோ அல்லது கற்கப்படும் முதல் மொழி போலவோ எளிதாக கற்கப்படுவதில்லை.

இவர்களில் நார்மன் டாய்ட்ஜ் முக்கியமாக, 3 வயதிலேயே குழந்தைகளுக்கு மொழி கற்பதற்கான மூளையின் செயல்பாடுகள் தொடங்கி விடுகின்றன என்கிறார். 3 முதல் 10 வயதுகளுக்குப் பிறகுப் பிறகு, இரண்டாவது மொழி கற்றுக்கொள்ளும் பொழுது, அந்தக் கல்வியானது, முதல்மொழி பதிவு செய்யப் பட்ட இடத்தில் இல்லாமல், வேறு பகுதியில் பதிவு ஆகின்றது. ஆகவே முதல்மொழி எவ்வளவு சரளமாகப் பேசப்படுகின்றதோ அது போல் இரண்டாவது மொழி பேசப் படுவதில்லை என்கிறார்.

இந்த அறிஞர்கள் குறிப்பிடும் வயதில்தான் யுனெஸ்கோ ஆய்வு நடத்திய ஆப்பிரிக்காவின் மாலி நாட்டின் பள்ளிகளில் Primary Education -ல் அந்நிய மொழி பயிற்றுவிக்கப்படுகிறது. **தமிழ்நாட்டுச் சூழலுக்கு ஏற்பக் கூற வேண்டு மானால், அதிகபட்சம் 2 ஆம் வகுப்பு அல்லது 3 ஆம் வகுப்பிலேயே ஆங்கில மொழியையும், ஆங்கில வழிக் கல்வியையும் ஏற்கலாம். இதைத்தான் யுனெஸ்கோ முடிவுகளும், மூளை நரம்பியல் அறிஞர்களின் ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன.**

### தாய்மொழி – சிந்திக்கும் மொழி மூடநம்பிக்கைகள்

அறிவியலாளர்கள் கூறுவதைத்தான் இங்கு பெரியாரியலாளர்கள் வேறு சொற்களில் பேசுகிறார்கள். 3 வயதிலிருந்து 10 வயது வரை நாம் எந்த மொழியைப் பழக்கப்படுத்துகிறோமோ, அது தான் அந்தக் குழந்தையின் தாய்மொழி. அது தமிழோ, தெலுங்கோ, ஆங்கிலமோ, ஃப்ரெஞ்சோ எந்த மொழியாக இருந்தாலும் எந்த நாட்டுக் குழந்தையாக இருந்தாலும், எந்த தேசிய இனத்தின் குழந்தையாக இருந்தாலும், 3 வயது முதல் எந்த

மொழியை பழக்கப்படுத்துகிறோமோ அது தான் அந்தக் குழந்தையின் தாய்மொழி; சிந்திக்கும் மொழி.

தாய்மொழியில் தான் சிந்திக்க முடியும். தாய்மொழியில் சிந்தித்தால் தான் அறிவு வளரும் என்பதை, பல மொழியியல் அறிஞர்கள் விளக்கி யுள்ளார்கள். அதை நம் நாட்டுத் தமிழ்த்தேசியர் களும் பேசி வருகிறார்கள். அதை நாம் எப்போதும் மறுக்கவில்லை. அறிவியலை மறுக்க முடியாது. மறுக்க வேண்டியதும் இல்லை. நம்மைப் பொறுத்த வரை, அந்தத் தாய்மொழி என்பதற்குக் கூறப்படும் வரையறைகளையும், அதன்மீது ஏற்றப்படும் புனிதங்களையும் தகர்க்க வேண்டியுள்ளது.

தாய்மொழி வளமாக, எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்ற அறிவியல் மொழியாக இருக்குமானால் அதன் வழியே படிப்பது சரிதான். ஆனால் தமிழில் என்ன இருக்கிறது? இதோ பெரியாரே கூறகிறார்,

> **"தமிழ்மக்கள் என்னும் குழந்தைகளுக்குத் 'தாய்ப்பால்' என்னும் தமிழானது முன்னேற்றம் என்னும் உடல்தேர்வதற்கோ, வளர்வதற்கோ பயன்பட்டு இருக்கிறதா? பயன்படுமா? தாய்ப்பால் சிறந்தது என்பதில், தாய்ப்பாலில் சக்தியும், சத்தும் இருந்தால்தான் அது சிறந்ததாகும். இங்கு தமிழ் என்னும் தாயே, சத்தற்றவள் என்பதோடு நோயாளி யாகவும் இருக்கும்போது, அந்தப் பாலைக்குடிக்கும் பிள்ளை உருப்படியாக முடியுமா? தாய்க்கு நல்ல உணவு இருந்தால் தானே அவளுக்கு பாலும் ஊரும், அந்தப் பாலுக்கும் சக்தி இருக்கும். தமிழில் நல்ல உணவு எங்கே இருக்கிறது?**
>
> **பார்ப்பனர்களும், அரசாங்கமும் இந்தத் துறையில் செய்கின்ற அக்கிரமங்கள் சொல்லி முடியாது. ஒரு பண்டத்துக்குத் தமிழ்ப்பெயர் உண்டாக்கி தமிழில் சொல்லிவிட்டால் போதுமா? அதன் செயல் முறைக்கும், அதன் பாகங்களுக்கும், அதை ஊடுருவி அறிந்து கொள்வதற்கும் அதன் அடிப்படைக்கு சொற்கள் வேண்டாமா? மற்றும் மருத்துவம், பொறியியல், சட்டம் முதலிய எத்தனையோ துறைகளில் நுணுக்கங்களுக்கு, செயல்களுக்கு, நமக்குத் தக்க அறிவும், அனுபவமும், செய்முறையும் வேண்டுமானால் நமது தாய்ப்பாலில் (தமிழ்மொழியில்) என்ன இருக்கிறது?"**
>
> - தாய்ப்பால் பைத்தியம் 1960,
>
> "ஈ.வெ.ராமசாமி என்கின்ற நான்" நூல்.

நமது மொழியில் எதுவும் இல்லை எனும் போது, வேறு ஒரு மொழியைத் தேர்வு செய்வது அறிவியல்பூர்வமாகவும் சரியானது தான். அப்படி நமது குழந்தைகளின் சிந்ததிக்கும் மொழியை நாமே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வாய்ப்புகளும் ஏராள மாகவே இருக்கிறது.

தோழர் பெரியார் தனது இறுதிக்காலமான 1973 வரை, "குழந்தைகள் அனைவரும் வீட்டில் உரையாடும்போதுகூட ஆங்கிலத்தில் பேச வேண்டும். ஆங்கிலத்தால்தான் நாகரீகம் வளரும்" என்று அறிவுறுத்தியவாறு, நம் பெற்றோர்கள் வீட்டிலேயே குழந்தைகளிடம் ஆங்கிலத்தில் பேச வேண்டும். 3 முதல் 10 வயது வரையுள்ள குழந்தைகளின் பெற்றோர்கள் இந்த முயற்சியைச் செய்யலாம். அதற்காக ஷேக்ஸ்பியர் போல இலக்கியங்களைப் படைக்கும் ஆற்றலைப் பெற்றோர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதல்ல.

வாங்க, போங்க, நில்லுங்கள், சாப்பிடுங்கள், படியுங்கள், விளையாடுங்கள்...என்பவை போன்ற அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் மிக மிகக் குறைவான எளிய சொற்களை ஆங்கிலத்தில் பேசினால் போதும். சினிமா பார்ப்பது, டி.வி. பார்ப்பது என்றால்கூட ஆங்கில சினிமாக்களையும், ஆங்கில செய்திச் சேனல்கள், ஆங்கில டெட் டாக்ஸ் போன்ற சேனல்கள் என்று தமிழ்நாட்டிலேயே உள்ள ஆங்கிலம் சூழ் உலகை அறிமுகப்படுத்தினால் போதும்.

ஆங்கிலவழிக் கல்வி என்றால், தனியார் மயத்தை ஆதரிப்பதாகா? என்று கேட்கலாம். இப்போது பெரும்பாலான அரசுப் பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வி வந்துவிட்டது. ஆனால், நல்ல பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடையாது. அந்தக் குறையைத் திராவிடர் இனத்தின் வளர்ச்சியில் அக்கறை உள்ள அமைப்புகள் போராடிச் சரி செய்ய வேண்டும்.

அரசாங்கமே தரமான ஆங்கிலவழிக் கல்வியை இலவசமாகக் கொடுக்கப் போராட வேண்டும். இந்த இரண்டு வகையான பணிகளைச் செய்துவிட்டால் ஆங்கிலம் தான் நமது குழந்தைகளின் தாய்மொழி. அது தான் நமது பிள்ளைகளின் சிந்திக்கும் மொழி.

நல்ல தரமான ஆங்கில வழிக் கல்வியை வழங்கும் பல பள்ளிகள் தமிழ்நாட்டில் இயங்கு கின்றன. தொடக்கக் கல்வியிலிருந்து அப்படிப்பட்ட நல்ல ஆங்கிலப் பள்ளிகளில் படித்து வெளியேறிய மாணவ சமுதாயம் ஆங்கிலத்தில்தான் சிந்திக்கிறது. அவர்களின் சிந்தனை மொழி ஆங்கிலமாகவே உள்ளது. இதற்கு பெரிய ஆய்வெல்லாம் வேண்டிய தில்லை. இந்தக்கால மாணவர்களிடம் தொடர்பு இருந்தாலே அது தெரிந்து விடும்.

ஆங்கிலமும் தெரியாமல், தமிழும் தெரியாமல் ஒரு கூட்டம் இருக்கிறது. அவர்கள் யார் என்றால், பத்தாம் வகுப்பு வரையிலோ, பனிரெண்டாம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வி பயின்று, அதற்குமேல் ஆங்கிலவழிக் கல்லூரிக் கல்வியைக் கற்றவர்கள் தான் இப்படி எந்த மொழியிலும் புலமை இல்லாமல் இருப்பார்கள். மேலும், நாமக்கல் ஸ்டைல் பள்ளிகளிலும், எங்கு படித்தாலும், எந்த மீடியத்தில் படித்தாலும் 'அளவாகப்' படித்தவர்களுக்கும் எந்த மொழியிலும் புலமை இருக்காது. அப்படிப் பட்டவர்களை எடுத்துக்காட்டாகக் காட்டிக் கொண்டிருக்கக் கூடாது.

தாய்மொழிவழிக் கல்வி வேண்டும் என்பவர்கள் இன்றுவரை ஒரு மயில்சாமி அண்ணாத் துரையையும், அப்துல் கலாமையும்தான் சான்றுகளாகக் காட்டி வருகிறார்கள். மயில்சாமி அண்ணாத்துரை மற்றும் அப்துல் கலாம் ஆகியோர் பள்ளிகளில் தாய்மொழிக்கல்வி கற்ற காலத்தில்

இலட்சக்கணக்கானவர்கள் தாய்மொழி வழியில் படித்தனர். அவர்கள் எல்லாம் என்ன ஆனார்கள் என்று பார்த்தால் மயில்சாமி அண்ணாத்துரை அவர்களின் கருத்தில் உள்ள உண்மைத்தன்மை புரிந்து விடும்.

**தமிழில் என்ன இருக்கிறது?**

பெரியார் காலத்திலேயே தமிழ்நாட்டில் இளங்கலை, இளம் அறிவியல், வணிகவியல் பாடங்களுக்குத் தமிழில் பாடநூற்கள் வந்து விட்டன. அப்படி வந்துவிட்ட பிறகும் அவற்றில் எதுவும் இல்லை என்றுதான் பெரியார் கூறினார். 1970 களிலேயே பி.ஏ, பி.எஸ்.சி, பி.காம் பட்டங்களை மட்டும் வைத்துக்கொண்டு வாழ்க்கையில் முன்னேறி விட முடியாது என்ற நிலையைப் பெரியார் நன்கு அறிந்து இருந்ததால்தான் தமிழில் என்ன இருக்கிறது என்று கேட்டார்.

1970 களுக்குப் பிறகு ஏராளமான புதிய புதிய படிப்புகள் வந்து விட்டன. இந்தியாவில் உலகமய மாக்கத்திற்குப் பிறகு அகில உலகத் தொடர்புகளும், அவற்றின் அடிப்படையில் சுயநிதிப் படிப்புகளும் ஏராளமாக வந்துவிட்டன. அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பந்தங்கள் போடப்பட்டு ஏராளமான பட்டயப் படிப்புகளும், சான்றிதழ் படிப்புகளும் வந்து விட்டன. இலட்சக்கணக்கான ஆராய்ச்சி ஒப்பந்தங்கள் இயங்கி வருகின்றன.

இந்த வேகத்திற்கேற்றபடி தமிழில் என்ன இருக்கிறது? இந்தப் படிப்புகளின் பெயர்கள் கூடத் தமிழில் இல்லை என்பது தான் நமதுநிலை. மணவை முஸ்தபா போன்ற அறிஞர்கள் பெரும் பெரும்பாடு பட்டு எண்ணற்ற கலைச்சொற்களை உருவாக்கி யுள்ளனர். ஆனால், அவற்றை ஆங்கிலத்தின் வேகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க நினைப்பது கூடச் சிரிப்பை வரவழைத்துவிடும் நிலைதான் உள்ளது.

**அறிவியலாளர் கள் கூறுவதைத்தான் இங்கு பெரியாரியலாளர்கள் வேறு சொற்களில் பேசுகிறார்கள். 3 வயதிலிருந்து 10 வயது வரை நாம் எந்த மொழியைப் பழக்கப்படுத்துகிறோமோ, அதுதான் அந்தக் குழந்தையின் தாய்மொழி.**

இந்த நிலையைக் கிண்டலாகக் கூறவில்லை. வேதனையாகத்தான் எழுதுகிறேன். இந்த இழி நிலையை மாற்றுவதற்குத் தமிழ்த்தேசியர்களும், தமிழ் வேண்டும் என்பவர்களும் உழைக்க வேண்டும். ஆங்கில மொழியின் அளவுக்குத் தமிழை ஒரு அறிவியல் மொழியாக வளர்க்க வேண்டும். அதன் பிறகு தமிழ் வழியில் படிப்பதற்கு நமது குழந்தைகளும் தயார்தான்.

ஆக்கப்பூர்வமான இதுபோன்ற பணிகளைச் செய்யாமல், ஆரம்பக் கல்வி முதல் உயர்கல்வி வரை தாய்மொழியில்தான் நடக்க வேண்டும். தமிழில்தான் நடத்த வேண்டும் என்கிறார்கள். சீனாவைப் பார், ஜப்பானைப் பார், ஜெர்மனியைப் பார், ஃப்ரான்சைப் பார் என்று முழங்குகிறார்கள். நாம் அந்த நாடுகளைப் பின்பற்றி, அந்த நாடுளின் மொழிகளான ஜெர்மன், ஃப்ரெஞ்ச் போன்ற மொழிகளை வேண்டுமானால் பயிற்றுமொழியாக ஏற்கலாமே ஒழிய, தமிழைப் பயிற்று மொழியாக ஏற்பது அறிவுக்கு எதிரானது. ஏனென்றால், ஒரு துறை தொடர்பாக ஆங்கிலத்தில் 1000 கட்டுரைகள் இருக்கிறதென்றால், ஜெர்மன் , ஃப்ரெஞ்ச் மற்றும் சீன மொழிகளில் 200 கட்டுரைகளாவது இருக்கும். தமிழில் எதுவும் இருக்காது. பிறகு எதற்காகத் தமிழ்?

ஜாதி, மதம், சைவம், வைணவம், சாஸ்திர சம்பிரதாயங்கள், ஆணாதிக்கம், ஜல்லிக்கட்டு, தலைவன் பரத்தையர் வீடு செல்வது, தலைவி அதற்குப் பொண்ணும் பொருளும் கொடுத் தனுப்புவது, காதலிப்பது, ஊடல், கூடல், இவற்றுக்குப் பார்ப்பனர்கள் தூது செல்வது, நாள் குறித்துக் கொடுப்பது, மன்னர்களை ஏய்த்துப் பிழைப்பது, தன்னைப் புகழ்பவருக்குப் பரிசளிப்பது, குலதெய்வங்களின் ஜாதிப் பெருமைகள், ஆணவப் படுகொலைகள், ஆண்ட பரம்பரைக் கதைகள், ஜாதியப் பாரம்பரியம் போன்றவைதான் தமிழில் இருக்கின்றனவே தவிர, வேறு என்ன இருக்கிறது? இளநிலை உதவியாளர் பணிக்குக்கூட ஆங்கிலம் அவசியமாக இருக்கும் போது, தமிழ்நாட்டில் எதற்காகத் தாய்மொழி வழிக் கல்வி?

தமிழர்களின் இந்தப் பிற்போக்குப் பண் பாட்டைப் பற்றிக் குழந்தைகள் அறிந்து கொண்டு கவனமாக வாழ வேண்டும் என்பதற்காக வேண்டுமானால்,3 வயதிலிருந்தே தமிழையும் ஒரு மொழியாகக் கற்றுக் கொடுப்பது தவறில்லை. நமது குழந்தைகளின் மூளைத்திறன் அதற்கு ஏற்பவே உள்ளது என்பதை மூளை நரம்பியல் அறிஞர்கள் உறுதிப் படுத்தியும் இருக்கிறார்கள். அதனால் தாராளமாக, தமிழை இரண்டாவது மொழியாகப் படிக்கலாம்.

**அந்நிய மொழிவழிச் சிந்தனையும் பார்ப்பனர்களும்**

நான் கூறுபவை நமது தோழர்களுக்கும்கூட அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனால், இது அறிவுக்கு விரோதமானதோ - இந்த நாட்டில் நடக்காத ஒன்றோ அல்ல. அகில இந்திய அளவில்அனைத்து தேசிய இனங்களிலும், தமிழ்நாட்டு அளவிலும் இந்த “அந்நிய மொழிவழிச் சிந்தனை” பல நூற்றாண்டு களாக நடந்து கொண்டுதான் இருக்கிறது. மேலும், மொழி இல்லாவிட்டால் இன உணர்வு எப்படி வரும்? இன உணர்வு இல்லாவிட்டால், தனித்தமிழ்நாடு பெறுவது எப்படி? தமிழ் இல்லாவிட்டால் தமிழினமே அழிந்து விடாதா? என்றெல்லாம் கேள்விகள் எழும்.

இந்திய நாடு என்று ஒரு நாடு உருவாக்கப் பட்ட காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ச்சி யாகத் தனிநாட்டுக்காகப் போராடிவரும் தேசிய இனங்கள், காஷ்மீரிகளும், நாகர்களும் ஆவர்.

*அவர்கள் வாழும் ஜம்மு-காஷ்மீரிலும், நாகாலாந்திலும் முழுக்க முழுக்க ஆங்கில வழிக் கல்விதான் நடைமுறையில் இருக்கிறது. அவர்களை விடவா தமிழனுக்கு இன உணர்வும், மானமும் இருக்கிறது? எனவே, ஆங்கிலவழிக் கல்வி என்பது தேசிய இனங்களின் விடுதலைக்கு எதிரானது அல்ல.*

*எங்கோ இருக்கும் காஷ்மீரிகளையும், நமது தொப்புள்கொடி உறவுகளான நாகர்களையும் பற்றிச் சொல்வதை விட நமது தமிழ்நாட்டிலேயே வாழும் அந்நியர்களான பார்ப்பனர்களைப் பாருங்கள். பார்ப்பனர்களின் தாய் மற்றும் தந்தை மொழி சமஸ்கிருதம்தான். ஒரு பார்ப்பனக் குழந்தை, அது பிறப்பதற்கு முன்பிருந்தே, அதாவது ஒரு குழந்தையின் கேட்கும் திறன் உருவாகும் 7 வது மாதத்திலிருந்தே சமஸ்கிருதத்தைத்தான் கேட்டு வளர்கிறது.*

*தொடக்கக்கல்விக்குரிய காலமான 8 வயதில் தான் பார்ப்பனக் குழந்தைகளுக்கு உபநயனச் சடங்கு நடக்கிறது. அதாவது வேதங்களையும், சாஸ்திரங்களையும் கற்பதற்காக பார்ப்பனக் குழந்தைகள் வேதபாடசாலைகளுக்குச் செல்லும் காலத்தில்தான் அவர்கள் ஆரம்பக்கல்வியையும் கற்கிறார்கள். அந்தக் காலத்தில் அவர்கள் சமுதாய - பண்பாட்டு ஆதிக்கத்திற்காகச் சமஸ்கிருதத்தையும், அரசியல், அரசு நிர்வாக, வணிக ஆதிக்கங்களுக்காக ஆங்கில வழிக் கல்வியையும் ஒரே நேரத்தில் கற்கிறார்கள்.*

*எந்தப் பார்ப்பானும் தாய்த்தமிழ்பள்ளியில் படிப்பதில்லை. தமிழ்வழிக் கல்வி வேண்டும் என அடம் பிடிப்பதில்லை. (தமிழை வைத்துப் பிழைக்கும் சில பார்ப்பனர்களைத் தவிர) தமிழ் நாட்டில் மட்டுமல்ல; இந்தியாவின் அனைத்து தேசிய இனங்களிலும் உள்ள அனைத்து ஆதிக்கப் பார்ப்பனர்களும், சமுதாய ஆதிக்கத்திற்குச் சமஸ்கிருதத்தையும், அரசியல், அரசு நிர்வாக, வணிக ஆதிக்கங்களுக்காக ஆங்கில மொழி வழியிலும் கல்வியைப் பெறுகின்றனர்.*

*ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரும்வரை கல்வி என்றாலேயே அது வேதங்களும், சாஸ்திரங்களும் அடங்கிய சமஸ்கிருத வழிக் கல்விதான். கல்வி கற்பவர்கள் என்று பார்த்தாலும் அது பார்ப்பனர்கள் மட்டும்தான் என்ற நிலை இருந்தது. ஆங்கிலேயர் வருகைக்குப் பிறகுதான், குறிப்பாக, "புரட்சித் தலைவன் மெக்காலே" வருகைக்குப் பிறகு தான் பார்ப்பனர்களின் சமஸ்கிருதவழிக் கல்விக்கு ஆபத்து வந்தது.*

*அப்போது பார்ப்பனர்கள் தங்களது சமஸ்கிருத வழிக் கல்விக்காகப் போராடிக் கொண்டிருக்கவில்லை. உடனடியாக ஆங்கில வழிக் கல்விக்கு மாறினர். அதையும் கைப்பற்றினர். ஆங்கிலவழிக் கல்வியால் தங்களது அகில இந்திய ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொண்டனர். இன்று வரை ஆங்கில வழிக் கல்வியைப் பார்ப்பனர்கள் கைவிடவே இல்லை. அதேசமயம், தங்களது சமஸ்கிருதப் பண்பாட்டை ஒரு ஆதிக்கப்பண்பாடாக நிலைநிறுத்திக்கொள்வதையும் விட்டுவிடவில்லை. ஆங்கில வழிக் கல்வியானது, பார்ப்பனர்களின் இன உணர்வைத் துளிகூடக் குறைத்துவிடவில்லை.*

*மொழிகளைக் கருவியாகப் பயன்படுத்திய பார்ப்பனர்களுக்கு இந்தியாவின் எல்லா நாடுகளும் பரிசாகக் கிடைத்தன. மொழிகளைக் கடவுளாகப் பார்க்கும் தமிழனும், பிற தேசிய இனங்களும் அவர்களுக்கு அடிமைகளாக இருக்கிறோம்.*

*பார்ப்பனர்களுக்கு இந்தியாவில் பேசப்படும் எல்லா மொழிகளும் அந்நிய மொழிகள்தான். ஒருவேளை மகாராஷ்ட்ராவிலோ, பஞ்சாப்பிலோ, ஒடிஷாவிலோ, குஜராத்திலோ வாழும் பார்ப்பனர்கள் அந்தந்த தேசிய இனத்தின் தேசிய மொழிகளில் கல்வி கற்றாலும் அவர்களுக்கு அவை அந்நிய மொழிகள்தான். ஆங்கிலமும் அந்நிய மொழி தான். ஆனால், அவர்கள் எங்குமே தாய்ச் சமஸ்கிருதப் பள்ளிகள் வேண்டும் என்றோ, சமஸ்கிருதத்தில் படித்தவர்களுக்கே வேலை என்றோ கேட்டதில்லை. இதைப் பெரியாரும் குறிப்பிடுகிறார்.*

> **"சமஸ்கிருதம் கட்டாயமாக்கப்படவேண்டும் என்று வறட்டுக்கத்தல் கத்துகிற எந்தப் பார்ப்பானாவது இங்கிலீஷ் வேண்டாம் என்று தள்ளுகின்றனரா? சொல்கின்றனரா? அப்படிச் சொல்கின்றபடி சங்கராச்சாரிகள், மகான்கள் கூட்டத்திலாவது யாராவது ஒருவர் இருக்கின்றார்களா?**
>
> **இப்போது நாம் உலக அந்தஸ்தில் மிகமிகத் தாழ்வான நிலையில் இருக்கிறோம். மனிதன் இன்றைய ஆசாபாசங்களுக்கு, அனுபவங்களுக்கு இன்றியமையாத தேவைகளுக்கு மற்ற நாட்டானோடு தலைநிமிர்ந்து நடப்பதற்கு நம்மிடம் என்ன இருக்கிறது?**
>
> **மருத்துவம், பொறியியல், சட்டம் முதலிய எத்தனையோ துறைகளின் நுணுக்கங்களுக்கு, செயல்களுக்கு நமக்குத் தக்க அறிவும், அனுபவமும் செய்முறையும் வேண்டுமானால் நமது தமிழ் மொழியில் என்ன இருக்கிறது?**
>
> **– தோழர் பெரியார், 'தாய்ப்பால் பைத்தியம்' நூல்.**

*தாய்மொழியில்தான் சிந்திக்க முடியும். தாய்மொழியில் சிந்தித்தால்தான் அறிவு வளரும் என்று பேசி வருபவர்கள், பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைப் பார்த்தாவது அறிவுப்பூர்வமாக மாற்றி யோசிக்க வேண்டும். 2000 ஆண்டுகளுக்கும் மேலாக, பல்வேறு தேசிய இனங்களையும் ஏமாற்றி, அனைத்து தேசிய இனங்களையும், அடக்கி, ஆதிக்கம் செய்து வருவதற்கு எவ்வளவு திட்டமும், அறிவாற்றலும் வேண்டும் என எண்ணிப்பாருங்கள். ஆங்கிலேயர் வருகைக்குப் பிறகு சமுதாயத்தில் சில மாற்றங்கள் வந்தாலும் கூட அந்த மாற்றங்களுக்கும் ஈடுகொடுத்து கடந்த 200 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதை அறிவுக்குத் தொடர்பில்லாததாகக் கூற முடியாது.*

### ஆர்.எஸ்.எஸ்ஸின் ஆங்கிலவழிக் கல்வி எதிர்ப்பு

*எந்தச் சத்தமும் இல்லாமல், ஆங்கில வழிக்*

கல்வியைக் கற்றுக்கொண்டு, ஆதிக்கங்களைக் கைப்பற்றி அவர்கள் நினைப்பதை அவர்களது அடிமைகளான அனைத்து தேசிய இன மக்களை வைத்தே செய்து முடிக்கின்றனர். ஆங்கில வழிக் கல்விக்கு எதிராக, கி.பி.1919 இல் முதன் முதலில் காங்கிரஸ் கட்சியில் ஆதிக்கத்தில் இருந்த பால கங்காதர திலகர் குரல் எழுப்பினார்.

**"சுதந்திர இந்தியாவில் மாநில அரசுகள் மொழி அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட்டு, மாநில மொழியையே அனைத்துக்கும் பயன்படுத்தப்படும். ஆங்கில ஆதிக்கம் அகற்றப்படும்"**

*- பால கங்காதர திலகர் 1919 நாக்பூர் காங்கிரஸ்.*

அதன் பிறகு, திலகரின் சீடர்கள், திலகரின் சிந்தனைவழித் தோன்றல்கள் இந்த நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஆர்.எஸ்.எஸ், ஸைத் தொடங்கினர். அந்த ஆர்.எஸ்.எஸ். அமைப்பு இன்று வரை தமது மொழிக் கொள்கை என, திலகரின் 1919 தீர்மானத்தைத்தான் கூறுகிறது.

1919 லிருந்து ஆங்கிலவழிக் கல்வி வேண்டாம் என்று கூறும் பார்ப்பனர்கள் இந்த 100 ஆண்டுகளில் எந்தக் காலத்திலும் ஆங்கில வழிக் கல்வியைக் கைவிடவில்லை. உலகப்போரின் ஜெர்மன் வெல்லும் என்ற கருத்துக்கள் பேசப்பட்டபோது, உடனடியாக ஜெர்மன் கற்றுக் கொள்ளத் தொடங்கினர். ஒருவேளை, அப்படி ஜெர்மன் வென்றிருந்தால், இன்று தமிழ்நாட்டில் ஜெர்மன் மீடியப் பள்ளிகள் ஏராளமாகத் தோன்றியிருக்கும். அவைகளில் பார்ப்பனக் குழந்தைகள் கல்வி கற்று ஜெர்மனுக்குச் சென்று கொண்டிருப்பார்கள். நாம் தாய்த் தமிழ்ப் பள்ளி நடத்த ஆர்ப் பாட்டம் நடத்திக் கொண்டிருப் போம்.

**தமிழ்நாட்டில் தமிழ்த்தேசியர்கள் கோரும், தாய்த்தமிழ் பள்ளிகளின் பயிற்றுமொழித் தன்மைக்கும், யுனெஸ்கோ கூறும் மாலி நாட்டுப் பயிற்றுமொழித் தன்மைக்கும் மிகப்பெரிய வேறுபாடுகள் உள்ளன.**

### தமிழ்த்தேசியர்களின் பார்ப்பன மனப்பான்மை

சமூகச் செயற்பாட்டாளர், எழுத்தாளர் ச.பாலமுருகன் கடந்த 2018 பிப்ரவரியில் தமிழ் இந்து நாளிதழில் எழுதிய கட்டுரையிலிருந்து,

"நமது அரசியலமைப்புச் சட்டத்தின் 8-வது அட்டவணையின் கீழ் அங்கீகாரம் பெற்ற பட்டியல் மொழிகளாக தற்போது 22 மொழிகள் உள்ளன. சுமார் 97 சதவீத மக்கள் இந்த மொழிகளைப் பேசுகிறார்கள். அதே சமயம் 3 சதவீத மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசுபவர்களாக உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பழங்குடி மக்கள். இந்த மக்களின் மொழிகளை அம்மக்கள் வாழும் மாநிலத்திலோ, மாவட்டத்திலோ எந்த அங்கீகாரத்துக்கும் சரி அரசுடனான தொடர்புக்கும் சரி பயன்படுத்தவே முடியாது. கல்வி என்பது இவர்கள் மொழியில் கிடையாது.

மேலும் 10 ஆயிரத்துக்கும் குறைவான எண்ணிக்கையில் உள்ள மக்கள் பேசும் மொழி கணக்கெடுப்பில்கூட மொழியாக அங்கீகரிக்கப் படுவதில்லை. இந்த மக்கள் தங்கள் எல்லாத் தேவைகளுக்கும் மாநில மொழியை மட்டுமே பயன்படுத்த வேண்டும். மாநில மொழியில் அல்லது அரசாங்க மொழியில் கரைந்து சுய அடையாளம் இழந்தால் மட்டுமே வாழ முடியும். அரசின் ஜனநாயகமற்ற பார்வையும் மொழிகள் அழிவதற்கு முக்கியக் காரணம். தமிழ்நாட்டில் 36 வகையான பழங்குடி மொழிகள் அம்மக்களால் பேசப்படுகின்றன. இவை தனித்துவமான கதைகளையும் வரலாற்றையும் பாடல்களையும் பழமொழிகளையும் கொண்டுள்ளன. அந்த இளைஞர்கள் தங்கள் மொழிகளைக் கைவிடுகிறார்கள்.

அவர்கள் தங்களின் தனித்துவமான அடையாளங் களைப் பேண முடியாமல் தமிழோடு ஒன்றாய்க் கலப்பதை ஆரோக்கியமானதாகக் கருத இயலாது. இந்த மொழிகளை ஆவணப்படுத்திப் பாதுகாப்பது முக்கியம். அவை விரைவில் நம் கண் முன்னே அழியப்போவதற்கான எல்லா வாய்ப்புகளும் உள்ளன. சமூகம் இந்த வலியைத் தன்னுடையதாகக் கருதாமல் புறக்கணிப்பது துரதிர்ஷ்டவசம். மொழியின் மரணம் என்பது மனித குல வரலாற்றின் மரணம் தவிர வேறென்ன?" என்கிறார்.

எழுத்தாளர் செல்வ.புவியரசன் அவர்களும்,

"யுனெஸ்கோ முன்வைக்கும் மொழிப் பன்மைத்துவம் என்ற முழக்கம், இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமை களில் ஒன்றாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில்? இன்றைய அரசியல் விவாதங்களில் அடிக்கடி இடம்பெறும் வார்த்தைகளில் சிறு பான்மையினர் என்பதும் ஒன்று. பயன் பாட்டில், அந்த வார்த்தை மதச் சிறுபான்மை யினரைக் குறிப்பதாகவே இருக்கிறது.

ஆனால் அரசியல் சட்டம் வரையறுத்துள்ளபடி, சிறுபான்மையினர் என்ற வார்த்தை மத அடிப்படையை மட்டுமே கொண்டது அல்ல. மொழியின் அடிப்படையிலான சிறுபான்மை யினரையும் அது குறிக்கிறது. சிறுபான்மை யினருக்கான உரிமைகள் என்பது மதச்சார்பற்றத் தன்மைக்கான விவாதங்களோடு முடிந்துவிட வில்லை. மொழிகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தையும் கொண்டிருக்கிறது.

மதச் சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் கல்வி நிறுவனங்கள் ஊர்தோறும் உருவாக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், மொழிச் சிறுபான்மையினர்கள் அந்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ளும் நிலை இன்னும் உருவாக வில்லை.

மொழி மற்றும் மதச் சிறுபான்மையினர் குறித்த ரங்கநாத் மிஸ்ரா அறிக்கையின் நிலை என்ன வென்று மத்திய அரசு பதில் சொல்ல வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. அந்த வழக்கின் விசாரணை நாளை (பிப்.22) நடக்கவிருக்கிறது.

மொழிச் சிறுபான்மையினர், மாநிலத்தில் முதன்மையாக பேசப்படும் மொழியில் திறனை வளர்த்துக்கொள்வதற்காக உதவித்தொகை வழங்கவேண்டும், அவர்களுக்குக் கட்டணச் சலுகை அளிக்கப்பட வேண்டும், சேர்க்கைக்கான குறைந்தபட்ச மதிப்பெண்ணில் சலுகை காட்ட வேண்டும் என்பது போன்ற ரங்கநாத் மிஸ்ராவின் அறிக்கையை மத்திய அரசோ அல்லது மாநில அரசுகளோ கண்டுகொள்ளவில்லை என்பது தான் உண்மைநிலை."

என்று தமிழ் இந்து நாளிதழில் எழுதியுள்ளார்.

தாய்மொழிவழிக் கல்வி குறித்துப் பேசுபவர்கள், தமிழ்நாட்டிலேயே தமிழைவிட மிகவும் பின்தங்கிய இடத்தில் இருக்கும் 30 க்கும் மேற்பட்ட மொழிகளைப் பற்றிப் பேசுவதே இல்லை. குறிப்பாக, தமிழ்நாட்டில் தெலுங்கு, கன்னடம், உருது போன்ற மொழிகளை வீட்டு மொழிகளாகக் கொண்ட மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 1 கோடி இருக்கும். இவர்கள் எல்லைப் பகுதிகளில் மட்டும் வசிப்பவர்கள் அல்ல. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் வாழ்கிறார்கள். இவர்களுக்குத் தாய்மொழியில், சிந்திக்கும் மொழியில் கல்வி வழங்க வேண்டும் என இன்றுவரை எந்தத் தாய்மொழிவழிக் கல்வி ஆர்வலராவது பேசியாவது இருக்கிறார்களா?

பள்ளிகளில் தமிழ் மொழிப் பாடத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் 2006 ஆம் ஆண்டு தமிழக அரசு சட்டம் ஒன்று பிறப்பித்து அதில் சிறுபான்மை பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் தமிழ் மொழிப் பாடத்தைக் கட்டாயம் படிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இத்திட்டம் ஆண்டுதோறும் படிப்படியாக நிறை வேற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதை எதிர்த்து மொழிச் சிறுபான்மைப் பள்ளிகளில் சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. விசாரணைக்குப் பின்னர் 10 ஆம் வகுப்புத் தேர்வில் தமிழ் மொழிப் பாடத்தேர்வு எழுத, மொழிச் சிறுபான்மை மாணவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு இந்த உத்தரவு வந்தது.

ஆனால் அந்த உத்தரவு நடைமுறைப் படுத்தப்படவில்லை. இதை எதிர்த்து உருது மொழிச் சிறுபான்மையினர் மட்டுமே அவ்வப்போது போராடி வருகின்றனர். தாய்மொழிக் கல்வி ஆதரவாளர்கள் அமைதியாகக் கடந்து செல்கிறார்கள். இது எந்த வகையில் நேர்மையான அணுகுமுறை?

### பார்ப்பனர் ஆதிக்கத்தை எதிர்ப்போம்; ஆனால் தலித்துகளை அடக்கி வைப்போம்

"பார்ப்பனர் ஆதிக்கத்தை எதிர்ப்போம். ஆனால் தலித்துகளை அடக்கி வைப்போம்" என்ற ஆண்டபரம்பரைக் கனவுக்காரர்களின் ஜாதி வெறிக்கும் - இந்தத் தமிழ்மேதைகளின் செயலுக்கும் என்ன வேறுபாடு?

தாய்மொழி வழிக் கல்விதான் அறிவை வளர்க்கும் என்றால், தாய்மொழி என்பதற்கு என்ன வரையறை? தாய்மொழி என்பது இயற்கையானது அல்ல. குழந்தையை வளர்க்கும் - குழந்தை வளரும் சூழலைப் பொறுத்துத் தாய்மொழி மாறும் என்கிறார் பெரியார். "பெரியார் அந்தக் காலத்து மனிதர், அவருக்கு மொழியைப் பற்றி எதுவும் தெரியாது... அந்தக் காலத்துல அவர் சொன்னது சரிதான், நாம இப்போ அப்டேட் ஆக வேணாமா?" என்று கூறும் "மொழியியல் அறிஞர்களுக்கு"...

தாய் உருதுப்பள்ளி, தாய்த்தெலுங்குப் பள்ளி, தாய்க் கன்னடப்பள்ளி, தாய் இருளர்பள்ளி, தாய் எருக்கலாப் பள்ளி, தாய் எரவல்லப் பள்ளி, தாய் கசபப் பள்ளி, தாய் காணிக்காரப் பள்ளி, தாய் காடர் பள்ளி, தாய்க் குறிச்சான் பள்ளி, தாய்க்குறும்பாப் பள்ளி, தாய்ச் சோளிகாப் பள்ளி, தாய்ப் பதிமலசார் பள்ளி, தாய் மலசார் பள்ளி, தாய் மலவேடப் பள்ளி, தாய் மன்னான் பள்ளி என இதுபோன்ற இன்னும் ஏராளமான தாய்மொழிவழிப்பள்ளிகளை உருவாக்காமல் - அதைப் பற்றிய பேச்சையே எடுக்காமல், இந்த மொழிகளைப் பேசும் மக்கள் மீது தமிழ்வழிக் கல்வியையும், தமிழையும் திணிப்பது எந்த வகையில் நேர்மையான செயல்?

அரசியல் காரணங்களால் இந்தியா எனும் எல்லையில் வாழவேண்டிய கட்டாயத்தில் இருக்கும் தமிழ்நாட்டு மக்கள்மீது இந்தியையும், சமஸ்கிருதத்தையும் திணிக்கிறது மத்திய அரசு. அதேபோல, பல்வேறு அரசியல், பொருளாதார, சமூகக் காரணங்களால், இலட்சக்கணக்கான பிறமொழி பேசும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட, பழங்குடியின மக்கள் தமிழ்நாட்டு எல்லைக்குள் வாழ்கிறார்கள். அவர்கள் மீது தமிழைத் திணிப்பதும், தமிழ்வழிக் கல்வியைத் திணிப்பதும் அந்தத் திணிப்புகளைப் புனிதப் படுத்தும் விதத்தில் தாய்மொழி நாள் கொண்டாடு வதும் ஜனநாயக விரோதமல்லவா? இந்தியப் பார்ப்பன அரசின் சமஸ்கிருதப்பாசிச, ஆதிக்க வெறிக்கும், இந்தத் தமிழ்த் திணிப்புப் பாசிச, ஆதிக்க வெறிக்கும் என்ன வேறுபாடு?

கன்னடம், தெலுங்கு, உருது பேசுபவர்கள் தங்களைத் "தமிழர்களாகவே" உணர்ந்து வாழ்கின்றனர். ஆனால், அவர்களது மொழி அடையாளம் அவர்களது தாய்மொழிதான். அந்த அடையாளத்தை அழிப்பது மிகப்பெரும் பார்ப்பன ஆதிக்கச் சிந்தனை ஆகும். பல மொழிகளைப் பேசினாலும் "தமிழர்"களாகவே வாழலாம். அதில் எந்தச் சிக்கலும் இல்லை. தாய்மொழி

அடிப்படையில் பல மொழிகளைக் கற்பது குறித்த யுனெஸ்கோ ஆய்வு நடத்தப்பட்ட நாடுகளான மாலி, பெரு போன்ற நாடுகளில் இதற்கு முன்மாதிரிகள் உள்ளன.

80 க்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசும் ஒரே இனம் மாலியில் இருக்கிறது. ஏன்? தமிழ்நாட்டில் கூட இன்னும் அழியாமல் உள்ள 36 மொழிகள், பழங்குடியினரின் மொழிகள் பேசப்படுகின்றன. இத்தனை மொழிகளைப் பேசும் பழங்குடியினர் அனைவரும் "தமிழர்கள்" தானே? அந்த 36 மொழி களோடு மேற்கண்ட 3 மொழிகளையும் இணைத்துக் கொள்வதில் என்ன சிக்கல் வரப்போகிறது? இந்தச் சிக்கலைச் சிந்தித்துத்தான் பெரியார் பார்ப்பனர் அல்லாத அனைவரையும் "திராவிடர்" இனமாக அறிவித்தார்.

"ஒற்றை மொழி - ஒற்றைப் பண்பாடு - ஒரே நாடு" என்று ஆங்கிலம் பேசுபவர்களோ, சமஸ்கிருதம் பேசுபவர்களோ, தமிழ் பேசு பவர்களோ யார் சிந்தித்தாலும், செயல்பட்டாலும் அதை எதிர்க்க வேண்டியது பெரியாரியலாளர் களின் கடமை.

நம்மைப் பொறுத்தவரை, பெரியாரைப் பின்பற்றும் எவரும் எந்த மொழிக்கும் ஆதரவானவர் களும் இல்லை. எதிரானவர்களும் இல்லை. எந்த மொழியின் உரிமையும் எதன் பேராலும் பறிக்கப் படக் கூடாது. அதே சமயம் எனது மொழி, எனது பண்பாடு என்று எதையும் புனிதப்படுத்திக் கொண்டு மனிதகுல வளர்ச்சியின் - வரலாற்றின் போக்கை நிறுத்தி, சாக்கடையாக்கக் கூடாது.

தாய்மொழிக்குப் பாடுபடுவதானால், முதலில் நமது தாய்மொழியால் அடக்கப்படுபவர்களின் உரிமைக்குக் குரல் எழுப்ப வேண்டும். பிறகு நமது தாய்மொழிக்கு எதிரானவற்றைக் களைய வேண்டும். அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு ஏற்றவாறு தாய் மொழிகளை அறிவியல்படுத்த, தோழர் பெரியாரைப் போல முயற்சி செய்ய வேண்டும்.

அதற்கு நாம் முதலில் மொழிப்பற்றைக் கைவிட வேண்டும். இதோ பெரியாரின் தீர்மானத்தைப் பாருங்கள். பொதுக்கூட்ட உரை அல்ல. மாநாட்டுத் தீர்மானம். தனது இறுதிக் காலத்தில், 1971 ஆம் ஆண்டு ஜனவரி 23, 24 தேதிகளில் சேலத்தில் நடந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

**" தீர்மானம் 4. : கடவுள், மதம், ஜாதி, மொழி, தேசம் ஆகியவற்றில் பற்று கூடாது."**

பற்றுக்களைத் துறந்து, மொழிகளைக் கருவியாக்குவோம். அந்தச் சிந்தனை வந்தால்தான் நமது தாய்மொழியை மட்டுமல்ல, அனைவரின் தாய்மொழிகளையும் காப்பாற்ற வேண்டும் என்ற சிந்தனை தோன்றும். அந்தந்த மொழிகளில் எதிர்காலச் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் அடையாளங்கள், பண்பாட்டுக்கூறுகள் என ஏதாவது இருந்தால்...இருந்தால் அவற்றையும் காப்பாற்ற வேண்டும் என்ற சிந்தனையும் தோன்றும்.

## இந்து முன்னணி நடத்திய ரியல் எஸ்டேட் யாகம்!

# கோவில் நிலம் ஸ்வாகா...

2018 டிசம்பர் மாதம் 22 முதல் 24 வரை திருப்பூர் மாவட்டம் பொங்கலூரில் இந்து முன்னணி சார்பில் மகாலட்சுமி ஷோடஷ யாகத்தை நடத்தியது.

அந்த யாகத்தில் அழிப்பதற்காக பொது மக்களிடம் செங்கல், நெய், வெண்ணெய், அரி, பருப்புகளும் திரட்டப்பட்டன. திருப்பூர், ஈரோடு, சேலம், கோவை மாவட்டங்களில் நான்கு ரதங்களில் வீதி வீதியாகப் பொருட்களைத் திரட்டினர்.

பள்ளிகளிலும் இந்து விஷ விதையைத் தூவ முயற்சி எடுத்தனர். தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர்களும், அனைத்து முற்போக்கு அமைப்புகளும் அந்தக் காவிப் பரப்புரையைத் தடுத்து நிறுத்தினார்.

இந்த யாகம் நடந்த இடமான பொங்கலூர் கண்டியம்மன் கோவில் நிலத்தை இந்து முன்னணி யினர் அபகரித்து விற்பனை செய்யவும் திட்ட மிட்டனர்என்ற உண்மை இப்போது வெளி வந்துள்ளது.

யாகம் நடந்த இடம், பொங்கலூர் கண்டி யம்மன் கோயில் நிலம் ஆகும். யாகம் முடிந்த வுடன் இந்த நிலத்தில், "விஜபி ஸ்மார்ட் டவுன்" என்ற பெயரில் மனையடிகள் பிரிக்கப்பட்டு, ரியல் எஸ்டேட் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது

இந்து முன்னணியின் நிலமோசடியைக் கண்டித்து, கோவில் நிர்வாகமே அந்த இடத்தில் ஒரு அறிவிப்பை விளம்பரமாக வைத்துள்ளது.

"பல்லடம் வட்டம், பொங்கலூர் கிராமம் சர்வே எண் 350 / 1 இல் உள்ள 11.20 ஏக்கர் நிலமானது (டிடி. எண் 1028 ) பொங்கலூர் கிராமம், பொங்கலூரம்மன் என்கிற, திருநீல கண்டியம்மன் கோவிலுக்குப் பாத்தியப்பட்டது.

இதில் அத்துமீறி நுழைபவர்கள், பிரவேசிப் பவர்கள், ஏலத்தில் எடுப்பவர்கள், கிரயம் செய்பவர்கள் மீது சட்டப்படி நடிவடிக்கை எடுக்கப்படும் - இப்படிக்கு, கோவில் நிர்வாகம்

யாகத்தின் பெயரால் நிலத்தைச் சுருட்டு பவர்கள் தான் இந்து அறநிலையத் துறையை மதத் தலைவர்களிடமும், ஆன்மீகவாதிகளிடமும் ஒப்படைக்கக் கோரிப் போராட்டங்களை நடத்துகின்றனர். மீண்டும் பார்ப்பனர் மற்றும் இந்தக் காவிக்கும்பலிடம் கோவில்கள் சென்றால் என்ன நடக்கும் என்பதற்கு ஒரு கூடுதல் ஆதாரம் தான் பொங்கலூர் நிலஅபகரிப்பு யாகம்.



சாமி. விபுலானந்த அடிகள்

# இங்கிலீஷ் படிப்பின் விளைவு

விபுலானந்த அடிகள் என்ற அறிஞர் தமிழ் ஈழத்தின் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். தமிழிலும் பல்வேறு மொழிகளிலும் ஆழ்ந்த புலமை கொண்டவர். 1922 ஆம் ஆண்டு முதல் சென்னையில் இராமகிருஷ்ண மிஷன் மயிலாப்பூர் மடத்தில் பணியாற்றியவர். இராமகிருஷ்ண மிஷன் நடத்திய ‘ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்’ என்ற தமிழ் மாத இதழுக்கும், Vedanta Kesari என்ற ஆங்கில இதழுக்கும் ஆசிரியராக இருந்தவர். மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதர் தேர்வில் தேர்வாளராகவும், தமிழ்ச்சங்க வெளியீடான ‘செந்தமிழ்’ இதழின் கட்டுரையாளராகவும் இருந்தார். 1924 க்குப் பிறகு இலங்கை திரும்பி, அங்கு இராமகிருஷ்ண மிஷன் மேற்கொள்ளும் கல்விப் பணிகளை ஒருங்கமைத்தார்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1931 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணி ஏற்றார். இசை சம்பந்தமான ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு ‘யாழ்நூல்’ என்ற நூலை எழுதினார். இராமகிருஷ்ண மிஷன் இமயமலைப் பகுதியில் உள்ள ‘அல்மோரா’ என்ற ஊரிலிருந்து வெளியிடும் ’பிரபுத்த பாரதம்’ என்ற இதழின் ஆசிரியராக இருந்தார். 1943 ஆம் ஆண்டில், இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கிய போது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராகப் பணி ஏற்றார்.

ஒரு தலைசிறந்த தமிழ் அறிஞராகவும், இந்து மதத்தின் மிகப்பெரும் மதப் பிரச்சார நிறுவனத்தின் முக்கியப் பொறுப்பாளராகவும் திகழ்ந்த விபுலானந்த அடிகளின் கட்டுரையைத் தோழர் பெரியார், தாம் நடத்திய ‘பகுத்தறிவு’ இதழில் மிக விரிவாக வெளியிட்டுள்ளார். ஆங்கிலத்தை எப்படி அணுகுவது என்பதில் அவரது வரிகளுக்கும் பெரியாரின் வரிகளுக்கும் வேறுபாடே பார்க்க முடியவில்லை. (கட்டுரையின் முடிவில் நமக்குச் சில மாறுபட்ட கருத்து உள்ளது)1936 ஆம் ஆண்டு நவம்பர் மாத இதழில் வெளியான அந்த அறிஞரின் கட்டுரையிலிருந்து சில பக்கங்களை மட்டும் வழங்குகிறோம்.

## இங்கிலீஷூம் தேச பாஷைகளும்

*நம் நாட்டில் பேசப்படும் பாஷைகள் எல்லாம் இங்கிலீஷ் பாஷையின் சம்பந்தத்தால் அதிக விருத்தியடைந்தன. சமஸ்கிருதம் அரபி பாஷைகளின் சம்பந்தத்தால் அடைந்ததை விட அதிகமான பிரயோஜனத்தைத் தேச பாஷைகள் இங்கிலீஷ் சம்பந்தத்தால் அடைந்துள்ளன என்பது மிகையாகாது.*

*தேச பாஷைகளின் சொற்றொகுதி (Vocobulary) பெரிதும் விரிவடைந்திருப்பது ஒன்று. சிறப்பாக அரசியல், விஞ்ஞானம், வியாபாரம், கைத்தொழில் துறைகளில்தான் இங்கிலீஷ் பாஷையின் கூட்டுறவால் விளைந்த பயன் நன்கு தெரியும்.*

*உதாரணமாக, தேச பாஷைகளில் பிரசுரிக்கப் படும் எந்த ஒரு தினசரிப் பத்திரிக்கையை எடுத்துக் கொண்டாலும் இங்கிலீஷிலிருந்து நாம் எடுத்தாளும் வார்த்தைகள் எவ்வளவென்பதும், அவ் வார்த்தைகள் குறிக்கும் கருத்துக்களை மொழி பெயர்ப்பு வார்த்தைகளால் தெரிவிப்பது எவ்வளவு கஷ்டமானது என்பதும் காணலாம். உதாரணத்திற்குச் சில பதங்களை (தினமும் வழக்கத்தில் உள்ளவற்றை) கீழே தருகிறோம்.*

**அரசியற் சொற்கள்:** *காங்கிரஸ், வொர்க்கிங் கமிட்டி; பார்லி மெண்டரி கமிட்டி; சேர்மென்; டெபுடி; பிரசிடண்டு; அசெம்பிளி; கௌன்சில்; வோட் ; போல்; ஆர்டர்; கமிஷன்; ஜஸ்டிஸ்; etc.*

**கலைச்சொற்கள்:** *ரேடியோ; புரோகிராம்; டெலிபோன் ப்ராட்காஸ்ட்; செட்; ரிகார்டு etc.*

*வியாபாரச் சொற்கள்: ஹாார்பர்; ஸ்டீமர்; மார்க்கட்; பீஸ் (ஜவுளி) ஆவரேஜ்; சிமிட்டி;பேல்; லாட்; ஸ்பெஷல்; கண்டிராக்ட் etc*

**கைத்தொழில் சம்மந்தமானவைகள்:** *லேபர்; யூனியன்; போனஸ்; சிம்னி’ இன்ஜின்; பவர்; மானேஜர்; டிரைவர் etc*

*மேற்கண்ட சொற்களில் சிலவற்றிற்குத் தேச பாஷைகளில் சொற்கள் தேடிப் பிடிக்கக்*

கூடுமென்றாலும், இங்கிலீஷ் சொற்கள் தெரிவிக்கும் உணர்ச்சிகளை, மொழிபெயர்ப்பு வார்த்தைகள் உண்டாக்குவது சாத்தியமில்லை. மேற்படி சொற்களைப் போன்ற நூற்றுக்கணக்கான சொற்களைத் தினந்தோறும் தேசபாஷைப் பத்திரிக்கைகள் உபபோகித்து வருகின்றன.

**பாஷை நடையில் மாறுதல்**

சொற்பெருக்கம் மட்டும் அன்றிப் பாஷை நடையிலும் இலக்கிய அமைப்பிலும் தேச பாஷைகள், இங்கிலீஷின் சம்மந்தத்தால் பெரிய மாறுதல்களையடைந்து வருகின்றன. உதாரண மாகத் தமிழில் 100 வருஷங்களுக்கு முன், வசன நடையில் நூல்களே இருக்கவில்லை. ஒன்றிரண்டு இருந்தாலும், அவைகள் செய்யுள் நூல்களின் உரை நூல்களாகவும் வியாக்கியானங்களாகவும் இருந்தன. இவைகளும், படிப்போர் பல்லை உடைக்கும் கடின நடையில் எழுதப்பட்டிருந்தன. அரும்பெருங் கருத்துக்களைச் செய்யுளிற் போலவே, வசனத்திலும் அமைத்து இலக்கியங்கள் எழுதலாம் என்றுதேச பாஷைப் பண்டிதர்கள் ஒப்புக் கொள்ளவில்லை.

வசன நூல்களின் மூலம்தான், பாமர ஜனங்கள் அறிவுபெற முடியும் என்பதையும் சமீப காலம் வரை ஒப்புக்கொள்ளவில்லை. வழக்கத்தில் இல்லாத வார்த்தைகளைக் கொண்டு கருத்துக்களை எவ்வளவுக்கெவ்வளவு மறைத்து எழுத முடியுமோ, அவ்வளவுக் கவ்வளவு நூலின் மதிப்பு உயர்வதாகப் பண்டிதர்கள் எண்ணினர். இந்தக் கொள்கை மாறி, வெள்ளைச் சொற்களால் எல்லாருக்கும் எளிதில் விளங்கும்படி எழுதுவதுதான் சிறந்த நடையென்று ஒப்புக்கொள்ளப் பட்டதும், இங்கிலீஸ் பாஷையின் இலக்கியப் போக்கையும், நடையையும் பின் பற்றியேயாகும்.

**தமிழில் 100 வருஷங்களுக்கு முன், வசன நடையில் நூல்களே இருக்கவில்லை. ஒன்றிரண்டு இருந்தாலும், அவைகள் செய்யுள் நூல்களின் உரை நூல்களாகவும் வியாக்கியானங்களாகவும் இருந்தன. இவைகளும், படிப்போர் பல்லை உடைக்கும் கடின நடையில் எழுதப்பட்டிருந்தன.**

**இலக்கியப் பொருளிலும் மாறுதல்**

நமது தேச பாஷைகளில் உள்ள இலக்கியங்களின் பொருளும், சமீப காலம்வரை மதம், கடவுள், பக்தி முதலிய ஒன்றிரண்டு துறைகளிலேயே சுழன்று தேங்கிக் கிடந்தது. கீழ்நாட்டு இலக்கியங்களில் 100க்கு 99, மத சம்மந்தமானவைகளாகவேயிருந்தன.

இயற்கைப் பொருள்களைப் பற்றியும், ஜன சமூக வாழ்க்கைக் காட்சிகளை உள்ளபடி சித்தரித்தலையும், விஞ்ஞான சம்மந்தமான ஆராய்ச்சிகளையும், பல்வேறு கலைகளின் வளர்ச்சியைப் பற்றியும் இலக்கியங்கள் எழுதப்பட ஆரம்பித்திருப்பதும் இங்கிலீஸ் இலக்கியங்களைப் பின்பற்றியேயாம். மேற்கூறிய மூன்று வகைகளிலும் தேசபாஷைகள், இங்கிலீஷின் கூட்டுறவால் நன்மையடைந்திருப்பதாகச் சொல்லலாம்.

**இங்கிலீஷே இரண்டாவது பாஷை.**

நம்முடைய உள்ளக் கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பதற்கும், பிறர் கருத்துக்களை நாம் அறிந்து கொள்வதற்கும் பாஷை உதவுகிறது. நம்முடைய மனத்தில் எழும் உணர்ச்சிகளைத் தங்கு தடையின்றித் தாராளமாய் வெளியிடுவதற்கு நாம் பிறந்தது முதல் இலக்கியப் பயிற்சிக்கும் கவிதை யின்பத்திற்கும் ஒருவரது தாய் மொழியே சிறந்த சாதனமாகும்.

ஆனால், பாஷை ஜனங்களுடன் கூட்டுறவு கொண்டு ராஜீய வியாபார சம்பந்தப்பட்ட உலக விவகாரங்களில் ஈடுபடுவதற்கு, நம்முடைய தாய் மொழி பயன்படுவதில்லை. இரண்டாவது பாஷையைக் கற்க வேண்டி வருகிறது. இந்த இரண்டாவது பாஷையானது, உலகில் உள்ள பெரும் பாலானவர்களுக்குப் பொதுவானதும் நாகரீக வளர்ச்சிக்குத் துணையாக இருப்பதும், இலக்கியப் சிறப்பு வாய்ந்ததும் ஆக இருத்தல் அவசியம்.

இந்த வகையில் பார்க்கும் போது நம் நாட்டின் தற்கால நிலைமைக்கும், உலக நிலைமைக்கும் பொருத்தமான பொதுப்பாஷை இங்கிலீஷேயாகும். இங்கிலீஷையே நாம் இரண்டாவது பாஷையாகக் கற்பது பயன் தரும்.

**இங்கிலீஷிக்கு மதிப்புக் குறையவில்லை.**

தேசிய இயக்கத்தில் தீவிரமாய் ஈடுபட்டுள்ள சிலருக்கு, இங்கிலீஷ் பாஷையிடத்தில் உள்ள வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இங்கிலீஷ்காரரிடத்தில் உள்ள துவேஷமும், சுதேச பாஷையிடத்துள்ள பிரேமையும், இங்கிலீஷ் பாஷையின் சிறப்பையும், அதனால் ஏற்பட்ட நன்மைகளையும் மறைத்து விடுகின்றன.

ஆயினும் ஹிந்திப் பைத்தியம் பிடித்த தேசபக்தர்கள்கூடத் தங்கள் மக்களுக்கு இங்கிலீஷ் கல்வி கற்பிக்காமல் நிறுத்திவிடவில்லை. காலேஜ்களிலும், உயர்தர பாடசாலைகளிலும் இடத்திற்கு மும்முரமான போட்டி இருந்து வருகிறது. இங்கிலீஷ் கல்வி கற்று அதன் மூலம் பெருமையடைந்த ஒரு கூட்டம், தங்கள் பிள்ளை குட்டிகளுக்கு வீட்டில் பேசுவதுகூட இங்கிலீஷில் பழக்கி, இங்கிலீஷ் பாடசாலைகளுக்கு அனுப்பிக் கொண்டு, மேடைகளில் வந்து, ஹிந்தியை எல்லாரும் கற்றுக் கொள்ளுங்கள் என்று பிரசாரம் செய்வ தென்றால், அது ஏமாற்றுப் பிரசாரம் அல்லவா என்று கேட்கின்றோம். இவர்கள் பேச்சை நம்பி இங்கிலீஷை வெறுத்துக் கற்காமல் விடுவது முட்டாள்தனம் அல்லவா என்றும் கேட்கின்றோம்.

ஆயினும் சாமான்ய ஜனங்கள் இவர்கள்

பேச்சை ஏற்றுக்கொள்ளவில்லை. இளவயதில் இங்கிலீஷ் கற்கும் பாக்கியம் பெறாதவர்கள், வயதுவந்த ஏதோவொரு தொழிலை நடத்தி வருகிறபோதுகூடச் சிறிதாவது இங்கிலீஷ் எப்படியாவது படித்துக்கொள்ளவேண்டும் என்று பெருமுயற்சி செய்கிறார்கள். சாமான்ய ஜனங்களிடத்தில் வளர்ந்துள்ள இந்த இங்கிலீஷ் பாஷா விருப்பத்தை அறிந்து, புஸ்தக வியாபாரிகள் "ஆங்கிலபோனி "யென்றும் "ஆங்கில ஆசான்" என்றும் "இங்கிலீஷ் ஸ்வயபோதினி" என்றும் தமிழ்மூலம் இங்கிலீஷ் கற்பிக்கும் புஸ்தகங்களை வெளியிட்டு, இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் விலை போட்டுப் பதினாயிரக்கணக்கான பிரதிகளை வருஷா வருஷம் விற்று வருகிறார்கள். இதிலிருந்து, இங்கிலீஷ் பாஷைக்குள்ள மதிப்பு அதன் பிரயோஜனத்திற்குத் தகுந்தபடி வளர்ந்து வருகிறது தெரியக் கூடும்.

### உலக இலக்கியங்களின் பொக்கிஷம்

கவி ரவீந்திரநாத் தாகூர் வங்காளியில் பல சிறந்த நூல்களை எழுதியிருக்கிறார். ஆனால் அவரை உலகம் மதிக்கச் செய்தது, அவருடைய நூல்களின் இங்கிலீஷ் மொழிபெயர்ப்புக்களே. தாகூரின் கவித் திறமையை நாம் (தமிழர்) அறிந்ததும், அவர் நூல்களின் இங்கிலீஷ் மொழிபெயர்ப்புகளின் மூலமேயாகும். ஆனால் தாகூரின் சொந்த மொழிகளைப் படித்து இன்புற வேண்டுபவர்கள் வங்காளி பாஷையைப் படிக்கட்டும்.

அதுபோல, துளசிதாஸர் இராமயணத்தை கிரந்தகர்த்தாவின் சொந்த வார்த்தைகளில் படித்து இன்பம் பெற விரும்புபவர்கள் ஹிந்தி கற்றுக்கொள்ளட்டும். உமாரின் ரூபாயத்தைப் பாரசீக பாஷையில் படிக்க விரும்புபவர், பாரசீக பாஷை கற்கட்டும்; கத்தேயின் "பாஸ்ட் (Goethe's faust) என்னும் உலகிற் சிறந்த காவியத்தை ஜெர்மன் பாஷயில் படிக்க விரும்புவர் ஜெர்மன் பாஷை கற்றுக் கொள்ளட்டும்; ஹோமரின் இலியத்தை கிரேக்க பாஷை கற்றுப் படிப்பவர் படிக்கட்டும்;

ஆனால் உலகின் பல பாஷைகளில் உள்ள சிறந்த இலக்கியங்களை, அவ்வப்பாஷைகளைக் கற்றுப் படிப்பது எந்த ஒருதனி நபருக்கும் சாத்தியமான காரியம் அல்ல. உலக இலக்கியங்களில் பொறுக்கு மணிகள் போன்றுள்ள சிலவற்றைக்கூட, நம் நாட்டு பாஷைகளில் மொழிபெயர்த்து விடுவதும் உடனே கைகூடும் காரியமல்ல. ஆனால், ஒருவன் இங்கிலீஷ் பாஷை ஒன்றைக் கற்றுக் கொள்வதன் மூலம், உலக இலக்கியப் பொக்கிஷத் திற்குத் திறவுகோலைப் பெற்று விடுகிறான். உலகத்தின் சிறந்த நூல்கள் எல்லாவற்றையும் வாசிக்க வசதியடைந்து விடுகிறான்.

### ஹிந்திக்கு ஆட்சேபணை

இந்தியாவில் சுமார் 9 கோடி மக்களுக்கு ஹிந்தி தாய் பாஷையாக இருப்பது உண்மை. ஆனால் மீதி 26 கோடி மக்களும் ஹிந்தியைக் கற்றுக்கொள்வ தென்பது என்றும் முடியாத காரியம். எங்கும், சமூகத்தின் ஒரு சிலர்தான் தாய் பாஷையுடன் இரண்டாவது பாஷை கற்க முடியும்.

இப்போது இந்தியா முழுவதிலும் இங்லீஷ் பாஷை பொதுப் பாஷையாக இருந்து வருகிறது. ஹிந்தி பேசப்படும், ஐக்கியமாகாணம், பீகார் மாகாணங்களிலும் இங்கிலீஷ்தான் பொதுப் பாஷையாக விருக்கிறது. இங்கிலீஷ், இந்தியர்கள் ஒருவருக்கும் தாய் பாஷையாக இல்லாத காரணத்தால், இங்கிலீஷ் கற்பதில் எந்த ஒரு சமூகத்திற்கோ, ஒரு மாகாணத்திற்கோ விசேஷ சௌகரியம் அல்லது சலுகையிருக்க இடமில்லை. இங்கிலீஷ் கற்பதில் உள்ள சௌகரியமும், கஷ்டமும், எல்லாச் சமூகங்களுக்கும், எல்லா மாகாணங் களுக்கும் ஒரே தன்மையில் இருப்பதால், யாருக்கும் ஆட்சேபிக்க இடமில்லை.

ஆனால் ஹிந்தியைப் பொது பாஷையாக ஏற்படுத்துவதில், ஹிந்தி வழங்கும் மாகாண வாசிகளுக்கும், ஹிந்தியைத் தாய் பாஷையாகவுள்ள சமூகங்களுக்கும், விசேஷ சௌகரியங்களும், சலுகைகளும் ஏற்பட்டுவிடும். இதுபற்றி மற்ற மாகாணவாசிகளும், மற்ற சமூகங்களும் பொறாமைப் படுவதும் நியாயமாகும். ஹிந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளதவர்களுக்கு, இங்கிலீஷைவிட ஹிந்தி அந்நியமான பாஷை யாகவே இருக்கிறது. ஆகையால், ஹிந்தி பேசாத ஜனங்கள் ஹிந்தியைப் பொதுப் பாஷையாக்க உடன்பட மாட்டார்கள். மற்ற பாஷைகள் சம்மதிக்கா.

### ஹிந்தியும் மகம்மதியரும்

பேச்சு வடிவத்தில், ஹிந்திக்கும், இந்துஸ் தானிக்கும் ஓரளவு ஒற்றுமை இருப்பதிலிருந்து, மகம்மதியர் ஹிந்தியை ஒப்புக்கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது தப்பு. அரபி, பாரசீகச் சொற்கள் மிகுதியும் கலந்த இந்துஸ்தானியைப் பேசும் மகம்மதியர் சம்ஸ்கிருதச் சொற்கள் மலிந்த ஹிந்தியைப் பேச்சு வழக்கிற்கூடத் தங்கள் மொழியாக ஒப்புக்கொள்வதில்லை.

வரிவடிவத்தில், ஹிந்தியின் தேவ நாகரி லிபியை, மகம்மதியர் என்றும் ஒப்புக் கொள்ளப் போவதில்லை. இந்துஸ்தானியும் சிறிது ஹிந்தியும் கலந்த கிராமிய பாஷையாக வட இந்தியர்களில் பெரும்பாலார் பேசிவரும் ஹிந்தி - இந்துஸ்தானி பாஷைக்கு, தேவ நாகரி லிபியும், இந்துஸ்தானி லிபியும் இல்லாமல்,ரோமன் லிபியை (இங்கிலீஷ் எழுத்து) ஏற்படுத்தினால், ஒருவேளை வட இந்தியாவுக்கு, ஹிந்தியும் இந்துஸ்தானியும் கலந்த இந்த கிராமிய பாஷை பொது மொழியாகக்கூடும். இந்த நிலைமையில், திராவிட தேசத்தவர்கள், சமஸ்கிருதச் சார்பில்முளைத்த, தேவ நாகரி லிபியில் வரையப்படும் இலக்கிய ஹிந்தியைப் பொதுப் பாஷையாக ஏற்பது எப்படி முடியும்?

### காலநிலை

விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக, உலகம் நாளுக்கு நாள் சிறியதாகி வருகிறது. காலம், தூரம்

ஆகிய இரண்டு தடைகளும் தகர்க்கப்பட்டு வருகின்றன. உலகின் பற்பல நாடுகளும் விரைவில் இணைக்கப் படுகின்றன. பரந்த கடல்களையும், உயர்ந்த மலைகளையும், தாண்டி, மனிதன் குரல் உலகின் ஒரு கோடியிலிருந்து மற்ற கோடிக்குக் கேட்கிறது. ரேடியோ, கிராமபோன், டாக்கி, டெலிவிஷன் முதலிய சாதனங்கள், எழுத்துப் படிப்பின் அவசியத்தைக் குறைத்து எல்லா விஷயங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளும் படிச் செய்துவிட்டன. மேற்கண்ட நவீன சாதனங்களின் முழுப்பிரயோஜனத்தையும் நாம் அடையவேண்டுமானால், நாகரீக உலகத்தில் செல்வாக்குப் பெற்றுள்ள இங்கிலீஷ்பாஷையை நாம் அறிந்து கொண்டால்தான் பயன் உண்டு.

நியூயார்க்கிலிருந்து டெலிபோனில் பேசுவதையும், இலண்டனிலிருந்து ரேடியோவில் சொல்வதையும், பாரிசிலிருந்து பிராட்காஸ்ட் செய்வதையும், இங்கிலீஷும் ஹிந்தியும் தெரிந்த துவிபாஷிகளைக் கொண்டு முதலில் ஹிந்தியில் மொழி பெயர்த்துப் பின் நம் தாய் பாஷைகளில் மொழி பெயர்த்துத் தெரிந்துகொள்ளவேண்டிய நிலைமை விரும்பத்தக்கதாவென்பதைத் தமிழர்கள் யோசிக்கவேண்டும்.

இங்கிலீஷைப் புறக்கணித்து, ஹிந்தியைப் பொதுமொழியாக நாம் ஒப்புக்கொள்வோமானால், நாகரீக உலகத்துடன் நேரடியாகச் சம்பந்தம் வைத்துக்கொள்வது சாத்தியமில்லாமற் போகும். ஹிந்தி மூலமாகவே வெளியுலகச் சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியுமா என்பதையும் யோசித்தறியும்படிக் கேட்கிறோம்.

**இங்கிலீஷைப் புறக்கணித்து, ஹிந்தியைப் பொது மொழியாக நாம் ஒப்புக் கொள்வோமானால், நாகரீக உலகத்துடன் நேரடியாகச் சம்பந்தம் வைத்துக் கொள்வது சாத்திய மில்லாமற்போகும்.**

**உலகப்போக்கு**

சுமார் 3000 பாஷைகள் வழங்குகிற உலகம் முழுவதற்கும் ஒரு பொதுப் பாஷையை ஏற்படுத்த வேண்டுமென்று, நாகரீகம் பெற்ற ஜனங்கள் பலரும் முயற்சித்து வருகிறார்கள். "எஸ்பிராண்டோ" (Esperanto) என்ற ஒரு பாஷை உலகப் பொதுப் பாஷையாக தற்காலம் இருந்து வருகிறது. ஆனால் இப்பாஷை பெருவாரியான மக்களால் பயிலப் படுவதில்லை. இதற்குப் பதில், செல்வாக்குள்ள மேல்நாட்டுப் பாஷைகளில் ஒன்றே உலகப் பொதுப்பாஷையாக ஏற்படும் என்று அறிவாளிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

இங்கிலீஷ், பிரஞ்சு அல்லது ருஷியன் ஆகிய மூன்றில் ஒரு பாஷை, உலகப் பொதுப்பாஷையாகக் கூடும் என்று எச்.ஜி.வெல்ஸ் சொல்லுகிறார். உலகத்தில் மொத்தம் சுமார் 180 கோடி ஜனங்கள் இருக்கின்றனர். இவர்களில் 18 கோடிப் பெயர் இங்கிலீஷும், 10 கோடி பெயர் ருஷிய பாஷையும், 7 கோடி பெயர் பிரஞ்சு பாஷையும் பேசுவதாகக் கணக்கு. தற்காலம் ஐரோப்பாவில் சர்வதேசக் கூட்ட நடவடிக்கைகள் பெரும்பாலும் பிரஞ்சு பாஷையிலும், சிறுபாகம் இங்கிலீஷ் பாஷையிலும் நடைபெறுகின்றன.

நாம் ஹிந்தியைப் பொதுப்பாஷையாக்கத் தீர்மானிப்பதற்குள்ளாகவே, உலகம் இங்கிலீஷைப் பொதுப்பாஷையாக ஒப்புக்கொண்டுவிடும். உலகம் உள்ள இந்த நிலையில், ஹிந்தியைப் பொதுப் பாஷையாக ஆக்க வேண்டுமென்று கருதி, உலகத்தில் ஒப்பற்ற செல்வாக்குப்படைத்திருக்கும் இங்கிலீஷ் பாஷையைப் புறக்கணிப்பது, நமக்குச் சிறிதும் நன்மையுண்டாக்காது.

**ஹிந்தியைப் பொதுப்பாஷையாக்குவதால்**

1. நம் தாய்மொழிகளின் வளர்ச்சியும் ஆக்கமும் குறையும்.
2. நாகரீக வளர்ச்சியும், முற்போக்குணர்ச்சியும் தடைப்படும்.
3. நாகரீக உலகத்துடன் நேர்முகமாக நமக்குள்ள தொடர்பு நீங்கிவிடும்.
4. பிற்போக்குணர்ச்சியும் பௌராணிக மனப் பான்மையும் ஊக்கம் பெறும்.
5. விஞ்ஞான, கலைகளின் வளர்ச்சியும், நவீன சாதனங்களால் அடையக்கூடிய நன்மைகளும் குறையும்.
6. பாமர மக்கள் மனத்தில் முளைத்துள்ள சமூக, சுதந்திர, சுய மரியாதையுணர்ச்சிகள் பரவி வளர்வது கஷ்டமாகிவிடும்.
7. இங்கிலீஷ் பாஷையுடன் தோன்றி வளர்ந்துள்ள அரசியல் கொள்கைகளும், ஜனநாயக உணர்ச்சியும், ஸ்தாபனங்களும் ஒழிந்து பழமை விலங்குகளை மக்கள் பூட்டிக்கொள்ளச் சாதகமாகும்.

தீவிர தேசீயவாதிகள் கனவு காண்பதுபோல, இங்கிலீஷ் ஆட்சியும், இங்கிலீஷ் சம்பந்தமும் நாளையதினமே ஒழிந்துவிடப் போவதில்லை. அப்படி ஒழிந்த காலத்திலும் கூட, சுதந்திரம் பெற்ற இந்தியா, நாகரீக உலகத்தின் சம்பந்தத்தை அறுத்துவிட்டுத் தனித்து வாழமுடியாது. சுதந்தரம் பெற்ற பின்னும் இங்கிலீஷே, நமக்கு மிகுதியும் பயன் தரும் பொதுப்பாஷையாகும்.

எனவே இதுபோது ஒரு சிலர் செய்துவரும் ஹிந்திப் பிரசாரத்திற்குத் தமிழர் எவரும், செவி சாய்க்கலாகாது; எவ்வித உதவியும் செய்யக்கூடாது. அவ்வாறு செய்வது தமிழர் முன்னேற்றத்திற்குத் தடை செய்வதாகும்.

"இந்தியாவின் பல பாகங்களிலும், உயர்ந்த விஞ்ஞானக் கலையாராய்ச்சிக்குப் பொது மொழியாக ஆங்கில மொழி அமைதலும், ஒவ்வொரு மாகாணத்திலும் ஏழை மக்கள் எளிதிற் பயின்றுகொள்ள வேண்டிய கலைத்துறைகள் அனைத்தும் நாட்டு மொழிகளில் அமைந்து நிற்பதும் பொருத்தமாகும்"

**- பகுத்தறிவு ஏடு - 20.09.1936**

# தாலி-நாய்களோடு அலையும் பெருசுகளுக்கு

பிப்ரவரி 14 உலக காதலர் நாள் என்று நாம் அனைவரும் அறிந்திருப்போம். நம்மைப் போன்ற திராவிடர் இயக்கங்களும், பெரியாரியலாளர்களும் ஜாதி, மத மறுப்புத் திருமணங்களுக்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதால் காதலர்நாளைக் கொண்டாடுகிறோம். அனைவரையும் கொண்டாடச் சொல்லிப் பரப்புரைகளையும் நடத்தி வருகிறோம்.

அதேநேரம், அனைத்து இந்து மதவெறி, ஜாதிவெறி அமைப்புகளும் ஒரு சில இஸ்லாமிய அமைப்புகளும் இந்த நாளைக் கொண்டாடக் கூடாது என்று பெரும்பாடுபட்டுக் கொண்டிருக் கின்றனர். அந்த ஜாதி, மத வெறியர்களின் நோக்கங்களைச் செயல்படுத்துவதற்காக சில கம்யூனிஸ்ட் தோழர்களும் காதலர்நாளை எதிர்த்து வருகின்றனர்.

நமது ஜாதி, மத சௌக்கிதார்கள் பிப்ரவரி 14 ஆம் நாளில் காதலர்கள் கூடும் பூங்காக்கள், கடற்கரைகள், திரையரங்குகள், கோவில்களில் அலைந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், இளைய சமுதாயம் எந்த ஜாதிக்காரர்களையும், எந்த மதத்துக் காரர்களையும் கண்டுகொள்வதில்லை. நமது மாணவர்கள் பிப்ரவரி 7 ஆம் தேதியே காதலர் தினக் கொண்டாட்டத்தைத் தொடங்கி, 21 ஆம் நாள் வரைத் தொடர்ச்சியாக, சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கிராமங்களில் ஜாதியையும், மதத்தையும், பார்ப்பன ஆதிக்கத்தையும் பாதுகாக்கும் குலதெய்வக் கோவில்களில் சாமி கும்பிடு அறிவிப்பதைப் பார்த்திருப்போம். அதாவது சாமி கும்பிடக் குறி கேட்பது, சாமி சாட்டுவது, கங்கணம் கட்டுவது எனத் தொடங்கி சாமியைப் பெட்டியில் கொண்டுபோய் அடைப்பது வரை பல நாட்கள் தொடர்ச்சியாக விழாச் சடங்குகள் இருப்பதைப் பார்த்திருப்போம்.

அதற்கு இணையாக, காதலர் நாள் என்பதை 15 நாட்கள் வரை கொண்டாடிக் கொண்டிருக்கிறது மாணவ இனம். 96 படக் காதல் போல இல்லாமல், முத்தநாள், உதைக்கும் நாள், பிரிவு நாள் என காதலோடு முத்தத்தையும், பிரிவையும் கொண்டாடும் பண்பாட்டை நாம் வரவேற்க வேண்டும்.

இந்தப் பதினைந்து நாள் கொண்டாட்டங் களில் நுகர்வுப் பண்பாடும் வணிகமும் இருந்தால் அதை அகற்றுவதற்கு முயற்சி எடுக்கலாம். இந்து மதத்தின் தீபாவளி, பொங்கல், ஆயுதபூஜை, சரஸ்வதி பூஜை, விநாயகர் சதுர்த்தி போன்றவற்றில் நடக்கும் வணிகக் கொள்ளையைவிட இந்தக் காதலர் நாள் கொண்டாட்டத்தில் பெரிய வணிகக் கொள்ளை நடப்பதில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

காதலர் நாள் சரியா? தவறா? என்று பேசுவதற்கு முன்பு காதலர் நாளை இன்றைய இளைஞர்களும், மாணவர்களும் எப்படிக் கொண்டாடுகிறார்கள் என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

பிப்ரவரி 14 ஆம் தேதி நாய்களோடும், தாலிகளோடும் அலைந்துகொண்டிருக்கும் பெருசுகளுக்கு ஒரு செய்தி.

காதலர்நாள் பிப்ரவரி 7 ஆம் தேதியே தொடங்கிவிடுகிறதாம். பிப்ரவரி 7 இல் தொடங்கி 21 வரை நடக்கும் காதலர்விழா நடைமுறைகள் குறித்து, ஒரு பள்ளி மாணவி எழுதி அனுப்பிய தகவல்களை அப்படியே தருகிறோம். படியுங்கள்.

**பிப்ரவரி 7: Rose Day**

இன்று எங்க ஃபிரன்ட்ஸ் எல்லோரும் பிடித்த நபர்க்கு ரோஸ் கொடுப்போம். அப்றம் "ரோஸ் நாள் வாழ்த்துக்கள்! என்று சொல்வோம்.

**பிப்ரவரி 8: Propose Day**

இன்று நாங்க எங்களுக்குப் பிடித்த ஒரு நபர்க்கு பிரப்போஸ் பண்ணுவோம்.

**பிரப்வரி 9: Chocolate Day**

இன்று நாங்க ஃப்ரன்ட்ஸ்க்கு சாக்லேட் வாங்கித் தருவோம். அப்றம் இன்று நாங்க நிறைய சாக்லேட் சாப்டுவோம்.

**பிப்ரவரி 10: Teddy Day**

இன்று நாங்க பிடித்த நபருக்கு 'டெடி' வாங்கிக் கொடுப்போம்.

**பிப்ரவரி 11: Promise Day**

இன்று நாங்க ஃப்ரன்ட்ஸ் குள்ள பிராமிஸ் பண்ணுவோம்.

**பிப்ரவரி 12: Hug Day**

இன்று நாங்க ஃபிரன்ட்ஸ் குள்ள Hug பண்ணுவோம். அப்றம் Happy Hug Day அப்டினு சொல்லுவோம்.

**பிப்ரவரி 13: Kiss day**

இன்று நாங்க எங்களுக்கு பிடித்த நபருக்கு Kiss கொடுப்போம்.

**பிப்ரவரி 14: Valentine Day**

இன்று நாங்க ஒன்றும் பண்ண மாட்டோம். இன்று Lovers கொண்டாடும் நாள். நாங்க சும்மா Happy Valentine 's Day அப்டினு what's App Status மட்டும் போடுவோம்.

அப்றம் இந்த நாளில் பச்சை வண்ண Dress போட்டா, waiting அப்டினு அர்த்தம்.

சிவப்பு வண்ண Dress போட்டா Committed அப்டினு அர்த்தம்.

கருப்பு வண்ண Dress போட்டா காதலில் விருப்பம் இல்லை அப்டினு அர்த்தம்.

இந்த மாதிரி Dress போட்டு கொண்டாடுவாங்க. அப்றம் (Heart Pop) அப்டினு ஒரு Chocolate இந்த வாரத்தில் மட்டும் தான் கிடைக்கும்.




பிப்ரவரி 15: **Morattu Single Day**

காதல் பண்ணி Break up செய்தவர்களுக்கு இந்த நாள். அவுங்கதான் இந்த நாளைக் கொண்டாடுவாங்க. ஆனா அவுங்க Crush, Crazy, Site அப்டினு எல்லாமே பண்ணுவாங்க. ஆனா காதல் மட்டும் பண்ண மாட்டாங்க. அவுங்க, காதல்?... அப்டினா என்ன? அப்டினு கேப்பாங்க. ஆனா அவுங்களுக்குத்தான் எல்லாமே தெரியும்.

பிப்ரவரி 16: **Kicking Day**

இந்த நாள் அப்போ எங்களுக்கு யார் கிடைத்தாலும் அவுங்களப் போட்டு நாங்க உதைப்போம். அதுதான் Kicking day. நாங்க உதைத்த அப்றம் Happy Kicking day அப்டினு சொல்லிட்டுப் போய்ட்டே இருப்போம்.

பிப்ரவரி 17: **Perfume day**

இந்த நாள் அப்போது மட்டும் கடைகள்ள Perfume அதிகமாக விப்பாங்க. அப்றம் இந்த நாள் அப்போ நாங்க எங்களுக்குப் பிடித்த Perfume அடிச்சிட்டு வருவோம்.

பிப்ரவரி 18: **Flirting Day**

பிப்ரவரி 19: **Confession Day**

பிப்ரவரி 20: **Missing day**

அப்டினா இந்த ஒரு நாள் மட்டும் Friends & Lovers எல்லாரும் தனித் தனியா இருப்போம். தனித் தனியா இருந்து Miss பண்ணுவோம். எங்க நட்ப Miss பண்ணுவோம்.

பிப்ரவரி 21: **Break up day**

இந்த நாள்தான் மிக முக்கியமான நாள். ஏன்னா, இந்த நாள் அப்போ Lovers Break up பண்ணிக்குவாங்க. Rose day இருந்து ஆரம்பித்து கடைசீல Break up day வரை கொண்டாடுவாங்க நம்ம Youngsters. இந்த நாள்தான் கடைசி நாள்.

## V - Max Game

இந்த Game மை ஆரம்மித்த கூட்டம் யார் அப்டினா B2NILYJ Guys. இது யார் அப்டினா உலகத்துல மிக மிக முக்கியமான ஆளுங்க இவுங்களாம். இவுங்க இருக்குறதால தான், இந்த உலகம் இவ்ளோ வேகமா ஓடுது. அப்றம் இந்த Game முக்கு வரலாம்.

இது Chris ma Chris game மாதிரி தான் இதுவும். ஆனா, Christmas நேரத்தில் விளையாடினால் அதன் பெயர் Chris ma Chris game. Valentine day நாட்களில் விளையாடினால் அது V-Max game. இந்த விளையாட்டை பிப்ரவரி 7 லில் ஆரம்பித்து பிப்ரவரி 14 ல் முடித்திடுவோம்.

எப்பிடி அப்டினா, முதலில், இந்த விளையாட்டை விளையாடும் போது ஒரு கூட்டம் வேண்டும். அந்தக் கூட்டத்ததுல 8 இல்லனா, 10 பேர் விளையாடலாம். இந்தக் கூட்டத்துல இருக்குற எல்லாருடைய பெயர்களையும் ஒரு சின்னத் தனித் தனித் தாளில் எழுத வேண்டும். அப்றம் அந்தச் சீட்டைக் குலுக்கிப் போட வேண்டும்.

அப்றம் ஒவ்வொருவரும் ஒரு ஒரு சீட்டை எடுக்க வேண்டும். அந்தச் சீட்டைப் பிரித்துப் பார்க்க வேண்டும். பார்த்த சீட்டில் யார் பெயர் வந்துருக்கோ அவுங்களுக்கே தெரியாம அவுங்க Bag or Pouch இல் தினமும் ஒரு Chocolate பேDare ra அவுங்க செய்யணும். அப்பிடி செய்யலனா அவாடணும். with Dare என்று எழுதிப் போடணும். அந்த ங்களுக்கு ஒரு தண்டணை இருக்கும்.

அப்றம் நமக்கு யார் பெயர் வந்துருக்கு அப்டினு, யாருக்கும் சொல்லக் கூடாது. கடைசி நாளில் தான் நமக்கு யார் பெயர் வந்துருக்கோ அவுங்களுக்கு ஒரு Gift வாங்கித் தரணும். எனக்கு உன் பெயர் தான் வந்துருக்கு அப்டினு சொல்லி அந்த Gift ஐ தந்து, இந்த விளையாட்டை முடித்திடணும். இது தான் V - Max game.

நூற்றாண்டு 1918-2019 100
அன்னை மணியம்மையார்

**அன்னை மணியம்மையார் பிறந்தநாள் - நூற்றாண்டில் "உடைப்போம் சமையலறைகளை!"**

# Kitchen # DEMOLISH Vedic Tradition's



















காட்டாறு
தொடர்புக்கு:
76676 79363
98940 69973
99427 38950

Owner and Publisher by : S.Vijayaragavan # 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001 Kaattaaru2014@gmail.com